# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 298 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 03, திங்கட்கிழமை 19.09.2016

## தரம் 11 விஞ்ஞான பாடத்துக்கு ஈ — ரெக்ஸ் புக்

கொழும்பு, செப். 19

அடுத்த ஆண்டு தரம் 11 இற்குரிய விஞ்ஞான பாடத்துக்கு அசையும் படங்களைக் கொண்ட மின் உரைப் புத்தகம் (ஈ - ரெக்ஸ் புக்) வழங்க கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அச்சுப் புத்தகங்களுக்கு மேலதிகமாக அடர் தகடு (சி.டி), மின் உரைப் புத்தகமும் மாணவரின் கைக்கு வழங்கப்படவுள்ளது.

மின் உரைப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு 10 க்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்தது.

முதற் கட்டமாக தரம் 11 இல் அறிமுகம் செய்த பின்னர், ஏனைய வகுப்புக்களுக்கும் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)



ஜனவரி 8 ஐ மறந்திட்டார் போல...

## பிரபாகரனின் அ.அட்டையை நினைவுப் பொருளாகப் பேணும் இராணுவ அதிகாரி




கொழும்பு, செப். 19

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அடையாள அட்டையை நினைவுப் பொருளாக எடுத்து வைத்தி

>> 23ஆம் பக்கம்



## கிளிநொச்சியிலும் திலீபனுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, செப். 19

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தன்னையே ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 29ஆவது

>> 23ஆம் பக்கம்

## தீயில் எரிந்த கடைகளுக்கு இழப்பீடு வேண்டும்

கிளிநொச்சியில் தீ இடரினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கோரும் பிரேரணை, வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் முன்வைக்கப்படும் என்று வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (விரிவு : பக்.08)

# புதிய அரசமைப்பை பொதுவாக்கெடுப்பில் தோற்கடிப்போம்

## சவால் விடுகிறது மகிந்த அணி

கொழும்பு, செப்ரெம்பர் 19

புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடத்தும் பொதுவாக்கெடுப்பை நாம் தோற்கடிப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

வென்னப்புவ கிரிமிட்டியான பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும்

>> 23ஆம் பக்கம்

## எங்கள் கோரிக்கைகளையும் கூட்டமைப்பு செவிமடுக்கட்டும்

### எம்.பிக்களிடம் நேரில் வலியுறுத்தினர் காணாமற்போனோரின் உறவினர்கள்

முல்லைத்தீவு. செப். 19

இனிவரும் காலங்களிலாவது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு அரசிடம் பரிந்துரைகளை முன்வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வலியுறுத்தினர் முல்லைத்தீவு மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள்.

போரின் போதும் அதற்குப் பின்னரும் கைதுசெய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சரணடைந்த நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கம்கோரும் இரண்டாவது சந்திப்பு நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் முல்லைத்தீவு நகரில் உள்ள வீரகத்திப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில்

>> 23ஆம் பக்கம்

## காலையிலும் இரவிலும் கடன் வசூலிக்க முடியாது

### நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி தடா

கிளிநொச்சி, செப். 19

வடக்கு மாகாணத்தில் செயற்படும் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள், காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையிலேயே நிதி நடவடிக்கைக்காக வாடிக்கையாளரைத் தேடிச் செல்ல முடியும். இந்த நேரத்துக்கு முன்னரோ பின்னரோ செல்ல முடியாது.

இவ்வாறு நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களுக்கு கடுமையான அறிவுறுத்தல் பிறப்பித்தது இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்தியக் கிளை.

வடபகுதியில் செயற்படும் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களின் கிளை முகாமையாளர்களுக்கும், இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்தியக் கிளையினருக்குமான சந்திப்பு, கிளை முகாமையாளர் பி.சிவதீபன் தலைமையில் அண்மையில்

>> 23ஆம் பக்கம்

## கொடுத்த பணத்தையே செலவிடாத வடக்கு உள்ளூராட்சி மன்றங்கள்

### அடுத்த கட்டக் கொடுப்பனவை நிறுத்தியது கொழும்பு அரசு

யாழ்ப்பாணம், செப். 19

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தில் கொழும்பு அரசினால் வழங்கப்பட்ட நிதி, வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களினால் செலவு செய்யப்படவில்லை. இதனால் அடுத்த கட்டக் கொடுப்பனவுகள் கொழும்பு அரசினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டும் நடவடிக்கைக்காக கொழும்பு அரசினால் மாதத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் ஒதுக்கப்படுகின்றது.

>> 24ஆம் பக்கம்

## வன்னியில் வட்டி வீதத்தைக் குறைக்க கிளி. மாவட்டச் செயலர் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 19

நிதி வழங்கும் நிறுவனங்களால் அறவிடப்படும் வட்டி வீதம், போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், அனுமதிக்கப்பட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நிதி நடவடிக்கைக்காக செல்லும் நிதி நிறுவனங்களில்

>> 23ஆம் பக்கம்

## மக்கள் போராட்டத்தினால் புஸல்லாவையில் பதற்றம்

### தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞன் உயிரிழந்ததை அடுத்துக் கொந்தளிப்பு

கொழும்பு, செப். 19

புஸல்லாவை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடராஜா ரவிச்சந்திரன் (வயது-28) என்ற தமிழ் இளைஞர் மர்மமான முறையில் உயிரிழந்ததையடுத்து, புஸல்லாவைப் பகுதியில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை உருவானது. மக்கள் வீதிகளில் இறங்கி ரயர்களை எரித்து போக்குவரத்தை முடக்கினர். இதனால் குழப்பமான நிலைமை புஸல்லாவைப் பிரதேசத்தில்

>> 23ஆம் பக்கம்



## பறித்து வைத்துள்ள காணிகளை பொலிஸார் விடுவிக்கவேண்டும்

### அமைச்சர் சாகலவிடம் நேற்று வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 19

காங்கேசன்துறையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவிக்க வேண்டும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சரிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நேற்றுக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய, வடக்கு

>> 25ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊசி ஏற்றப்பட்ட விவகாரம்

## வடக்கில் 95 போராளிகள் சோதனையில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், செப். 19

முன்னாள் போராளிகளுக்கு நடத்தப்பட்ட மூன்றாம் கட்ட மருத்துவ ஆலோசனையில் 22 பேர் பங்கேற்றனர். இதுவரையில் 95 முன்னாள் போராளிகள் மருத்துவ ஆலோசனை பெற்றுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி நடத்தப்பட்ட மூன்றாம் கட்ட மருத்துவ ஆலோசனையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 14 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஒருவருமாக 22 பேர் பங்கேற்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வின் போது ஊசி ஏற்றப்பட்டதாக, ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு போராளிகளுக்கான மருத்துவ ஆலோசனையை ஆரம்பித்தது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் இந்த மருத்துவ ஆலோசனை ஒவ்வொரு கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2ஆம் திகதி நடைபெற்ற முதல் கட்ட மருத்துவப் பரிசோதனையில் 26 பேரும், 9ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் கட்ட மருத்துவப் பரிசோதனையில் 47 பேரும் பங்கேற்றிருந்தனர். (வ-5)

## பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உதவிட சகலரும் முன்வாருங்கள்

### முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கோரிக்கை

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கிளிநொச்சி பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும். அதன் மூலம் பாதிப்படைந்த வர்த்தகர்களுக்கான எதிர்காலத்தை உறுதிப்படுத்தலாம்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி பொதுச்சந்தை தீயில் எரிந்து நாசமானது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீவிபத்தினால் பாதிக்கப்பட்டோரின் நிலை மிகுந்த மனவேதனையும் வருத்தத்தையும் அளிக்கிறது. போரின் பாதிப்பிலிருந்து இன்னும் மீளமுடியாத நிலையில் இருக்கும் இவர்களின் வாழ்வாதார உயிர்நாடியான இந்த வர்த்தக நிலையங்கள் தீயில் சிக்கி எரிந்தமை துரதிஷ்டமே. இந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் வாழ்க்கை நிலைமையை நான் நன்கறிந்தவன். இவர்கள் அனைவரும் மிக நலிந்த பொருளாதார நிலையை உடையவர்கள் என்பதால், கடன்பட்டே, தமது வணிக நடவடிக்கையை மேற்கொண்டு வந்தனர்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்தத் தீ விபத்து இவர்களை மேலும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியுள்ளது. எனவே இனி வரும் காலத்திலாவது, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால், இந்தச் கிளிநொச்சிப் பொதுச் சந்தையை நிர்மாணிப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும். அதன் மூலம் இந்த வர்த்தகர்களுக்கான எதிர்காலத்தை உறுதிப்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-21,35)

# தொலைபேசி ஊடாக தமிழில் பொலிஸாரிடம் முறைப்பாடு வடக்கு முழுவதும் விரிவடைந்தது

யாழ்ப்பாணம், செப். 19

தமிழ் மொழியில் அவசர முறைப்பாடு தகவல்கள் தெரிவிப்பதற்கு பொலிஸாரால் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் வடக்கு மாகாணம் முழுவதிற்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

0766224949 மற்றும் 0766226363 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக 24 மணி நேரமும் தமிழ் மொழியில் முறைப்பாடுகள் - தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த 5 மாதங்களிற்கு முன்னர் குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்திருந்தன. அவை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சங்குவேலிப் பகுதியில் ஓர் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. அது தொடர்பில் தேடும்படலம் இடம்பெறுகின்றது. கூலிக்குக் கொலை செய்யும் கும்பலாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது என்றார் பூஜித்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், யாழ். குடாநாட்டில் தமிழ் பொலிஸார் குறைவாக இருக்கின்றனர். பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ்மா அதிபர், தமிழ்ப் பொலிஸார் 240 பேர் பயிற்சி பெறுகின்றனர். அவர்களின் பயிற்சி நிறைவுற்றதும் வடக்கின் பொலிஸ் நிலையங்களிற்கு நியமிக்கப்பட்டால், இதற்கு முழுமையான தீர்வு ஏற்படும். அதுவரை மாற்று ஏற்பாடாக நேற்று முதல் சகல பொலிஸ் நிலையத்திலும் தொலைபேசி மூலம் வாக்கு மூலம் பதியும் ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பொலிஸ் நிலையத்தில் உங்களிற்கான தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தி வழங்கப்படும். மறு முனையில் தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் அதனை பதிவு செய்து உடனடியாக தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் நீங்கள் நிற்கும் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைப்பார். அதனை உரியவர் வாசித்து உறுதிப்படுத்தி ஒப்பமிட்டு வழங்கலாம். குடாநாட்டில் தற்போது 148 தமிழ் தெரிந்த பொலிஸார் கடமையாற்றுகின்றனர் - என்றார்.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கள் செயலிழந்துள்ளன. கிராம மற்றும் பிரதேச மட்டக் குழுக்கள் ஒழுங்காகச் செயற்படுவதில்லை. இதனை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்குள் மீளமைத்துக் கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களில் கடல்மூலமாக எடுத்து வரப்பட்ட 650 கிலோ கிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தனர்.

கூட்டத்தின் முடிவில் கருத்து வெளியிட்ட அமைச்சர் சாகல, பொலிஸாரில் 25 சதவீதமானவர்கள் தமிழ் பேசும் நிலை இன்னும் 4 ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும் - என்றார். (வ-5-101)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 19

வடமாகாண வருமானப் பரிசோதகர் தொழிற் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறும். (ற-115)

## போர்கறுப்பு வயல்களில் இம்முறை நெற்செய்கை

யாழ்ப்பாணம், செப்.19

வடமராட்சி கிழக்கின் போர்கறுப்பு பகுதியில் விடுவிக்கப்பட்ட எழுநூறு ஏக்கர் வயல் நிலங்களில் இந்த முறை காலபோக நெற்செய்கைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

போர்கறுப்பு பகுதியில் விடுவிக்கப்பட்ட நானூறு ஏக்கர் வயல் நிலங்கள் துப்புரவாக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த வயல் நிலங்களில் இந்தமுறை கால போக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொள்ளவுள்ளனர் .

மேலும், முன்னூறு ஏக்கர் வயல் நிலங்களைப் பிரதேச செயலகம் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் துப்புரவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. துப்புரவுப் பணிகளை விரைவாக மேற்கொண்டு விவசாயிகள் இந்தமுறை காலபோக நெற்செய்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர். (வ-17)

## நகர சபையாகத் தரமுயர்ந்ததால்தான் கிளிநொச்சிக்கு தீயணைப்பு வாகனம்

கிளிநொச்சி, செப். 19

கரைச்சிப் பிரதேச சபைக்கு தீயணைப்பு வாகனம் வழங்குவதற்கு சிறப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கொழும்பு அரசின் உள்ளூராட்சி அமைச்சுக்கு ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டதாக, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தீயணைப்பு வாகனம், மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு மாத்திரமே வழங்கப்படும். இருப்பினும் கிளிநொச்சி மாவட்டம் தனியானதொரு மாவட்டம் என்ற அடிப்படையில் தீயணைப்பு வாகனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டதாக மேற்படி வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

கிளிநொச்சி நகரின் வர்த்தகத் தொகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட திடீர் தீ இடரினால் 220 மில்லியன் ரூபா வரையில் இழப்பு ஏற்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் தீயணைப்பு வாகனம் இல்லாமையினாலேயே, பெருமளவு பாதிப்பு ஏற்பட்டதாக பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

“கொழும்பு அரசின் உள்ளூராட்சி அமைச்சினால், ஏற்கனவே தீயணைப்பு வாகனங்கள் உள்ள இடங்களுக்கு எவ்வாறான மேலதிக வசதிகள் தேவை என்று மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கும் தீயணைப்பு வாகனம் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது.

தீயணைப்பு வாகனம் மாநகரசபை மற்றும் நகர சபைகளுக்கு மாத்திரமே வழங்கப்படும். அங்கு மாத்திரமே அட்டவணைப்படுத்தப்பட்ட ஆளணி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைகளுக்கு ஆளணி அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் தீயணைப்பு வாகனம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியும், ஏனைய மாவட்டங்களிலிருந்து தீயணைப்பு வாகனத்தை அங்கு கொண்டு செல்வதற்கு தூரம் அதிகம் என்பதைக் குறிப்பிட்டும், தீயணைப்பு வாகனம் கரைச்சிப் பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது’ இவ்வாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கோரிக்கை தொடர்பில் கொழும்பு உள்ளூராட்சி அமைச்சில் நேரடியாகவும் வினவப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். எல்லை மீள் நிர்ணயம் முடிவுற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர், கரைச்சிப் பிரதேச சபையை நகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பு உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்ததாகவும், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## வடமராட்சி கிழக்கில் முழுவீச்சில் இடம்பெறும் வீடுகள் கட்டும் பணி

யாழ்ப்பாணம், செப்.19

வடமராட்சி கிழக்கில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தின் கட்டுமானப்பணிகள் யாவும் இந்த மாதத்திற்குள் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் தற்போது 312 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகளுக்குப் பயனாளிகளுக்கு நான்காம் கட்ட கொடுப்பனவுகள் வழங்கும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன.

இந்த வீட்டுதிட்டத்தில் இதுவரைக்கும் முப்பது வரையிலான வீடுகளின் நிர்மாணப் பணிகள் முடிவுற்றுள்ளன. வீடுகளின் கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்துமாறு பிரதேச செயலகம் கேட்டுள்ளது.


குறிப்பாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக குறித்த வீடுகளில் கட்டுமானப் பணிகளை நிறைவுறுத்துமாறும் அதிகாரிகளால் கேட்கப்பட்டது. (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறான உடைகள் அணிந்து பெண்கள் கல்லூரிக்கு வரவேண்டும்

## கொழும்பில் பிரபல பாடசாலைகளில் சுவரொட்டிகள்

கொழும்பு, செப். 19



பெண்கள் எவ்வாறான உடைகள் அணிந்து கல்லூரிக்கு வருகை தர வேண்டும் என்பதைத் தெளிவூட்டும் வகையில் கல்லூரியின் வரவேற்பு வாசலில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இவை பாடசாலை மாணவர்களினாலேயே ஒட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள பிரபலமான இரண்டு ஆண் கள் பாடசாலையிலேயே மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

பாடசாலைக்கு வரும் பெண் ஆசிரியர்கள் மற்றும் தாய்மார் இவ்வாறான உடைகளையே அணிய வேண்டும் என்று சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வாசகங்கள் எதுவும் எழுதப்படாமல், தனியே பெண்களின் ஒரு சில உடைகளுக்கு சரி அடையாளமும், சில உடைகளுக்கு பிழை அடையாளமும் போடப்பட்டுள்ளன.

இந்த சுவரொட்டி விடயம் சமூக வலைத் தளங் களில் பெரும் விவாதத்தை உருவாக்கியுள்ளது. பெண்களின் சுதந்திரத்தில் தலையீடு செய்வதாக, சமூக வலைத் தளங்களில் பதிவிட் டுள்ள பெண்கள் தெரிவித்துள்ளனர். (வ-5)

# சீருடைக் கூப்பன்கள் நவம்பரில் விநியோகம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 19

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைக் கூப்பன்கள் நவம்பர் மாதம் முதலாம் வாரத்திலிருந்து விநியோகிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலர் திஸ்ஸ ஹேவாவிதான தெரிவித்தார்.

கடந்த வருடத்தைப் போன்று சீருடைக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பெற்றோர்கள் பாடசாலைக்குச் செல்லத் தேவையில்லை. வகுப்பாசிரியர் மாணவரின் கையொப்பத்துடன் அதனை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ள கூப்பன்களில் மாகாணம், கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை என்பனவற்றைக் கண்டறியும் வகையில் இரகசிய இலக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (வ-5)

**வேலையாள் தேவை**

வல்வெட்டித்துறையில் இயங்கும் கிளினிக் நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

T.P: 077 9139990

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
18.09.2016 | 2032 | ஊதா
22 32 40 51
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 20,00,000 /-

Galaxy Star
வெற்றி வாரம் 093 | திகதி 18.09.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 22 39 42 60
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,932,480/-

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது**

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt) Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி,திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம், போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர் களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:-

384A, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944

கொழும்பு முகவரி:
19,1/1, கொத்தலாவல மாவத்த,
பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208

# சுவாதி படுகொலைச் சந்தேகநபர் ராம்குமார் சிறைச்சாலையில் சாவு

சென்னை, செப். 19

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பரபரப்பாக பேசப்பட்ட சுவாதி கொலை வழக்கில், கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராம்குமார் சிறையில் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கும் தமிழக அரசியல் தலைவர்கள் சிலர், அது தொடர்பில் சிபிஐ விசாரணை வேண்டும் என்று கோரியுள்ளனர்.

மின்சாரம் பாய்ந்த கம்பியைக் கடித்து தற்கொலைக்கு முயன்றதால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக இராயப்பேட்டை அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் பாய்ந்த கம்பியைக் கடித்து ராம்குமார் தற்கொலைக்கு முயன்றுள்ளார். விசாரணைக் கைதிகள் பிரிவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரை பொலிஸார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

ஆனால் கொண்டுசெல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்ததாக சிறைத்துறையினர் தெரிவித்துள்ளனர். நேற்று மாலை 4.45 மணிக்கு இந்த சம்பவம் நிகழ்ந்ததாக சிறைத்துறையினர் விளக்கம் அளித்துள்ளனர்.



கடந்த ஜுன் மாதம் 24 ஆம் திகதி, சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் சூளைமேட்டைச் சேர்ந்த மென்பொருள்பொறியியலாளர்சுவாதிபடுகொலை செய்யப்பட்டது தமிழகத்தை உலுக்கியது. இதனையடுத்து விசாரணை தகவல்களின் அடிப்படையில் ராம்குமாரை நெல்லை மாவட்டத்தில் பொலிஸார் கைது செய்தனர். அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டு, சுவாதி கொலை வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் ராம்குமார் தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருப்பினும் ராம்குமாரின் தந்தை இதனைத் தற்கொலை என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இது திட்டமிட்ட கொலை என்று சாடியுள்ளார். ராம்குமார் சாவில் சந்தேகம் இருப்பதால் சிபிஐ விசாரணை தேவை என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்கள் கோரியுள்ளனர். (வ-5)

# நியூயோர்க் பயணமானார் மைத்திரி

ஐ.நா. பொதுச் சபையின் 71ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க் நகருக்கு நேற்றுப் புறப்பட்டார்.

ஐ.நா. பொதுச் சபையின் 71ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகி 26ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறு கிறது.

இந்தக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் 21ஆம் திகதி உரையாற்றுவார். ஐ.நா பொதுச்சபையில் மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ள இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.ஜனாதிபதி மைத்திரியுடன், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர்கள் கயந்த கருணாதிலக, மகிந்த சமரசிங்க, பைசர் முஸ்தபா உள்ளிட்டோரும் நியூயோர்க் செல்கின்றனர். (வ-5)

**காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான அறிவித்தல்**

காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய ஊழியர்களில் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகள் இன்று வரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உரும்பிராயிலுள்ள காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன காரியாலயத்துடன் 30.09.2016 இற்கு முன்னதாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்.
இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
011 244 0201, 021 223 0828, 021 321 5341,
077 110 6445, 077 112 1690,

**கண்ணீர் அஞ்சலி**



எமது சாவகச்சேரிக் கிளையில்
கடமையாற்றும் மகேந்திரன் நிலக்ஷனின்
அன்புத்தந்தை

**சிவக்கொழுந்து மகேந்திரன்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து
துயரடைவதுடன்,
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆன்மா சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவர் மற்றும்
பணியாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கான மாதாந்தச் சம்பளத்தை உயர்த்துக

## வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.19

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தச் சம்பளம் போதாதுள்ளது. அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியை மாதாந்தம் வழங்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்தது.

தொழிற்சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் தலைமையிலான குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை வடமாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசனை ஆணைக்குழு அலுவலகத்தில் சந்தித்தது.

வடக்கு மாகாணக் கூட்டுறவுப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறியது. இது சம்பந்தமான ஆறு அம்சக் கோரிக்கையை முன் வைத்து மனு ஒன்றையும் ஊழியர் தொழிற்சங்கம் செயலாளரிடம் கையளித்தது. மனுவில் குறிப்பிடப்பட்டதாவது:

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படியை மாதாந்தம் சம்பளக் கொடுப் பனவுடன் சேர்த்து வழங்க வேண்டும். அநேகமான சங்கங்கள் வருடாந்த கணக்காய்வில் இலாபம் பெற்றுக் கொண்டால் அந்த மாதத்துக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

தனியார் துறை ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுப் பணி யாளர்களுக்கு மாதாந்தம் இலாபத்தில் செயற்பட்டால் மட்டும் 15 வீத படி வழங்கும் நடைமுறையை மாற்றி அந் தக் கொடுப்பனவு மாதாந்தம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர் ஒருவர் தொடர்ச்சியாக 25 வருடங்கள் ஒரே பதவியில் பணியாற்றினால் ஆயிரம் ரூபா வழங்கும் விசேட படி மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சங்கம் ஒன்றில் தொடர்ச்சியாக 15 வருடங்கள் பணியாற்றும் சகல பணியாளர்களுக்கும் இந்த ஆயிரம் ரூபா விசேட படி கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

கூட்டுறவு நிறுவனத்தின் கீழ் செயற்பட்டுவரும் தொழிற்சாலைகள், உற்பத்தி நிலையங்கள், சிறு கைத்தொழில் நிலையங்கள், எரிபொருள் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கு எதிர் காலத்தில் நோய்த் தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

இந்த நிலையங்கள் ஊடாக நேர காலத்தையும் பார்க்காது சங்கங்களின் வளர்ச்சிக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் இந்தப் பணியாளர்களுக்கு விசேட ஊக்குவிப்புக்கள், விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உணவுக்கான கொடுப்பனவு, மருத்துவ செலவுக் கொடுப்பனவுகள் யாவும் பெற்றுக் கொடுக்க ஆவன மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர் ஒருவர் வருடத்தில் 21 நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்புக்கு உரித்துடையவர். பணியாளர் ஒருவர் தொடர்ச்சியாக 21 நாள்களுக்கு மேல் விடுப்பு எடுத்தால் அவரின் விடு முறை நாள் கழிப்பு சனி அரைநாள். ஞாயிறு விடுமுறை போன்றவற்றையும் விடுப்புக்குச் சேர்த்து சில சங்கங்கள் கணக்கிட்டு பணியாளர் ஒருவரின் மாதச் சம்பளத்தில் கழிக்கும் செயலை நிறுத்த வேண்டும்.

புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெண் பணியாளர்களுக்கான மாதாந்த சம்பளம் அதிகரிக்க வேண்டும். இந்த சங்கங்கள் இலாபத்தில் செயற்பட்டும் வருகின்றன.

பணியாளர்கள் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வருகின்ற போதிலும் சம்பள உயர்ச்சி இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் – என்று குறிப்பிடப்பட்டி ருந்தது.

கூட்டுறவு ஊழியர் தொழில் சங்கத்தின் மேற்கண்ட கோரிக் கைகள் தொடர்பாக ஆணைக்குழு விரைவில் கூடி, உரிய முடிவெடுக்கும் என்று ஆணைக் குழுவின் செயலாளர் தெரிவித்தார். (ற-17)


## பொது அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பூநகரி ப.நோ.கூ.சங்கம் பதிவு இல. (PA/48) உடைய எமது சங்கத்தில் பணிபுரிந்து பணி விலகிய பணியாளர்கள் சங்கத்தில் பிணைப்பணம் செலுத்தியிருப்பின் தங்களிடமுள்ள மூல ஆவணங்களை 05.10.2016 ஆம் திகதிக்கு முன்னதாக பூநகரி வாடியடியில் அமைந்துள்ள தலைமைக்காரியாலயத்தில் பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**து.இரத்தினசிங்கம்**
**தலைவர் 077 246 3027**
**பூநகரி ப.நோ.கூ. சங்கம் வாடியடி, பூநகரி.** (80766)(2.18)



## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) சுன்னாகம்

கீழ்க்குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்காளர்: குறி.இல. 104/09**

சம்பள அளவுத்திட்டம் - 15660-19560 (13/2015 இன்படி)

190X 10 -200X10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட உள்ளக கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டுப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

**வயது:** விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

சங்கப்பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாள்களில் (காலை 9.00 - மாலை 4.30) ரூபா 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.**

தொ.பே. 021 321 2380

விண்ணப்ப முடிவுதிகதி : 02.10.2016

சி.குமரவேல்
தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

15.09.2016 (சி.28220) (13.18)


# ஊழல்

## மோசடியாளர்களின் மீது சட்டத்தை நடைமுறைப்படுத்துக

கொழும்பு, செப். 19

நல்லாட்சி அரசால் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்துக.

இவ்வாறு வலியுறுத்தி நீதியான சமூகத்துக்கான அமைப்பு உட்பட பல சிவில் அமைப்புக்கள் இணைந்து ஜனாதிபதியிடம் மனு கையளித்துள்ளன.

தற்பொழுது இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகள் காத்திரமானதாக இல்லை. அவற்றை துரிதப்படுத்த விசேட நீதிமன்றமொன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஐந்து பிரதான ஆலோசனைகள் அந்த மனுவில் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடிய பின்னர் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். (ற-4)

## அனுமதி அட்டையில் தமிழ்மொழியில் பிழை

யாழ்ப்பாணம், செப். 19

சமுர்த்தி உத்தியோகத்தர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கு நேற்று நாடு முழுவதும் இடம்பெற்ற போட்டிப் பரீட்சைக்கு வழங்கப்பட்ட அனுமதி அட்டையில் தமிழ்மொழியில் பல எழுத்துப் பிழைகள் காணப்பட்டன என்று பரீட்சார்த்திகள் தெரிவித்தனர்.

அரச கருமமொழியாக தமிழ் நடைமுறையில் உள்ளதாக நல்லாட்சி அரசு தெரிவித்து வரும் நிலையில் பரீட்சைகள் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அனுமதி அட்டையில் தமிழ்மொழி பயன்பாடு தவறுகளுடன் இருந்தமை தொடர்பில் அவர்கள் கவலை வெளியிட்டனர். (வ)


**சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும் கற்றுத்தரப்படும்**

ஆங்கிலம் பேச, எழுத மிகவும் இலகுவான முறையில் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். நேரம் காலை 9மணி முதல் மாலை 6 மணி வரையும் கட்டணம் ரூபா 500/= (மணித்தியாலத்திற்கு) மிகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் சி.சிவக்கொழுந்து.

தொடர்பு: 077 729 6134 - வவுனியா



**வேலையாள்கள் தேவை**

ரயர் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்புபவர்கள் உடன் தேவை.

077 714 8884, 077 651 1693, 021 222 4523



**நெல்பாம் (Nel Farm) No.01 முட்டைக் குஞ்சு விநியோகம் 19.09.2016 திங்கட் கிழமை மேலதிக விவரங்களுக்கு.**
**Acca Farm, வட்டுக்கோட்டை சங்கரத்தை. T.P - 077 3086721**



**HOME VISIT CLASSES**
ACCOUNTING - ENGLISH/TAMIL
O/L, A/L
ENGLISH LANG - ANY GRADE (J.4722) (16,17,18)
077 331 6402


## சிகிச்சை பயனின்றி சிப்பாய் சாவு

மரத்திலிருந்து வீழ்ந்து வவுனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற கடற்படைச் சிப்பாய் 10 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

ஹெப்பிட்டிக் கொலாவபகுதியைச் சேர்ந்த மகேஸ் பிரியரத்தின (வயது – 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

தனது வளவில் உள்ள மரத்தில் ஏறி கிளைகளை அப்புறப்படுத்தும் முயற்சிலீடுபட்டபோது மரத்திலிருந்து கீழே விழுந்துள்ளார். தலையில் பலத்த காயமடைந்த அவர் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ற-21)


## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



**Spoken English**
Veta Fluency Diploma

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, FRI 8.30 a.m. | Tue, Thu 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m. | Mon,Fri 11.00 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Sat, Sun 10.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 10.00 a.m. | Mon, Fri 9.00 a.m. | Sat, Sun 10.00 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | | | | |

**A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்**

DMI COMPUTER EDUCATION

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
**IELTS**
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI COMPUTER EDUCATION**

| No.113, ... வீதி, யாழ்ப்பாணம் | M.M.V. வீதி, நெல்லியடி | No. 174, கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி | No. 130, K.K.S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் | No.19,A9 வீதி, ... (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் நிலையங்களில் தமிழில் அறிவிப்பு அவசியம்

## அமைச்சர் மனோ வலியுறுத்து

கொழும்பு, செப். 19

நாட்டில் 350 ரயில் நிலையங்கள் இருக்கின்றன. அவை அனைத்திலும் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் அறிவிப்புக்களைச் செய்தே ஆக வேண்டும். இது சட்டம். அதனை மீறும் ரயில் நிலைய அதிபர்கள் நீதிமன்றில் முற்படவேண்டி வரும்.

இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அமைச்சின் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட ரயில் நிலைய அறிவிப்பாளர்களுக்கான தமிழ் மொழி அறிவிப்புப் பயிற்சிச் செயலமர்வு ஆணைக்குழு கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. ஆணைக்குழுத்தலைவர்தயாஎதிரிசிங்க, அரசகரும மொழிகள் ஆணையாளர், ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வை ஆரம்பித்து உரையாற்றியபோதே அமைச்சர் மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:


முதற்கட்டமாக 40 ரயில் நிலையங்களைச் சார்ந்த அறிவிப்பாளர்களுக்கு தமிழ் மொழி அறிவிப்புப் பயிற்சி வழங்கும் நான்கு நாள் செயலமர்வை ஆரம்பித்துள்ளோம். மீதமுள்ள 310 ரயில் நிலைய அறிவிப்பாளர்களுக்கும் கட்டம் கட்டமாக இந்தப் பயிற்சி விரைவில் வழங்கப்படும். அதன்பிறகு ரயில் நிலையங்களில் தமிழ் மொழி அறிவிப்பு இல்லை என்று எனக்கு முறைப்பாடு வந்தால் குறிப்பிட்ட ரயில் நிலைய அதிபர் நீதிமன்றம் செல்ல வேண்டி வரும். இவை கடந்த காலங்களில் செய்யப்படாதவை. இப்போது நான் இவற்றை செய்கிறேன். மைதானத்தில் நான் இன்னமும் ஒரு விளையாட்டுப் பிள்ளைதான். ஆனால் அரசியலில், அமைச்சுப் பொறுப்பில் நான் விளையாட வரவில்லை. இங்கே என்னுடன் விளையாட வேண்டாம்.

இந்த நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு தமிழ் மொழி பேசும் மக்களின் இதயங்களை வெல்ல வேண்டும். அதற்குக் குறுக்கு வழி கிடையாது. அதற்கான ஒரு முன்னோடித் தேவைதான் இந்தப் பயிற்சி. இதன்மூலம் நீங்கள் தமிழில் உங்கள் ரயில் நிலையங்களில் அறிவிப்புகளைச் செய்யும்போது தமிழ் மக்கள் மத்தியில் இது எங்கள் நாடு என்ற உணர்வு ஏற்படும். வடக்கு–கிழக்கில் சிங்களத்தில் அறிவிப்புகள் செய்தால் சிங்கள மக்களுக்கு இது எங்கள் நாடு என்ற உணர்வு ஏற்படும். இந்த தாய்மொழி உணர்வு முக்கியமானது.

தமிழில் அறிவிப்பு செய்யப்பட்டாலோ தேசிய மொழிப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலோ தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்ந்து விடும் என்று நான் சொல்ல மாட்டேன். தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. தேசிய மொழிப்பிரச்சினை தீர்வு என்பது தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு முன்னோடி. இது ஒரு ஆரம்பம் தான். இந்த ஆரம்பம்கூட கடந்த காலங்களில் முறையாக செய்யப்படவில்லை. இப்போது இதைச் செய்ய நான் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன். வெறும் சட்டம் என்று மட்டும் பார்க்காமல், அதற்கு அப்பால் சென்று ஒரு தேசியக் கடமையாகக் கருதி இதை செய்யுங்கள். தமிழ் மொழி பேசும் மக்களின் இதயங்களை வெல்லும் எங்கள் தேசிய செயற்றிட்ட நகர்வில் நீங்களும் ஒரு பங்காளி என நினையுங்கள் –என்றார். (ற–4)

# நல்லாட்சி அரசு எம்மைவிட அதிக கடன் பெற்றுள்ளது

## மகிந்த கூறுகின்றார்



கொழும்பு, செப். 19

நல்லாட்சி அரசு எம்மைவிட அதிகமாகக் கடன் பெற்றுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிதுல்பவ்வ விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு கடன் பெற்றபோதும் நாட்டில் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. எமது ஆட்சியின் போது முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களையே இன்று நல்லாட்சி அரசு திறந்து வைக்கிறது. தற்போதைய அரசு மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் நாட்டு மக்களிடம் வினவ வேண்டும் – என்றார். (ற–4)




**சேவைநலன் பாராட்டு**

**திருமதி L.M.J ரஞ்சிதம்**

(தரம் I)

யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் கடந்த 38 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிச் சகோதரியாகவும் அரும் பணியாற்றி இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலத்தில் எல்லா சிறப்புடனும் தேகாரோக்கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச்சங்கம் – யாழ்ப்பாணம்.



புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. ஆலயங்களுக்குச் சென்று அடியார்கள் எள் எண்ணைய்ச் சுட்டி எரித்துச் சனீஸ்வரனை வழிபட்டனர். ஆலய வாயில்களில் விற்கப்பட்ட சுட்டிகளை அடியார்கள் கொள்வனவு செய்தனர். புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் சனீஸ் வரனை வேண்டி விரதம் இருப்பது வழமை. (ற–ரி7)

# பயணியுடன் வந்த ஓட்டோவில் ஏறிய மூவர் கஞ்சா வழக்கில்

## கஞ்சா கொண்டு வந்தவரும் சாரதியும் தப்பியோட்டம்

தென்மராட்சி, செப்.19

வீதியில் பயணியுடன் வந்த ஓட் டோவில் ஏறிப் பயணித்த மூவர், கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஓட்டோவில் ஏற்கனவே பயணித்தவரும், ஓட்டோச் சாரதியும் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களைச் சரீரப் பிணையில் செல்ல நீதிபதிஅனுமதித்தார்.கடந்த வியாழக்கிழமை தனங்களப்பில் கட்டட வேலைகள் முடிந்து, வீடு திரும்பிய தனங்களப்பு, நுணாவில்மேற்கு, சாவ கச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கால் நடையாக சாவகச் சேரி நோக்கி நடந்து வந்துள்ளனர். அப் போது ஓட்டோ ஒன்று வந்தது. அதில் சாரதியும் மற்றொரு வரும் பயணித் துள்ளனர். நடந்து வந்தவர்கள் அந்த ஓட் டோவில்ஏறி சாவகச்சேரிநோக்கி பயணித் தனர். சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் நின்ற பொலிஸார் ஓட்டோவை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தனர்.

ஓட்டோ நிறுத்தப்பட்டதும் ஓட்டோவில் சாரதியுடன் வந்த நபர் கையில் வைத்திருந்த பொதியை எறிந்து விட்டு ஓடியுள்ளார். அவரை அழைத்து வருகின்றேன் என்று கூறி ஆவணங்களைக் கையளித்துவிட்டு ஓட்டோ சாரதியும் தப்பிவிட்டார். பொலிஸார் அங்கே காணப்பட்ட பொதியை பிரித்துப் பார்த்தபோது அதனுள் கஞ்சாவைக் கண்டுபிடித்தனர். குறித்த இளைஞர்களை விசாரித்தனர்.

தாம் வேலைக்குச்சென்று வருவதாகக் கூறிய போதிலும் அவர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். மூவரையும் விசாரித்த நீதிவான் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். தப்பியோடிய ஓட்டோ சாரதியையும் மற்றையவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற–4,9)

**25 வருட சேவைக்கான பாராட்டு**



11. 08.2016 அன்று யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையில் நடைபெற்ற 94 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டபோது

**திரு.ஆ.மகேந்திரன்** இடைக்குறிச்சி வரணி

அவர்களின் கௌரவிப்பு

**திருமதி வ.மதுமதி** (வடமாகாண கூ.அபிவிருத்தி ஆணையாளர்)

**திரு.பொ.மோகன்** (கூ. அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

**திருமதி செ.வேதவல்லி** (கூட்டுறவு சபையின் செயலாளர்)

அவர்களுடன் மேலும் பல பிரமுகர்கள் முன்னிலையில்

கௌரவ அமைச்சர்

**திரு. பொ.ஐங்கரநேசன்**

(வடமாகாண கூட்டுறவு மற்றும் விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன,சுற்றாடல் அமைச்சர்) அவர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட எமது நிறுவனத்தின் பணியாளர் சிறந்த தேக ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர் : பணிப்பாளர்கள், பணியாளர்கள், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி.

(c.26199)(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையை தாக்கி கொலை செய்த மகன் கைது

கொழும்பு, செப். 19
ஹாலிஎல, ருகதென்ன வத்தை பழைய பிரிவில் கூரிய ஆயுதத்தால் தாக்கி தந்தையைக் கொலை செய்த சந்தேகத்தில் 16 வயது மகன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மது போதையில் வந்த தந்தை, தாய் மீது தாக்குதல் மேற்கொண்டதால் கோபமடைந்த மகன், தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்படுகின்றது. 41 வயதானவரே உயிரிழந்துள்ளார். சந்தேகநபரான மகன் கொழும்பில் பணிபுரிகின்றார் என்றும் திருவிழா நிகழ்வில் கலந்துகொள்ள வீட்டுக்கு வந்திருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபரைக் கைதுசெய்த பொலிஸார், நீதிவான் மன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். (ற-4)

## வற் வரி சட்ட வரைவு தோற்கடிக்கப்படும் — கூட்டு எதிர்க்கட்சி

கொழும்பு, செப். 19
வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கு இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில், பிரத்தியேக வற் வரிச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி தோற்கடிக்கப்படும்.
இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.
அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ள புதிய வற் வரிச் சட்ட வரைவுக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதா? இல்லையா? என்ற தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சட்ட வரைவு முன்வைக்கப்பட்ட பின்பே கூட்டு எதிர்க் கட்சி தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-4)

## பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களை நியமிக்குமாறு பரிந்துரை

கொழும்பு, செப். 19
நாட்டிலுள்ள 9 மாகாணங்களுக்கும் பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களை நியமிக்க வேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக் குழு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு பரிந்துரைத்துள்ளது.
பெண் பொலிஸாரின் சேவையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களை நியமிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டார்.
பெண் பொலிஸாரின் பிரச்சினைகளை உயர் மட்டத்திலுள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு, பெண் பொலிஸார் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் அதற்கு தீர்வாகவே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக் குழுவின் செயலாளர் கூறியுள்ளார். (ற-4)

---

### ஒன்பதாம் ஆண்டு நினைவுகளில்

மண்ணில்
08 . 09 . 1954

விண்ணில்
01 . 09 . 2007



**சின்னத்துரை சிவபாதம்**
*(இலங்கை வங்கி வாடிக்கை சேவை முகாமையாளர்)*

திதி : சங்கடஹர சதுர்த்தி

ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
ஆறவில்லை எம் துயர்
உங்கள் நினைவுகள் தினம் தினம்
எம்மை வாட்டுது அப்பா!
நினைத்து நினைத்து ஏங்கும் எம்மனதில்
நிலையாக வாழ்கிறீர்கள் அப்பா!

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**
பொன்னம்பலம் வீதி, காரைநகர்.

---

### மூன்றாமாண்டு நினைவஞ்சலி

**சிவக்கொழுந்து சண்முகலிங்கம்**

தோற்றம் 02.10.1940
மறைவு 19.09.2013



ஆண்டுகள் மூன்று
ஓடி மறைந்தாலும்
ஆறுதில்லையே
எங்கள் துயரம் அப்பா !

இராஜவீதி,
கோப்பாய் தெற்கு.

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

### விண்ணக வாழ்வின் 16 ஆண்டுகள்

அமரர்
**அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**
(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



மண்ணில் 08.12.1948
விண்ணில் 19.09.2000

பாசத்தின் உறைவிடமாய்
எம்மை எல்லாம் அன்பினால் நனையவைத்து
இத்தரணியில் மாந்தர் போற்ற வாழ வைத்த எம் தந்தையே
உம் அன்பு, அரவணைப்பில் - எம்மைத் தாலாட்ட வேண்டிய நேரத்தில்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு விண்ணக மகிமை பெறச் சென்றீரோ
உம் நினைவில் 16 ஆண்டுகள் வாழ்கிறோம்
நீர் வாழ்ந்து காட்டிய வழியில் நாள்தோறும்

இல.02,
இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**குணலிங்கம் பாலசந்திரன்**
(பாலன்)

மலர்வு 18.07.1966
உதிர்வு 30.09.2015



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் ஆகிய எம் தெய்வமே
ஆண்டொன்று ஓடி மறையும் இந்நாளில்
அஞ்சலிக்கின்றோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக

ஏழாலை மத்தி,
காளிகோயிலடி. (செ/4685)(11.18.)

குடும்பத்தினர்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 04 . 1939

மறைவு
30 . 09 . 2015



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**சுப்பையா நடராசா**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
**திதி: பூர்வபக்ஷ திருதியை (19.09.2016)**

சேராத செல்வமெல்லாம் சேர்த்துவிட்டு
சேர்ந்திருக்க மறந்து நீங்கள் சென்றதெங்கே?
பாரினிலே பந்தங்கள் பலவிருக்கு - எம் செல்வமே
பக்கத்துணை நீங்கள் இன்றி பயனேது எமக்கு ....!!!
ஓராண்டு எமைப்பிரிந்து சென்றதனை
ஒரு பொழுதும் எமது மனம் ஏற்றதில்லை
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் எம்முடன் - நீங்கள்
வாழ்வதாகவே பாவனை செய்கின்றோம்....!!!
ஆண்டு ஒன்றில் ஒருகணம் ஏனும் உங்களை நாங்கள்
மாண்டதாக மறந்ததே இல்லை. ஆண்டுகள் எத்தனை இனி வரினும்
மீண்டும் மீண்டும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்

(ஜே-4056) (13.18)

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள்.

---

### ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராஜலிங்கம்
**கேமளன்** (மயூரன்)
(புடைவைக்கடை
உரிமையாளர் சாவகச்சேரி)
திதி: திருதியை (19.09.2016)



அன்னை மடியில்
14.08.1981

முருகன் பாதத்தில்
31.08.2007

பாவி யான் செய்த குற்றம் ஏதோ?
பாதியில் நீ பறித்ததேனோ?
வாடித் துடித்த எனக்கு
வடிவமைத்த விதியின் கோலம் இதுவோ?
என் குடும்பம் சிறந்திடவே உன்னடி பணிந்து நான்
சந்நிதி வீதியிலே காவடியாய் பறந்தேனே!
முள்ளுகள் தைத்த தழும்புகள் தான் மாறவில்லை
அதற்கிடையில் என்னுயிரை ஏன் இறைவா பறக்க வைத்தாய்
என் பிஞ்சுக் குழந்தைகளை
ஏங்க வைத்தாய் இறைவா!
அரக்கன் செய்த கொடுமையால்
என் குழந்தைகளை ஏன் ஏங்க வைத்தாய்?

(...13.18)

மயூரபதி,
83 1, டச்சு றோட்,
கண்டுவில் லேன், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஈழத் திருநாட்டின் ஒரேஒரு சனீஸ்வர ஆலயமாக விளங்கும் திருகோணமலை மடத்தடி சனீஸ்வர ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின், புரட்டாதி சனீஸ்வர விரத நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதீன கர்த்தா சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஓம குண்டலக் கிரியைகளை மேற்கொண்டார். சனீஸ்வர பகவானுக்கு அபிசேகம் இடம்பெற்றது.

## முதிரைக் குற்றிகளுடன் தப்பியோடிய லொறி தடம்புரண்டதால் சிக்கியது

தென்மராட்சி, செப். 19

லொறியில் 8 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளைக் கடத்திய சாரதி பொலிஸாரைக் கண்டு தப்பியோடியபோது வாகனம் தடம்புரண்டது. வாகனத்தையும் கைவிட்டுச் சென்ற சாரதி, பின்னர் பொலிஸில் சரணடைந்தார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த புதன்கிழமை கொடிகாமம் பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்ட போது ஏ- 9 வீதியில் வந்த லொறியை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தனர். சாரதி லொறியை நிறுத்தவில்லை. அதனைப் பொலிஸார் துரத்திச் சென்றனர். பொலிஸாருக்கு அகப்படாமல் ஓடிய வாகனம் மட்டுவில் - புத்தூர் வீதியில் வீதியோரத்தில் குடை சாய்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியைச் சோதனையிட்டபோது முதிரை மரக்குற்றிகள் காணப்பட்டன. லொறி குடைசாய்ந்ததால் அதன் சாரதி லொறியை கைவிட்டுத் தப்பியோடினார். பொலிஸார் பாரந்தூக்கியின் உதவியுடன் பொலிஸ் நிலையத்துக்கு லொறியைக் கொண்டு சென்றனர். லொறியின் சாரதி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து அவரை நேற்று மாலை நீதிவானின் முன் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-4,9)

# வடமாகாணத்தில் நேற்று இரு பொலிஸ் நிலையங்கள் திறப்பு

முல்லைத்தீவு, செப். 19

வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் நிலையக் கட்டங்கள் நேற்று சட்டம் ஒழுங்கு மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்கவால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா வடக்கில் நெடுங்கேணியில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையக் கட்டடத்தொகுதியும், முல்லைத்தீவு- ஒட்டுசுட்டானில் நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையக்கட்டடத்தொகுதியுமே திறக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் திறப்பு விழா மு.ப. 10 மணிக்கு நடைபெற்றது. 4 ஏக்கர் காணியில் 60 மில்லியன் ரூபா அரச நிதியில் 2014 ஆம் ஆண்டு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. புதிய பொலிஸ் கட்டடத் தொகுதியில் நிர்வாகப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, பலவித முறைப்பாட்டுப் பிரிவு, குற்றத் தடுப்புப் பிரிவு, பொலிஸாருக்கான தங்குமிட வசதி, சிற்றுண்டிச்சாலை மற்றும் அனைத்துப் பிரிவுகளும் அடங்கலாக அமைக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் அமைச்சர் உட்பட பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முல்லை மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரிகள், பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணியில் அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையக் கட்டடத் தொகுதியும் அமைச்சர் சாகல ரத்நாயக்கவால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அமைச்ச்ர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், காதர் மஸ்தான், சி.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திலிங்கம், மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, மாகாண சபை உறுப்பினர்கள், வவுனியா மாவட்டச் செயலாளர், அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21,ரி7,500)

# முன்பள்ளி ஆசிரியர்கள் சேராத இடம் சேர்ந்தது வன்னிக் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்று

## முன்னாள் அதிபர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் சேராத இடம் சேர்ந்து நிற்பதன் வெளிப்பாடும் மாவட்டத்தின் கல்வி நிலை வீழ்ச்சிக்குக் காரணங்களில் ஒன்றாக உள்ளது.

இவ்வாறு முன்னாள் அதிபர் க.இராசேந்திரம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டம் திருவையாறுப் பகுதியில் உள்ள கௌசல்யன் முன்பள்ளிக்கு யு.என்.கபிடாஸ் நிறுவனத்தினால் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல நூறு முன்பள்ளிகளில் உள்ள ஆயிரக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்களில் நூற்றுக் கணக்கானோர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ளனர். இவர்களை அங்கிருந்து விடுவித்து கல்வித் திணைக்களங்களின் கீழ் கொண்டு வருவதற்கு ஆவன செய்யவேண்டும். இந்தச் சிக்கல் தொடர்பில் உரியவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும்.

ஏனெனில் ஆரம்பக் கல்விகளே மாணவர்களின் அத்திவாரக் கல்வி போன்றது. அதில் கல்வி நிர்வாகம் அன்றி இராணுவ நிர்வாகத்தின் கீழ் உள்ளமை ஆரோக்கியமானது அல்ல. 2015ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேற்றில் கிளிநொச்சி மாவட்டமே 25 ஆவது இடம். இது எதனால் உருவானது என்பதையும் ஆராயவேண்டும்.

குறிப்பாக 2015ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை எழுதிய மாணவன் யாரெனில் 2004ஆம் ஆண்டு முன்பள்ளியில் கற்ற மாணவன். அதில் இருந்து ஆரம்பமான போரின் தாக்கம் இன்று வரை பிரதிபலிக்கின்றது. இதற்கும் அப்பால் அதிக போர் இடம்பெற்ற காலத்தில் முன்பள்ளியில் கற்றோர் என்ன நிலையோ என்ற ஏக்கமும் தற்போது எம்மிடம் உள்ளது. எனவே இவை தொடர்பில் உரியவர்கள் அதிக கவனம் செலுத்தி முன்பள்ளிகளின் சீரான கற்றல் நடவடிக்கைகளுக்கு ஆவன செய்ய வேண்டும் - என்றார். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற சிரமதானத்தில் பல ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்துக்கள் வழிபட்ட சூலத்தின் அடிப்பாகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். ஆரம்பத்தில் இரும்பாலான சூலம் ஒன்றும் குறித்த ஆலய வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது கண்டெடுக்கப்பட்ட சூலத்தின் மேற்பகுதிகளைக் காணவில்லை என்றும் கூறப்பட்டது. (ற-21)

# வர்த்தகர்களுக்கு இழப்பால் கிளி. நகரமே சோகத்தில்

## வடக்கு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.19
கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்தால் சுமார் 120 கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. ஒவ்வொரு வர்த்தக பெருமக்களுக்கும் பின்னால் உள்ள சோகம், கிளிநொச்சி நகரத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு வடமாகாண வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கடைகளை அமைச்சர் நேற்றுப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள், பிரதேச சபையின் செயலாளர், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், சம்பவ தினத்தில் இரவு முழுவதும் நின்று தீயை அணைப்பதற்கு உதவி செய்த இளைஞர்கள் ஆகியோருடன் அவர் உரையாடினார்.

ஊடகங்களுக்கு அமைச்சர் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்டவர்களில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்களும், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளும், மாற்றுத் திறனாளிகளும், நாளாந்தம் உழைத்து தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்பவர்களுமே அதிகமாக உள்ளனர். அவர்களின் சோகம் மனதை நெகிழச் செய்கின்றது. இவர்களின் சோகத்தை நீக்க வேண்டுமெனில் பழைய நிலைக்கு அவர்களை விரைவாக கொண்டு வர வேண்டும். தீக்கு இரையான கடை மற்றும் பொருள்களைக் கூட நாம் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும், ஆனால் அவர்களது பெறுமதிமிக்க ஆவணங்களின் இழப்புக்கள் எப்பொழுதுமே ஈடுசெய்யப்பட முடியாததாகக் காணப்படுகின்றன.

எதிர்வரும் மாகாணசபை அமர்வின்போது விசேட பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை ஊடாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், இடர் முகாமைத்துவ அமைச்சருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு கோரிக்கை விடப்படும்.

பெரும்பாலான வர்த்தகர்கள் நாளாந்தம் திருப்பிச் செலுத்தும் வகையில் நிதிநிறுவனங்களிடம் கடன் பெற்றுள்ளனர். தற்போது அந்தச் சுமையும் அதிகரிக்கும் அபாயமுள்ளது. மாகாண சபையின் ஊடாக நிதி நிறுவனங்களிடம் இவர்களின் கடன் மற்றும் வட்டி என்பவற்றை அறவிடுவதை இரண்டு வருடங்களுக்கு ஒத்தி வைக்குமாறு விசேட கோரிக்கை முன்வைக்கப்படும். முதலமைச்சர் தற்காலிக கடைத்தொகுதி அமைத்துக் கொடுப்பதற்கான தீர்மானத்தை விரைவாக எடுத்தமைக்கு தனது மனமார்ந்த நன்றிகள்- என்றார். (ற-21)

> “பாதிக்கப்பட்டவர்களில் பெண் தலைமைத்துவத்தை கொண்டவர்களும், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளும், மாற்றுத் திறனாளிகளும், நாளாந்தம் உழைத்து தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்பவர்களுமே அதிகமாக உள்ளனர். அவர்களின் சோகம் மனதை நெகிழச் செய்கின்றது. இவர்களின் சோகத்தை நீக்க வேண்டுமெனில் பழைய நிலைக்கு அவர்களை விரைவாக கொண்டு வர வேண்டும்.”



# மதம் மாற முயற்சி என மனைவி மீது தாக்குதல்

முல்லைத்தீவு, செப்.19
வெளிநாட்டில் இருந்து வந்த கிறிஸ்தவ மத போதகரால் நடத்தப்பட்ட ஆராதனையில் ஈடுபட்ட பெண்மீது கணவர் தாக்குதல் நடத்தினார். மதம் மாறுவதற்கு முயற்சிக்கின்றார் என்று தெரிவித்தே தாக்குதல் நடத்தப்பட்டது.

இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரின் தலையீட்டால் நிலமை சுமுகமாக தீர்க்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் ஒட்டுசுட்டான் 17ஆம் கட்டை கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்துப் பொலிஸார் தெரிவித்ததாவது:

குறித்த கிராமத்தில் உள்ள தனியார் காணியில் விசேடமாக கொட்டகை அமைத்து வெளிநாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவரால் 10 நாள்களாக மதம் சம்பந்தமாக ஆராதனைகள் நடைபெற்றன. ஆராதனையில் கிராமத்தைச் சேர்ந்த இந்துக் குடும்பங்களும் பங்கேற்றிருந்தன. அதிகமாகதிருமணமான பெண்களும் பங்கேற்றிருந்தனர். ஆராதனையில் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற இந்துப் பெண் ஒருவருடைய கணவர் குறித்த பெண் மதம் மாறுவதற்காகவே இந்த ஆராதனையில் ஈடுபட்டுள் ளார் என்று தெரிவித்து அவரை தாக்கியுள்ளார். அதனால் குறித்த இடத்தில் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம சேவையாளர் மற்றும் நெடுங்கேணி பொலிஸார் நிலமையைக் கட்டுப்படுத்தினர். ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கு சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, தாக் குதலில் ஈடுபட்டவரை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என எச்சரித்து அனுப்பினர் - என்றனர். (ற-21)

# மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப் பொருள்கள் விளம்பரங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை தேவை

## மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி ஜனாதிபதியிடம் மனு

யாழ்ப்பாணம், செப்.19
பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் பெருவிழா, கால் பந்து மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மதுசார, சிகரட் கம்பனிகள் மேற்கொள்ளும் தந்திரமான விளம்பர உத்திகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியினர் தெரிவித்தனர்.

'போதையில் இருந்து விடுதலையடைந்த நாடு' எனும் தொனிப்பொருளில் நடந்த நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வில் மதுசாரம், சிகரெட் உட்பட்ட போதைப் பொருள்களின் பாவனைக் குறைப்புக்கும் தடுப்புக்குமான கொள்கை வகுத்தலுக்கான 10 யோசனைகளை முன்வைத்து ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அவர்கள் கையளித்தனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மதுசாரம், சிகரெட் உட்பட்ட போதைப் பொருள்களின் பாவனையை சிறுவர்கள், இளைஞர்கள் மத்தியில் தூண்டுவதற்குக் காரணமாக அமையும். திரைப்படத் தயாரிப்புக்கள் (தென்னிந்தியா மற்றும் உள்ளூர் தயாரிப்புக்கள் உட்பட) சின்னத்திரை நாடகங்கள் போன்றவற்றை திரையிடுவதற்கான தடைகளை விதித்தல், அனுமதி வழங்கப்பட்டுள்ள சாராய விற்பனைக் கடைகள் கவர்ச்சிகரமாகவும் பெருந் தெருக்களுக்கு அருகிலும் செய்யப்படும் அலங்கரித்துக் காண்பிக்கப்படும் கவர்ச்சிப் படுத்தல்களைத் தடுப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல், பாடசாலைகளுக் கிடையிலான கிரிக்கெட் பெருவிழா, கால்பந்து மற்றும் மெய்வன்மைப் விளையாட்டுப் போட்டிகளின் போது பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மதுசாரம் சிகரெட் கம்பனிகள் மேற்கொள்ளும் தந்திரமான விளம்பர உத்திகளுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுத்தல்.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான அதிகார சபைச் சட்டத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ள திருத்த யோசனைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தல்.

சமூகத் தேவைகளை இனங் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக மாகாணசபைக் கட்டமைப்புக்கு ஊடாக நியமிக்கப்படும் ஆலோசனைக் குழுவை மதுசாரம், போதைப்பொருள்களின் பாவனையைத் தடுப்பதற்காகவும் அவற்றால் ஏற்படும் சமூக, அநீதிகளுக்கு தீர்வு காண்பதற்கும் வடமாகாண ரீதியான ஆலோசனைக் குழுவை நியமித்தலும் அதில் சிவில் சமூக அமைப்புக்களும் பங்கேற்பதற்கான வசதிகளைச் செய்தல்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனுமதி வழங்கப்பட்ட சாராய விற்பனை நிலையங்களில் குறித்த சட்டவரையறைகளை மீறி இயங்கிக் கொண்டிருக்கும் சாராய விற்பனை நிலையங்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

இந்து சமய நிகழ்வுகள் மற்றும் தமிழ்ப் பண்டிகைகளின் போது சாராய விற்பனை நிலையங்களை மூடுவதற்குத் தேவையான ஆலோசனை வழங்கல்.

சிகரெட் மற்றும் மதுசாரத்துக்கு அறவிடும் வரியை உயர்த்திக் கிடைக்கும் வருமானத்திலிருந்து குறித்த தொகையை மதுசாரம், போதைப்பொருள்களின் பாவனைத் தடுப்புக்காகச் செயலாற்றும் அரச மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

கொண்டாட்டங்களிலும், விருந்து பசாரங்களிலும் சாராயப் பாவனையை அகற்றுவதற்காகவும் அவற்றுக்கு சாராயம் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி முறையை இல்லாது செய்தல்.

கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் சட்ட விரோத வெளிநாட்டு மதுசாரம் மற்றும் போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்- என்றுள்ளது. (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் கற்குவாரியால் நிம்மதியற்று வாழும் நிலைமை

## நடவடிக்கை எடுக்குமாறு கோமரசன்குளம், யேசுபுரம் மக்கள் கோரிக்கை





வவுனியா, செப். 19

வவுனியா தெற்கு, தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட கோமரசன்குளம், யேசுபுரம் பகுதியில் பொது மக்களுடைய வீடுகளை அண்மித்துள்ள கற்பாறைகளை அகழும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். கற்பாறைக்கு சட்டவிரோதமாக வெடி வைப்பதால் அந்தப் பகுதியில் பெரும் வெடிப்புச்சத்தம் கேட்கின்றது. கற்கள் சிதறி அங்குள்ள வீடுகளுக்கு மேல் விழுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

பொது மக்களைப் பயன்படுத்தி அகழ்வுப் பணியை மேற்கொள்ளும் இராணுவத்தினர் கருங்கற்கள், கிரவல்கள் என்பவற்றை டிப்பர் மூலம் ஏற்றிச் சென்று பெரும் பணத்துக்கு விற்பனை செய்கின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

வவுனியா தெற்கு, தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளான கணேசபுரம், புதுக்குளம், பாரதிபுரம், நெளுக்குளம், கொக்குவெளி, சாந்தசோலை, கோமரசன்குளம், சிதம்பரபுரம், மகாறம்பைக்குளம், தோணிக்கல் போன்ற பகுதிகளில் உள்ள, உள்ளக வீதிகள் பல ஆண்டுகளாக செப்பனிடப்படாமல் இருக்கின்றன. தற்போது வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளராக திருமதி கிஷோர் செயற்பட்டு வருகின்றார். பல வேலைத் திட்டங்கள் தொடர்பாக பல மனுக்களை அவரிடம் சென்று ஒப்படைத்தும் அந்த வேலைகள் பல காலமாக செய்து கொடுக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது.

பாரதூரமானதும் பொதுமக்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடியதுமான வவுனியா கோமரசன்குளம், யேசுபுரம்பகுதியிலுள்ள கற்பாறையை இராணுவத்தினர் பொது மக்களைப் பயன்படுத்தி அகழ்வுகின்றனர். அங்குள்ள கருங்கற்கள், கிரவல்கள் என்பவற்றை டிப்பர் மூலம் ஏற்றிச் சென்று ஒரு டிப்பர் கிரவல் 8 ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரையிலும், அதேபோன்று கருங்கற்களை 13 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளாக அந்தப் பகுதியில் நில அகழ்வை மேற்கொண்டு வரும் இராணுவத்தினர் முன்னர் கிரவல்களை ஏற்றி விற்பனையில் ஈடுபட்டதுடன், தற்போது உள்ளே இருக்கும் கருங்கற்களை சட்டவிரோதமான முறையில் வெடிவைத்து கற்களை அகழ்ந்து விற்பனை செய்கின்றனர்.

இராணுவத்தினர் கருங்கற்களை வெட்டும் பெரிய கொம்பிறசர், பைக்கோ, டிப்பர் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். யேசுபுரம் பகுதியில் தற்போது 65 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். கற்குவாறியை அண்டிய பகுதியில் 10 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இராணுவத்தினர் கற்பாறைக்கு சட்டவிரோத வெடிவைப்புச் செய்து கற்களை அகழும்போது அந்தப் பகுதியில் பெரும் வெடிப்புச் சத்தம் கேட்கின்றது. கற்கள் சிதறி வீடுகளுக்கு மேல் விழுகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் ஒரு வீட்டின் மேல் கல் விழுந்ததால் வீட்டு சீற் உடைந்தது. அதை இராணுவத்தினர் மாற்றி கொடுத்தனர். இது தொடர்பாக எமது கிராம சேவையாளர் ஊடாக மாவட்டச் செயலகத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்துவித்திருந்தோம். பல மாதங்கள் கடந்தும் இன்றுவரையில் முடிவு கிடைக்கவில்லை.

தற்போதும் கற்குவாரியிலுள்ள கற்களுக்கு இராணுவத்தினர் சட்ட விரோதமாக வெடி வைத்துக் கற்களை அகழ்ந்து வருகின்றனர். அண்மையில் கற்களுக்கு வைத்த வெடியால் கல் ஒன்று விழுந்ததில் குழாய்க் கிணறுக்கு அருகில் நின்றிருந்த நான்கு வயது பாலகன் மயிரிழையில் உயிர் தப்பினான். அகழ்வுப் பணியை மேற்கொண்டு வருபவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் எங்களால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாதுள்ளது. முன்பள்ளிமாணவர்கள் கற்றல் நடவடிக்கையிலும், பொதுப்பூங்காவில் மாலை வேளையில் விளையாடியும் வருகின்றனர். ஒரு கிழமையில் ஆறு நாள்கள் அகழ்வை மேற்கொண்டு வந்த இராணுவத்தினர். இப்போது தொடர்ச்சியாகச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

சட்டவிரோத வெடி வைக்கும்போது சில சமயங்களில் எங்களிடம் வந்து கூறுவார்கள். திடீரென வெடிச்சத்தம் கேட்டால் செய்யும் வேலைகளை அப்படியே விட்டுவிட்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓட வேண்டியுள்ளது. சிறுவர்கள் பெரும் சத்தத்தில் அச்சமடைந்து வருகின்றனர்.

கற்குவாறியை இங்கிருந்து அகற்றி எமது வாழ்வுக்கு நிம்மதியைப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றனர்.

இராணுவத்தினர் தமது உட்கட்டுமானப் பணிகளுக்காக இந்தக் கற்குவாரியை ஆறு மாத காலத்துக்கு வழங்குமாறு எழுத்து மூலம் கோரினர். அவர்களுக்கு ஆறு மாதம் கல் அகழ்வு மேற்கொள்வதற்கு அரச சட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. பிரச்சினை தொடர்பில் கடந்த மாதம் கோமரசன்குளம் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக வாய் மூலமாக அறிவிக்கப்பட்டது. எழுத்து மூலமான அறிக்கை தருமாறு கேட்டிருந்தேன்.

இராணுவத்தினரால் கல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதிக்கு சென்று நிலமையைப் பார்வையிட்டேன். அங்குள்ள இராணுவத்தினரின் அனுமதியுடன் உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு ஏற்படுத்தி இந்தப் பகுதியில் வெடி வைக்காமல் கல் அகழ்வை மேற்கொள்ளும் அதேநேரம் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் மேற்கொள்ளுமாறு தெரிவித்திருந்தேன்.

எழுத்து மூலமான அறிவிப்பு தமக்கு தரப்பட்டால் அந்தப் பணியைத் தாம் நிறுத்துகின்றோம் என்று- இராணுவத்தினர் தெரிவித்ததுடன், செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஆறு மாத காலம் முடிவுற இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன என்றும்- தெரிவித்திருந்தனர். பொதுமக்கள் எனக்கு எழுத்து மூலமான அறிவிப்பைத் தந்தால் அடுத்த நாளே அந்தப் பகுதியிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி விடுவேன்.

182 கிராமங்களைக் கொண்டுள்ள பிரதேச சபையில் 120க்கு மேற்பட்ட கிராமத்தில் வீதி திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றது. அதற்கான சகல ஆதாரங்களும் என்னிடம் இருக்கின்றன. ஒரே கிராமத்தில் பணியை மேற்கொள்ளாது, 182 கிராமங்களையும் நான் பார்க்கவேண்டிய தேவையுள்ளது. தற்போது ஆறு கிராமங்களே வரி செலுத்துகின்றன. மற்றைய கிராமத்தில் வரி மதிப்பீடு செய்யுமாறு எமக்கு அறிவிப்பு கிடைக்கவில்லை. ஆயிரத்து 500 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசத்தில் 700 கிலோ மீற்றர் வீதி பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்று வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர் தெரிவித்தார். (ற-21)

## மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். யாழ்ப்பாணத்தில் மாதனைப்பிரதேசம், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம் ஆகிய இடங்களிலும்- மன்னாரில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரைக்கும் இத்திக் கண்டல், வேட்டையன் முறிப்பு, மினுக் கன், பாப்பாமோட்டை ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (ற-ரி)

## கல்வி கருத்தரங்கில் கைகலப்பு; மாணவன் வைத்தியசாலையில்

வவுனியா, செப். 19

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான இருநாள் கல்விக்கருத்தரங்கில் மாணவர்களிடையே ஏற்பட்ட குழு மோதலில் மாணவன் ஒருவன் காயமடைந்து, வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

வவுனியாவை சேர்ந்த 17 வயதுடைய மாணவனே மோதல் சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் சிந்தாமணி ஆலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான கல்விக் கருத்தரங்கில் வவுனியா பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். அதன் இரண்டாம் கட்ட கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றது. அதில் மாணவர்களிடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கருத்தரங்கில் பின்வரிசையில் இருந்த மாணவர்கள் அடுத்த பகுதியிலிருந்த மாணவிகள் மீது ரொக்கெட் விட்டுள்ளனர். அந்த மாணவிகளுடைய அதே பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் ரொக்கெட் விட்ட மாணவர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். அது கைகலப்பாக மாறியது. மாணவர்கள் மண்டபத்தினுள் இரு குழுவாகப் பிரிந்து மோதலில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு மாணவன் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கல்விக் கருத்தரங்குக்கு மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர்களும் மாணவர்களுடன் நின்றிருந்துள்ளனர்.

அவர்களையும் மீறியே மாணவர்கள் குழு மோதலில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு மாணவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று - வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற் வரியைக் குறைக்கும் யோசனையை முன்வைப்போம்

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, செப். 19
எதிர்வரும் 9 மாத காலப் பகுதிக்குள் வற் வரியை குறைப்பதற்கான யோசனை ஒன்றை சிறிலங்கா சுதந்திர கட்சி மீண்டும் முன் வைக்கும் என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

ஹபராதுவ பிரதேசத்தில், நேற்றுமுன்தினம் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"ஒரு நாடு முன்னேற்றப் பாதையில் பயணிப்பதற்கு வரி அறவீடு அவசியம். வருமானமற்ற மக்களுக்கு வரிச் சுமையைச் சுமத்த சிறிலங்கா சுதந்திர கட்சியினர் ஒருபோதும் அனுமதியளியோம். எதிர்வரும் ஒன்பது மாத காலப்பகுதியில் வற் வரியைக் குறைக்குமாறு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளோம். அந்த நோக்குடனேயே நாங்கள் செயலாற்றி வருகின்றோம்"- என்றார். (ற-4)

# கடற்றொழில் தகவல் கட்டமைப்பை அமைப்பதற்கு இலங்கை நடவடிக்கை

கொழும்பு, செப். 19
கடல்வளம் குறித்து ஆய்வொன்றை முன்னெடுத்து 2018 ஆம் ஆண்டளவில் பெரும் அளவிலான கடற்றொழில் தகவல்கட்டமைப்பு தொகுதியொன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலங்கையின் அடுத்த - நீல பச்சை சகாப்த மாநாடு ( ' Sri Lanka NEXT Blue Green Era conference) என்ற தலைப்பில் மாநாடொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகளையும் இலங்கை மேற்கொண்டுள்ளது என்றும் - அமைச்சர் கூறினார்.

எங்கள் சமுத்திர மாநாடு 2016 என்ற மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க அயலுறவுத்துறையில் இந்த மாநாடு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையில் நடைபெற்றது. அமைச்சர்கள், அதிகாரிகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா சமூக பொது மற்றும் தனியார்துறைமற்றும் இளைஞர் தலைவர்கள் உட்பட சுமார் 100 நாடுகளின் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர். அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஆரம்பித்து வைத்தார். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உரையாற்றினார். அமெரிக்க இராஜாங்க திணைக்கள செயலாளர் ஜோன் கெரி யின் அழைப்பின் பேரில் அமைச்சர் மங்கள சமரவீர இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 9 கடல் பாதுகாப்பு பகுதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடலுக்கு அப்பாலுள்ள சமுத்திரத்தையும் பாதுகாப்பதற்காக பல வேலைத் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இலங்கையில் சுற்றாடல்துறை அமைச்சு ஜனாதிபதியின் கீழ் செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதி சுற்றாடல்துறை பாதுகாப்பில் கூடுதலான அக்கறையைக் கொண்டிருப்பதால் அவருக்கு இந்த அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது- என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஜுலை மாதத்தில் இலங்கையில் உலகிலேயே முக்கியமான தொல்பொருள் அரும்பொருள்காட்சி நிலையம் திறக்கப்பட்டது.

இந்த மாதம் 13 ஆம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரையில் கரையோர தேசிய மற்றும் கடல்வளத்தை பாதுகாப்பதற்கான வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடல் உயிரினங்கள் மற்றும் வளங்களின்பாதுகாப்புக்காக புதிய பிரதேசங்கள் பல கடல் பாதுகாப்பு பிரதேசமாக விரைவில் பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

அதேபோன்று இலங்கை இந்தவருட இறுதிக்குள் கடல் ஆமை பாதுகாப்பு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டுள்ளது.

காயங்களுக்குள்ளாகும் ஆமைகளுக்கு சிகிச்சைகளை மேற்கொள்ளுதல், இவற்றுக்கு பாதுகாப்பான இடங்கள் தொடர்பிலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இவற்றுக்கென அமைக்கப்படும் நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தகவல்கள் வழங்கப்படும்.- என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ற-4)

# அறிவால் வருமானம் தேடும் சமூகம் கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, செப். 19
அறிவால் வருமானம் தேடும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதே அரசின் நீண்டகால இலக்கு என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மாலபே பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய கல்விக் கொள்கை, புதிய பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு தொழிற் கல்வித்துறைகள் என்பவற்றை அமைப்பதே அரசின் எதிர்பார்ப்பு, அபிவிருத்தியை நோக்கி நாட்டை முன்னெடுத்துச் செல்வதே இலக்கு.

நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான பங்குதாரர்கள் பெண்களாவர். அவர்களின் பங்களிப்புக் கல்வியின்றிய உழைப்பின் மூலமே வழங்கப்படுகின்றது.

தற்போதைய நவீன தொழில்நுட்பச் செயற்பாடுகளுக்கமைவான பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது.

கடந்த 15 வருட காலமாக நாட்டின் தேசிய தொழிற்றுறை பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந் தது. கடந்த 10 வருட காலப்பகுதியில் சுமார் 400 தேசிய தொழிற்றுறை நிலையங்கள் மூடப்பட்டன. இதன் காரணமாக தொழில்வாய்ப்புக்கள் கிடைக்காது போனது. அத்துடன் தனி ஆள் மற்றும் அரசின் பொருளாதாரம் வீழ்ச்சிப் போக்கை சந்தித்தது.- என்றார். (ற-4)

# அதிகாரப் பரவலாக்கத்தை கூட்டு எதிர்க்கட்சி ஏற்காது

## தினேஷ் குணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 19
தேசிய இனப்பிரச்சினைக்கு, சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கமே தீர்வு என்ற முறையைத் தாம் ஏற்கப் போவதில்லை என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்தது. அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன அவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சமஷ்டியும், மதச்சார்பற்ற அரசியலமைப்பும் அவசியம் என்று நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர் என்று தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: "சமஷ்டி என்பது ஒரு நாட்டின் பிரிவினைக்கே வழிவகுக்கும். ஒற்றையாட்சிக்குள்ளேயே பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதில் கூட்டு எதிர்க்கட்சி உறுதியாக உள்ளது"- என்றார். (ற-4)

# பொலிஸ் அதிகாரிகள் சிறப்புச் சத்தியப் பிரமாணம்

கொழும்பு, செப். 19
நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சிறப்புச் சத்தியப்பிரமாணம் ஒன்றைச் செய்தனர்.

பொலிஸ் ஆணைக்குழுவால் பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் உருவாக்கப்பட்ட ஒழுக்கக் கோவை மீதே இந்தச் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் தலைமையில் பொலிஸ் தலைமையகத்தில் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

தலைமையகத்தில் நடைபெறும் வேளையில், நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் இதுபோன்ற சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# ஓய்வுபெற்ற தளபதிகளை இணைக்க மகிந்த திட்டம்

கொழும்பு, செப். 19
இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற உயர்மட்டத் தளபதிகளை தமது அரசியல் நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்வதற்கு, மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி முடிவு செய்துள்ளது.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்தவாரம், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை கூட்டு எதிரணியின் தலைவர்கள் சந்தித்தபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசுக்கு விசுவாசமாகவும், நெருக்கமாகவும் இருந்து ஓய்வுபெற்ற பிரபலமான இராணுவத் தளபதிகளை இணைத்துக் கொள்வதன் மூலம், தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கு கூட்டு எதிரணி திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ற-4)

# ராணுவ விநியோக ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு அமெ. விருப்பம்

கொழும்பு, செப். 19
மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் இலங்கையுடன் செய்து கொண்ட இராணுவ விநியோக உடன்பாட்டைப் புதுப்பித்துக் கொள்ள அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கும் அப்போதைய அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் 2007ஆம் ஆண்டு, கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

பரிமாற்றம் மற்றும் விநியோக பரிமாற்றங்கள், உதவி மற்றும் எரிபொருள் விநியோக சேவைகளை வழங்குவதற்கு வசதிகளைச் செய்யும் இந்த உடன்பாடு 10 ஆண்டுகள் செல்லுபடியானது.

இந்த உடன்பாட்டை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது என்று அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஆங்கில நாளிதழுக்குத் தெரிவித்தார்.

அமெரிக்க கடற்படைச் செயலர் ரே மபுஸ் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது அமெரிக்காவின் இந்த விருப்பம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஐ.தே.க. ஆட்சியில் இருந்த 2002-2003 காலப்பகுதியில் அமெரிக்கா- இலங்கைக்கு இடையில் இந்த உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கான பேச்சு நடத்தப்பட்ட போதும், இறுதி இணக்கம் காணப்படவில்லை. 2007ஆம் ஆண்டிலேயே இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டமை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் உதவிகள் இலங்கைக்குக் கிடைப்பதற்கு வழிவகுத்தது. இறுதிப் போரின் போது, 2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் நான்கு ஆயுதக் கப்பல்களை ஆழ்கடலில் மூழ்கடிப்பதற்குத் தேவையான புலனாய்வுத் தகவல்களை அமெரிக்காவே வழங்கியிருந்தது. இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளில் பொருத்துவதற்கு 30 புஸ்மாஸ்டர் பீரங்கிகளையும் அமெரிக்கா வழங்கியிருந்தது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்யும் விடுதலைப் புலிகளின் முயற்சிகளையும் அமெரிக்கா தடுத்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புப் பேரவை அடுத்த வாரம் கூடும்

கொழும்பு, செப். 19
அரசமைப்புப் பேரவை அடுத்த வாரம் கூடும்போது காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் தகவல் அறியும் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சந்திப்புக்கான சரியான திகதியை இன்றுதான் அறிவிக்க முடியும் என்றும் வெளிநாடு சென்றுள்ள சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இதற்கான கலந்துரையாடல்களை அரசமைப்புப் பேரவை மேற்கொள்ளவுள்ளது.

ஆணைக் குழுக்களுக்கான தலைவர்கள், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதேவேளை, அரசமைப்புப் பேரவையின் வழிகாட்டும் குழு எதிர்வரும் வாரத்தில் கூடவுள்ளது. இதன் கூட்டங்கள் அடுத்த செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்தும் மூன்று நாள்களுக்கு இடம் பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் தகவல்படி, புதிய அரசமைப்பு, அரசமைப்புப் பேரவைக்கு இந்த வருட இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# ஒழுக்கம் மீறும் பொலிஸார் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 19
ஒழுக்கத்தை மீறிச் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது பொலிஸ் தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த நடவடிக்கை பொலிஸ் மா அதிபர் ஊடாக முன்னெடுக்கப்படும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

"இத்தகைய நடவடிக்கையின் ஊடாக பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவு மேலும் வலுப்பெறும். எதிர்காலத்தில் ஓய்வு பெற்ற மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரைப் பொலிஸ் மக்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மேலதிக பணிப்பாளராக நியமிப்பதற்கு எண்ணியுள்ளோம்.

இந்த பிரிவின் மூலம் பொலிஸாருக்கு எதிராகக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, உரியநடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது" - என்றார். (ற-4)

# ஏறாவூர் இரட்டைக் கொலை சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொழும்பு, செப். 19
ஏறாவூரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்ற இரட்டைக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் 4 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித் தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஏறாவூரைச் சேர்ந்த மூவரும் ஓட்டமாவடியைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகின்றனர். பணம், நகைகள் கொள்ளையிட வந்த வேளையில், அவர்களை வீட்டிலிருந்தவர்கள் அடையாளம் கண்டுகொண்டமையால் கொலை செய்துள்ளனர் என்று முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை யார் என நேரில் பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தில் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். எனினும் பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகப் பிரசன்னமாகிய பொதுமக்களிடம் பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

கடந்த ஒரு வார கால தொடர் விசாரணைகளையடுத்து, ஏறாவூர் நகர மத்தியில் மறைந்திருந்தபோது கொலைச் சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்படும் 4 பேரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனின் சகோதரன் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் நகர் முகாந்திரம் வீதி முதலாவது ஒழுங்கையில் உள்ள வீட்டில் ஒன்றாக வசித்து வந்த நூர் முஹம்மது சித்தி உசைரா (வயது 56) மற்றும் அவரது மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது 32) ஆகியோர் கடந்த வாரம் அதிகாலை 2 மணியளவில் மர்மமான முறையில் பொல்லால் தாக்கப்பட்ட நிலையிலும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையிலும் படுகொலை செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தபோது, அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. (ற-4)



# தியாகத்தின் நேசக்கரம்

ந.லோகதயாளன்

இலட்சியம் என்கின்ற நேசக்கரங்களைப் பற்றிய பிள்ளையாக எல்லையற்ற விடுதலையின் தாகம் சுமந்தபடி தியாக இலட்சணம் சுமந்த திலீபனின் உரிமைத் தாகம் எல்லையின்றித் தொடர்ந்தது. ஒரு துளி நீராகாரமும் அருந்தாது கடந்து சென்ற அவனது பயணத்தின் நான்கு நாள்களும் கடினங்களை பலிதமாக்கி புனிதம் சுமந்தது. முடிந்தவரை உரையாடினான். புத்தகங்கள்,தினசரிப் பத்திரிகைகள் படிப்பதில் இருந்து வந்த ஆர்வத்தை தியாகத்திடை ஞான வடிவமாக புகுத்தி தனது வழமையைச் செய்து கொண்டேயிருந்தான். இருந்த போதும் 5 ஆவது நாள் காலையின் புலர்தல் என்பது வழக்கம் போல அன்றி திலீபனின் செயல்நிலையில் ஒரு மாற்றத்தை வெளிக்காட்டியது. அவனருகில் இருந்த போராளிகளான ராயன் , வாஞ்சிநாதன் உள்ளிட்டோர் பார்வையின் விளிம்பினுள் திலீபன் துயிலெழுதல் இன்றி போர்வைக்குள் புரண்டு கொண்டிருக்கும் காட்சியை நிலைநிறுத்தியது. இருந்தும் மாறுதலற்ற அவன் பயணம் தொடர்கிறது.

இந்த நிலையிலே திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் இலங்கையில் மட்டுமன்றி பன்னாட்டு அரங்குகளிலும் பேசுபொருளாகியது. போராட்டத்தில் நாங்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற மக்களின் எண்ண மேலீடு நாலா பக்கமும் இருந்து நல்லை மண்ணை நோக்கி ஒன்றதிரள்கிறது. மக்கள் எங்கும் அலைமோதுகின்றனர். அந்தக் கூட்டங்களிடை அப்போது 12 வயதேயாக இருந்த நானும் மழலை தந்த உணர்வோடு அங்கே நின்றிருந்தேன்.

திலீபனின் சோர்வும் அதனை மீறிய மனோதிடமும் பலதை அவனை நோக்கியதாய் வரவழைத்தது. விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் யோகியுடனான சந்திப்பின் பிரகாரம் கோட்டை முகாமில் இருந்து இந்திய இராணுவத்தின் ஒரு லெப்ரினன் கேணல் தர அதிகாரி மாலை வேளையில் திலீபனைப் பார்வையிட வருகிறார். இதனை அவதானித்த மக்கள் வார்த்தை ஆவேசம் கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். இருந்த போதும் பாதுகாப்பாக மேடைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார் இராணுவ அதிகாரி.

திலீபனைப் பார்வையிடுகின்றார். எந்தவித செய்தி தரலும் இன்றி இந்திய மாயையின் மௌனத்தைப் பரிசளித்து தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொல்லி திலீபனைப் போராட்ட மேடையிலே சந்தித்த முதலாவது இந்திய அதிகாரி என்ற நிஜத் தோற்றத்தோடு அங்கிருந்து வெளியேறினார்.

அதிகாரியின் வருகை எந்த நலனையும் தந்திடாத போதும் மீண்டும் ஒரு முயற்சி இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரே இந்தப் பணியை துரிதப்படுத்தியிருந்தனர். இந்த முயற்சியின் சாதகத் தன்மை வெளிப்பாடாக இந்திய அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளதாகவும் அவரை இரவு முதல் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் தயார் செய்யப்படுவதாகவும் தலைமைக்குத் தகவல் தரப்படுகின்றது.

எதிர்பார்ப்பின் ஆதங்கம் கேள்விக்குறிகளைத் தன்னுள் தாங்கியபடி நல்லையின் வீதியெங்கும் அலைபாய்ந்துகொண்டிருந்தது. அடுத்தது என்ன என்ற சம்பவங்களின் நிழல் விம்பம் எல்லோர் மனங்களிலும் அசைந்தபடியே இருந்தது. இருளாய்க் கவிந்தது.

# சிகா, சிக்குன்குனியா தொடர்பில் இலங்கையில் சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, செப். 19
சிகா மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் குறித்து இலங்கையில் சிவப்பு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையம் மற்றும் கொழும்புத் துறைமுகம் ஆகிய பகுதிகளில் இந்த நோய்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிக்குன்குனியா இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வேகமாகப் பரவுகின்றது. சிகா வைரஸ் சிங்கப்பூரில் அதிகமாகப் பரவிவருகின்றது என்றும் தற்போது தாய்லாந்திலும் அதன் தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நோய்கள் அதிகளவில் பரவிவரும் நாடுகளுக்குப் பயணம் செய்வது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை விமான நிலைய சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது என்று தொற்றுநோய் தொடர்பான பணிப்பாளர் வைத்தியர் பாலித்த கருணப்பெரும கூறினார்.

குறித்த நோய்களின் தொற்றுக் குறித்து அவதானமாக இருக்குமாறு பயணிகளுக்கு ஆலோசனைவழங்குவதற்குபயணசேவைகளை வழங்குவோரின் உதவிகளையும் எதிர்பார்த்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிகா மற்றும் சிக்குன்குனியா நோய்களின் ஆபத்துக்கள் உள்ளதை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதிப்படுத்திய போதிலும் அதனை அரச வைத்தியசாலைகளால் சமாளிக்க முடியும் என குறிப்பிட்டிருந்தார்.

சிலாபம்பகுதியிலுள்ள நல்லரசன் கட்டுப் பகுதியில் இரண்டு யாத்திரிகள் உயிரிழந்ததை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த யாத்திரிகர்கள் இந்தியா சென்று திரும்பிய பின்னர் கடுமையான காய்ச்சலுடன் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டுள்ள காத்திரமான கருத்து

சமஷ்டி என்றாலே நாட்டைத் துண்டாடு வதைக் குறிக்கும் என்பதுபோல், தென்னிலங் கையில் அடிமட்ட சிங்கள மக்கள் மனங்களில் ஆணி அடித்து இறுக்குவதில் ஈடுபட் டிருக்கும் கூட்டு எதிர்க்கட்சியினரின் காதுகளில் நாராசம் பாய்ச்சியது போன்றதொரு கருத்தை முன்னாள் ஜனாதிபதியும் இரண்டு முன்னாள் பிரதமர் களின் புதல்வியுமான சந்திரிக பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்டிருக்கிறார்.

சமஷ்டி ஆட்சிமுறையானது பல நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளது. எனவே எமது நாட்டிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும். சமஷ்டி குறித்துப் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று தெரிவித்துள்ள திருமதி குமாரதுங்க, இலங்கைக்கு சமஷ்டி மற்றும் ஒரு பகுதி சமய சார்பற்ற நிர்வாக முறை கொண்ட அரசமைப்பே பொருத்தமாகவிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் இந்தக் கருத்தை வெளியிட்டவரான சந்திரிகா குமாரதுங்கவானவர் ஒரு சாதாரண அரசியல்வாதியன்று. பரம்பரை அரசியல் குடும்பம் ஒன்றிலிருந்து வந்தவர், படித்தவர், இரண்டு முன்னாள் பிரதமர்களின் புத்திரி. இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக அரச பீடத்தைஅலங்கரித்தவர். பதவி விலகியதன் பின்னர் பல நாடுகளுக்கும் சென்று அரசு முறைகள் பற்றி அறிந்தவர். எனவே அவர் இப்பொழுது வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆழமாக சிந்தித்து வெளியிடப்படும் அனுபவ முத்திரைகள் என்று கொள்ளப்பட வேண்டும்.

சமஷ்டி முறையே நாட்டுக்குச் சிறந்ததென்று இவரது தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டா ரநாயக்கா லண்டனில் கல்விகற்றுத் திரும்பிய காலத்தில் கூறி வந்தமை நினைவுகூரத்தக்கது. பிற்காலத்தில் அரசியல் காரணங்களுக்காக அவர் தம் கொள்கையை மாற்றிக் கொண்டாலும் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட மொன்றை தந்தை செல்வாவுடன் கையெழுத்திட்டதும் அதுவும் கூடப் பின்னர் இனவாதிகளின் எதிர்ப்பால் கிழித் தெறியப்பட்டதும் நினைவுகூரத்தக்கவை. உண்மையில் சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு தொடர்பான முன்மொழிவும் கூட ஒருவகை சமஷ்டியைக் குறிப்பதாக இருந்தது என்கிறார்கள் அறிஞர்கள். துரதிர்ஷ்டவசமாக அவரால் அதைச் செயற்படுத்த முடியவில்லை.

நாட்டில் புதிய அரசமைப்பொன்றை வடிவமைப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் அவைகளோடு கூட்டிணைந்துள்ள சிறு கட்சிகளும் மிகத் தீவிரமான முயற்சிகளை முன்னெடுத்து வரும் வேளையில் சந்திரிகா குமாரதுங்கவின் இந்தக் காத்திரமான கருத்து வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

கடந்த காலத்தில் பேரினக் கட்சிகளால் உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கள் இரண்டுமே தோல்வியில் முடிந்துள்ளன. அவ்வரசமைப்புக்களில் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளுக்குச் சரியான வகிபாகம் வழங்கப்பட்டிருக்காமை அவைகளின் தோல்விகளுக்கு முதல் முக்கிய காரணமாகும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அரசமைப்புக்கான முயற்சிகளில் தமிழ்த் தரப்புக்களும் கணிசமான அளவில் பங்களிப்பு வழங்கி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. இனவாதத்தை முன்னிறுத்தாமல், நாட்டின் பிரதான இருகட்சிகளும் இணைந்து தயாரிக்கவிருக்கும் அரசமைப்பானது, தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கும் வகையில் தீர்வை வழங்காது போனால், அது தமிழ்த்தரப்பின் ஆதரவை எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை கூட்டு எதிர்க்கட்சியினரின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், தமிழர் பங்களிப்பை எதிர்பார்க்க முடியாது. நாடாளுமன்றில் மட்டுமன்று பொதுஜன வாக்கெடுப்பிலும் அது தமிழ் பேசும் மக்களின் ஆதரவை இழக்கலாம். எனவே மீண்டும் அது தோல்வியில் முடியும் அரசமைப்பாகவே அமைந்துவிடும். இதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் வேறு வகையில் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே நாட்டு மக்கள் அனைவரதும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் பேராதரவைப் பெறக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு அமையும் என்று எதிர்பார்ப்போம். அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனைகள் பெரிதும் வழிகாட்டலாக அமையமுடியும்.



### சிங்கள மூலம் மவ்பிம
### தமிழில் - வீ.எஸ்.ரீ

"போரை முடிவுக்குக் கொண்டு வந்தது வேறொரு ஆள்; ஆனால், விடுதலைப் புலிகள் என்னைப் பின்தொடர்கிறார்களே"

மலேசியாவுக்குச் சென்றிருந்த மகிந்த, அங்கு தமக்கு எதிராக விடுதலைப் புலிகளது ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பைச் சுட்டிக்காட்டி, இலங்கை வரை கேட்கக்கூடிய அளவுக்கு உரத்துக்கூறிய கருத்தே மேற்கண்ட கருத்தாகும். உண்மையில் சந்திரிகாவை நக்கல் பண்ணியே மகிந்த இவ்வாறு கூறியிருந்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் பெரும் பகுதியைத் தாம் பூர்த்தி செய்து அவர்களை நலிவுபடுத்தியிருந்ததாகச் சந்திரிகா அண்மையில் வெளியிட்ட கருத்துக்கான மகிந்தவின் 'நக்கல்' அது. சந்திரிகாவின் குறிப்பிட்ட அந்தக் கருத்து மகிந்தவையும், அவரது தரப்பினரையும் கடும் ஆத்திரம் அடையச் செய்திருந்தது. கடந்த வாரம் இடம்பெற்ற பன்னாட்டு காணாமற் போனோர் தின நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இன்று நல்லிணக்கச் செயலணியில் முக்கிய பதவியொன்றை வகிக்கின்றார். 1983 கறுப்பு ஜூலை கலவரத்துக்கு ஐ.தே.கட்சியே காரணமெனக் குற்றஞ்சாட்டி விமர்சித்து, அவர் தமிழ் மக்களிடம் அதற்காக முன்னர் மன்னிப்பும் கோரியிருந்தார். ஆனால், தமது ஆட்சிக் காலத்தில் ஐ.தே.க. செய்ததைவிட, அதிகமான அநியாயங்களைத் தமிழ் மக்களுக்குச் செய்தார். அந்த வகையில், நாட்டின் இன்றைய ஜனாதிபதி போன்றே, முன்னாள் ஜனாதிபதிமாரும், தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

அப்படியானால் மகிந்த எதற்காக தாமொருவராகவே தொப்பியைத் தமது தலையில் போட்டுக் கொள்ள முனைகிறார்.? உண்மையில் சர்வதேச புலிகள் ஆதரவுத் தரப்புக்களது எதிர்ப்பைத் தமது பெயரில் பதிவு செய்து, அதன்மூலம் சிங்கள வாக்காளர்களது ஆதரவை ஈட்டிக் கொள்வதே மகிந்தவின் திட்டமாகும். ஆனால் உண்மையில் சர்வதேச விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மகிந்தவை மட்டும் எதிர்க்கவில்லை. மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி என்ற ரீதியில் லண்டனுக்கு மேற்கொண்ட தமது முதலாவது பயணத்தின்போது, மகிந்தவைப் போன்று மைத்திரிபாலவும் விடுதலைப் புலிகள் ஆதரவுத் தரப்பினரது எதிர்ப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. ஆயினும் இவ்விருவருக்கும்எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒரு வேறுபாடு காணப்பட்டது.

மகிந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர், லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பேருரையொன்றை ஆற்ற 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் லண்டன் சென்றிருந்தார். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட தினத்தன்று, மகிந்தவும் கோத்தபாயவும் விமல் வீரவன்சவை உசுப்பேத்தி கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவித்தனர். தூதரகக் கட்டடத்துக்கு கல்வீசியும், அவ்வேளைய பிரிட்டன் பிரதமரது உருவப்பொம்மைக்குத் தீயிட்டுக் கொளுத்தியும், ஆர்ப்பாட்டக்காரர்கள் குழப்பம் விளைவித்தனர். பிரிட்டன் தூதரக ஊழியர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்துமாறு இலங்கை அரசிடம் அவ்வேளை கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அரசு அந்தக் கோரிக்கையை அலட்சியம் செய்திருந்தது.

குறிப்பிட்டதொரு கால இடைவெளியின் பின்னர், மகிந்த லண்டனுக்குச் செல்லத் தயாரானபோது, புலம்பெயர் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், மகிந்தவின் லண்டன் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஆயத்தமாவதால், மகிந்த தமது பயணத்தை ரத்துச் செய்யுமாறு பிரிட்டன் பாதுகாப்புத் தரப்பினர் மகிந்தவுக்கு அறிவுறுத்தினர். அதனைக் கணக்கில் எடுக்காது லண்டன் சென்ற மகிந்த, தாம் போகும் இடங்கள் அனைத்திலும் புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர்களது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அவற்றைக் கண்டு, அச்சமுற்று, மகிந்தவின் பேருரை நிகழ் வையே இரத்துச் செய்துவிட்டது.

அதேபோன்று, பின்னர் பொதுநலவாய நாடுகளது நிகழ்வொன்றுக்காக மகிந்த லண்டனுக்குச் செல்லநேர்ந்தது. பிரிட்டன் மகாராணி எலிசபெத் கலந்து கொள்ளவிருந்த அந்த நிகழ்வில் மகிந்த பேருரையொன்றை ஆற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆயினும் புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர்களது கடும் எதிர்ப்புக் காரணமாக மகிந்தவால் நிகழ்வில் உரையாற்ற இயலாது போயிற்று. அதேவிதத்தில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக மகிந்த பதவியேற்ற பின்னர்கூட, மகிந்த லண்டனுக்குச் சென்று பிரித்தானிய மகாராணியைச் சந்திக்க முடியாமல் போனமைக்கான காரணம், பிரித்தானிய அரசால் அவருக்கு உத்தியோகபூர்வமான அழைப்பெதுவும் விடுக்கப்பட்டிராமையே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியப் பயணம் மகிந்தவுக்கு கற்றுக் கொடுத்த பாடம்

ஆனால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, பிரித்தானிய அரசால் அவருக்கு அந்த நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டது. மைத்திரியின் லண்டன் பயணத்துக்கும் புலம் பெயர் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் தரப்பு எதிர்ப்பு நட வடிக்கை மேற்கொள்ளத் தயாரானவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மைத்திரிபால ஜனாதிபதியாகப் பதவி யேற்று சில மாதங்களே கழிந்திருப்பதால்,தமது கொள்கையை நடைமுறைப்படுத்த அவருக்குக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டியது அவசியமெனவும், ஆர்ப்பாட்டங்களைக் கைவிட வேண்டுமெனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

மகிந்த மற்றும் மைத்திரிபால ஆகியோருக்கு எதிரான புலம்பெயர் புலி ஆதரவாளர் தரப்பின் நடவடிக்கையின் வேறுபாடு அதுதான். மகிந்த தமது லண்டன் பயணங்களின் மூலம், விடுதலைப்புலி ஆதரவாளர் தரப்புக்களை ஒன்று திரண்டு பலமடைய வைத்தார். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபாலவோ, தமது லண்டன் பயணத் தின் மூலம், அமைப்பின் புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர் தரப்புக்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட வழிவகுத்துவைத்தார். சுமந்திரனது வேண்டுகோள் புலம் பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர் தரப்புக்களைச் சீற்றமுற வைத்தன. அவர்கள் லண்டனில் மைத்திரி பால தங்கியிருந்த விடுதிக்கு முன்னாலும், அவர் கலந்து கொண்ட நிகழ்வுகளின் போதும், தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தது மட்டுமன்றி, சுமந்திரனது உருவப்பொம்மைக்குத் தீயிட் டுக் கொளுத்தியும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந் தனர். ஆயினும் பிரித்தானிய எலிசபெத் மகாராணி தரப்பு மட்டுமன்றி, அந்த நாட்டின் ஊடகங் களும்,

> மகிந்த மற்றும் மைத்திரிபால ஆகியோருக்கு எதிரான புலம் பெயர் புலி ஆதரவாளர் தரப்பின் நடவடிக்கையின் வேறுபாடு அதுதான். மகிந்த தமது லண்டன் பயணங்களின் மூலம் விடுதலைப்புலி ஆதரவாளர் தரப்புக்களை ஒன்று திரண்டு பலமடைய வைத்தார்.




ஜனாதிபதி மைத்திரிபால தமது கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டியது நியாயமே என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தன.அந்த வகையில் தமது லண்டன் பயணத்தின்போது மட்டுமல்லாமல், ஜேர்மனிக்கான தமது பயணத்தின் போதும், மைத்திரிபால புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர் தரப்புக்களது எதிர்ப்பை எதிர்நோக்க நேர்ந்தபோதிலும்,அதனால் பாதகவிளைவேதும் ஏற்படவில்லை.

அப்படியானால், மகிந்தவின் அண்மைய மலேசியப் பயணத்தின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் மீண்டும் பலம் பெறுகின்றனவா? அதுதான் உண்மை. மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் தாக்குதலுக்கு உள்ளான வீடியோ பிரதிகளை உலகின் பல பாகங்களுக்கும் இவர்களே அனுப்பிவருகின்றனர். ஆனால் உண்மையில் தூதுவர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் தமிழ் நாட்டின் "நாம் தமிழர்" இயக்கத்தினரே. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்குச் சென்ற சிங்கள யாத்திரிகர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களும் இவர்களே. நல்லாட்சி அரசு பதவியேற்றதையடுத்து இவர்களது செயற்பாடுகளில் ஒரு தொய்வு ஏற்பட்டிருந்தது. மலேசியத் தூதுவர் மீதான அவர்களது தாக்குதலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கண்டித்திருப்பது, ஒருவிதத்தில் நாம் தமிழர் அமைப்பினதும், விடுதலைப் புலி புலம்பெயர் அமைப்புக்களதும் தோல்வியொன்றாகக் கொள்ளத்தக்கது. அதே சமயம் மகிந்தவுக்கும் இது ஒரு பாடமாக அமையத்தக்கதாகும்.

## மாணவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்ல வேண்டாம்

அண்மைக்காலமாக வடபகுதி மாணவர்களை போதைப் பொருள்களால் திட்டமிட்டு சீரழித்து வருகின்ற ஒரு கூட்டம் ஒருபுறம் செயற்பட்டு வருகிறது. மறுபுறத்தில் எமது சமூகத்தினுள் மறைந்திருக்கின்ற சில நயவஞ்சகர்களும் எம் மாணவர்களை, அதுவும் ஏதும் அறியாத சிறுவர்களைத் தூண்டி வீதிக்கு இறக்கி, அவர்களுடைய எதிர்காலத்துடன் விளையாட ஆரம்பித்துள்ளார்கள். தங்கள் சுய நலன்களை குறுக்கு வழியில் அடைவதற்காக மாணவர்களைப் பயன்படுத்தி, ஆர்ப்பாட்டங்கள் உணவு தவிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். பாவம்; ஏதும் அறியா மாணவர்களும், பெற்றோர்களும் இதில் பலிக்கடா ஆக்கப்படுகின்றார்கள். இல்லாததொன்றை மாணவர்களை வைத்து, இருப்பதுபோல் காட்ட முற்படுகின்றார்கள். இதில் பாடசாலைகளின் சில பழைய மாணவர்களும், பழைய மாணவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் திரைமறைவில் நின்று செயற்படுவதை அனைவரும் நன்கு அறிவர். தற்பொழுது நீதித்துறை எமது நாட்டில் குறிப்பாக, யாழ்.மாவட்டத்தில் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றது. உங்களுக்கு ஏதும் பிரச்சினைகள் அல்லது சட்டச்சிக்கல்கள் இருந்தால் அவற்றைச் சட்டப்படி அணுகுங்கள்.

அதைவிடுத்து, மாணவர்களைப் பயன்படுத்தி உங்கள் சுய நலன்களை ஒருபோதும் அடைய முடியாது என்பதை மனதில் கொள்ளுங்கள். பாடசாலை நலனில் அக்கறை கொண்டவர்களாக மார்தட்டிக் கொள்பவர்கள், மாணவர்களை வீதிக்கு இறக்கி பாடசாலையின் நற்பெயரைக் களங்கப்படுத்துவது வேடிக்கையானது. மாணவர்கள் இனியாவது இந்த நயவஞ்சகர்களின் வலையில் சிக்காமல் தங்கள் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டு, தங்களின் எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும். மாறாக மாணவர்களே, அறிந்தோ அறியாமலோ இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் ஈடுபட்டு சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டு, உங்களுடைய பெறுமதியான வாழ்க்கையை மழுங்கடிக்காதீர்கள். பெற்றோர்களும் இதில் விழிப்பாக இருக்க வேண்டும். மாணவர்களைத் தூண்டித் தங்கள் இலக்கை அடைய முற்படும் இவ்வாறான பேர்வழிகளுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் பாடசாலைகள் சுமுக மாக இயங்க முடியும்.

நாவற்குழியூர் மனோ

## ஊடகங்கள் நேர்மையாகச் செயற்பட்டு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்

ஊடகங்கள் பக்கச் சார்பின்றிச் செயற்படுவதன் மூலமே மக்கள் உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்த நிலை இல்லையென்றுதான் கூற முடியும். அண்மையில் தென்பகுதியிலிருந்து வெளிவருகின்ற ஊடகமொன்று பெரும்பான்மையின மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகச் செய்தி வெளியிட்டது. இதை வாசித்த பெரும்பான்மையின மக்கள் கொதித்துப் போயிருப்பார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை அத்துடன் தென்பகுதியில் வாழ்கின்ற தமிழர்கள் மீது இவர்களுக்கு வெறுப்பும் ஏற்பட்டிருக்கும். இதுவே இனக்கலவரங்களுக்கு வித்திடப் போதுமானது. இவ்வாறு தவறான செய்திகளை வெளியிடுவதால் பாதிக்கப்படப்போவது சாதாரண மக்கள் தான் என்பதை இத்தகைய ஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சில தென்பகுதி ஊடகங்கள் வடமாகாண முதலமைச்சரை ஓர் இனவாதியாகச் சித்திரித்து வருகின்றன. நாட்டில் சமாதானம் நிலவுவதற்கு இவரே பெரும் தடையாக உள்ளதாகவும் சித்திரிக்கப்படுகின்றது. மேலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புலிகள் மீண்டும் தலையெடுத்து விட்டதாகவும், தனிநாடொன்றை அமைப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படுவதால் மக்கள் குழம்பிவிடுவார்கள் என்பதை இந்த ஊடகங்கள் ஏனோ மறந்து விடுகின்றன.


பா.தர்மசீலன்
கிளிநொச்சி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். ... விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபாச இணையங்களுக்கு தடை விதித்தது ரஷ்யா

மொஸ்கோ, செப். 19
ரஷ்யாவில் பிரபல ஆபாச இணையங்களுக்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.
உலக அளவில் பிரபலமான இரு ஆபாச இணையங்களே அவ்வாறு தடை செய்யப்பட்டன. முன்னதாக குறித்த இணையங்கள் தடை செய்வது குறித்து, நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இந்தவார ஆரம்பத்தில் தடை செய்வதற்கான உத்தரவை நீதிமன்றம் வழங்கியதை அடுத்து, ரஷ்யாவின் தொழில்நுட்ப உழவுப் பிரிவு இந்தத் தடையை அண்மையில் நடைமுறைப்படுத்தியது. ரஷ்யாவின் இந்த முடிவை சமூக ஆர்வலர்கள் பலரும் வரவேற்கின்றபோதிலும், சிலர் எதிரான கருத்துக்களையும் சமூக வலைத் தளங்களில் பதிவுசெய்து வருகின்றனர். (ம)



# தொடர் குண்டு வெடிப்புக்களால் நியூயோர்க் நகரில் பதற்றநிலை

வோஷிங்ரன், செப். 19
அமெரிக்க பெருநகரமான நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 29 பேர் காயமடைந்தனர்.
நியூயோர்க்கின் நியூஜேர்சி, செல்சி பகுதிகளிலேயே இந்தக் குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றன. முதலில் நியூஜேர்சிப் பகுதியில் குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றது. பின்னர் சில மணி நேரங்கள் இடைவெளியில் செல்சிப் பகுதியில் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இரு சம்பவங்களையும் சேர்த்து 29 பேர் காயமடைந்தனர். எவரும் சாவடையவில்லை. இந்த அசம்பாவிதத்துக்கு எந்த ஆயுத குழுவும் பொறுப்பேற்கவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான பி.பி.சி. வெளிப்படுத்தியது. (ம-ரி4)



# போர் நிறுத்த ஒப்பந்த... மீறியது அமெரிக்கப்...

சிரியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் சிரிய இராணுவத்தைச் சேர்ந்த 80 சிப்பாய்கள் சாவடைந்தனர்.
சிரிய ஜனாதிபதி அசாத்தை பதவி நீக்கம் செய்யும் முனைப்பில் தோற்றம் பெற்ற கலவரக்குழு படிப்படியாக ஆயுதக்குழுவாக மாற்றம் பெற்றது. அமெரிக்க அரசு, சிரிய அரசின் மீது அதிருப்தி கொண்டிருந்ததால் ஆயுதக் குழுவுக்கு உதவியாகத் தனது படையை அனுப்பியது. இதையடுத்து அமெரிக்காவின் மீதிருந்த பகை காரணமாக சிரிய அரசுக்கு தனது படையை வழங்கி உதவி செய்தது ரஷ்யா. இதனால் சிரிய அரசு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு என்பவற்றுக்கு இடையிலான போராக மட்டுமல்லாமல், அமெரிக்கா, ரஷ்யா இடையிலான மோதலாகவும் சிரிய விவகாரம் பார்க்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் சிரியாவில் முகாமிட்டுள்ளதால் நிகழ்கால உலகின் போர்க்களமாக அந்த நாடு கருதப்பட்டது.
ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு மத்தியில் சிரிய அரசுக்கும், ஆயுதக் குழுவுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. சில தினங்கள் நீடித்த இந்த ஒப்பந்தத்தை மீறி அமெரிக்காவும் ஆயுதக்குழுக்களும் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் சிரிய இராணுவத்தைச் சேர்ந்த 80 சிப்பாய்கள் சாவடைந்தனர். இதற்கு ரஷ்யாவும், சிரிய அரசும் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளதுடன் தக்க பதிலடி வழங்கப்படும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்தது.
நிலமை மோசமடைவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதால், ஐக்கிய நாடுகள் சபை
யின் உயர்...
தொடர்பாக...
கூடவுள்ளத...
சிரிய அரசு...
யில் சமாத...
சிரியாவில்...
அமைப்புக்...
படுத்தால...
காலப் பகு...
எதிராக கடு...
டன. இந்த...
மீறியுள்ளத...
அமைப்புக்...
என்ற சந்...
தனது கண்...
இந்தத் தக...
ரொயிட்டர்...

# ஐ.எஸ்.ஐ.எஸ். தொழில்நுட்ப அமைச்சர் அமெரிக்காவின் வான் தாக்குதலில் சாவு

வோஷிங்ரன், செப். 19
அமெரிக்க வான்படைத் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ தலைமையகம் தெரிவித்தது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்புக்கு எதிரான தாக்குதல்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன.
இந்த நிலையில் ஈராக்கின் ராக்கா நகரில், அமெரிக்க வான்படை நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சர் அடில் ஹசன் சல்மான் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ ஊடகப் பேச்சாளர் பீற்றர் கூக் தெரிவித்தார்.
மூத்த உறுப்பினர்களின் சாவு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முடிவுக்கு வழிவகுக்கும். அவர்களின் செயற்பாடுகளை முடக்கும். அந்த வகையில் ஹசன் சல்மானின் சாவு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான பெரும் வெற்றி என பீற்றர் கூக் மேலும் தெரிவித்தார்.
இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான இண்டிபெண்டன் வெளிப்படுத்தியது. (ம-ரி4)



# பிளாஸ்ரிக்குக்குத் தடை பிரான்ஸ் அதிரடி முடிவு

பாரிஸ், செப்.19
பிளாஸ்ரிக் பொருள்களின் உற்பத்திக்கும் பாவனைக்கும் தடை விதிப்பதாக அறிவித்தது பிரான்ஸ். இந்த உத்தரவின் மூலம், உலக அளவில் பிளாஸ்ரிக்குத் தடை விதித்த முதல் நாடு என்ற பெருமை பிரான்ஸுக்குக் கிடைத்தது.
2020 ஆம் ஆண்டில் பிளாஸ்ரிக் அற்ற நாட்டை உருவாக்குவது என்ற நோக்கிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அறியவருகிறது.
இதனால் தற்போதிருந்தே பிளாஸ்ரிக் பொருள்களை அந்த நாடு படிப்படியாக குறைக்க ஆரம்பித்துள்ளது. பிளாஸ்ரிக்கை உற்பத்தி செய்வோருக்கும், பாவனை செய்வோருக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளும் அந்த நாட்டில் உருவாக்கப்படவுள்ளன.
பிளாஸ்டிக்கை கட்டுப்படுத்தும் திட்டம் ஒருபுறத்திலும், இயற்கைப் பொருள்களை ஊக்குவிக்கும் திட்டம் மறுபுறத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது.
பிரான்ஸின் இந்த முடிவை ஐரோப்பிய பசுமைப் புரட்சி அமைப்பு வரவேற்றதுடன், ஏனைய நாடுகளும் பிளாஸ்ரிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான இண்டிப்பெண்டன் வெளிப்படுத்தியுள்ளது. (ம-ரி4)

காஷ்மீர் பகுதியில் கட...
ஆயுதக்குழுவுக்கு எதிரா...
பாக்கிச் சூட்டில், சிறுவன்...
ஆவேசமடைந்த மக்கள்...
நேற்றுமுன்தினம் ஆர்ப்...
பொலிஸாருக்...
ஆர்ப்பாட்டத்தி...
கலந்து கொண்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எதிர்ப்பு ஏவுகணையால் பலத்தை வெளிப்படுத்தியது இஸ்ரேலியப் படை

டமஸ்கஸ், செப். 19
சிரியாவிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையை எதிர்ப்பு ஏவுகணையின் மூலம் வானில் வைத்து அழித்து தனது ஆயுத பலத்தை வெளிப்படுத்தியது இஸ்ரேல்.
சிரியாவில் முகாமிட்டிருக்கும் ஐ.எஸ்.ஐஎஸ். அமைப்பினருக்கு எதிராக ஏவப்படும் ஏவுகணைகள் சில இஸ்ரேலின் எல்லைகளுக்கு அருகிலும் வருவதுண்டு. அவ்வாறு தனது எல்லைக்கு அருகில் வந்த ஏவுகணையொன்றை எதிர்ப்பு ஏவுகணையை ஏவி வானில் வைத்து அழித்துள்ளது இஸ்ரேலியப் படை. இஸ்ரேல் எதிர்ப்பு ஏவுகணையின் மூலம் ஏவுகணையொன்றை அழிப்பது இதுவே முதல் தடவை. (ம–ரி4)



# ஒபாமா அமெரிக்கரே ட்ரம் அடித்தார் பல்டி

வோஷிங்ரன், செப். 19
அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா, அமெரிக்காவில் பிறக்கவில்லை எனத் தெரிவித்து சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த ட்ரம், தற்போது அவர் பிறப்பால் அமெரிக்கரே என பல்டி அடித்தார்.
எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக உள்ள ட்ரம், கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒபாமா அமெரிக்காவில் பிறக்கவில்லை என்றும், அமெரிக்க குடியுரிமைக்கு அவர் தகுதியானவர் அல்லர் என்றும் தெரிவித்து சர்ச்சையை ஏற்படுத்தினார். ஒபாமா, தான் ஹவாயில் பிறந்ததாகத் தெரிவித்த போதிலும் ட்ரம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.
இந்த விடயம் தற்போது நடைபெற்றுவரும் தேர்தல் பரப்புரையிலும் பரவலாக எடுபடுகிறது. ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி, அமெரிக்க ஜனாதிபதியின் பிறப்பை கேள்விக்கு உட்படுத்தியவரை எவ்வாறு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று விவாதித்து வந்த நிலையில், ஒபாமா அமெரிக்கரே என ட்ரம் ஏற்றுக்கொண்டார். ஒபாமாவை அமெரிக்கர் என ஏற்றுக்கொண்டமைக்கான காரணத்தை ட்ரம் வெளிப்படுத்தில்லை. இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான சி.என்.என். வெளிப்படுத்தியது. (ம–ரி4)

ந்த்தை
படை


...மட்டக் குழுக்கூட்டம் குறித்த விடயம் ... பேச்சுவார்த்தை நடத்த விரைவில் ...ு.
..., ஆயுதக்குழு இரண்டுக்கும் இடை...ானம் ஏற்பட்டால் மட்டுமே, ஈராக், ... முகாமிட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். ...கு எதிரான போராட்டத்தை தீவிரப் ...ம். சமாதன ஒப்பந்தம் நிலவிய ...தியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ...மையான தாக்குதல்கள் நடத்தப்பட் ...நிலையில் ஒப்பந்தத்தை அமெரிக்கா ...நால், அமெரிக்கா, ஐ.எஸ். ஐ.எஸ். ...க்கு ஆதரவாகச் செயற்படுகிறதா ...தகம் எழுந்துள்ளது என்று ரஷ்யா ...டன அறிக்கையில் குறிப்பிட்டது. ...கவலை பன்னாட்டு ஊடகமான ...ஸ் வெளிப்படுத்தியது. (ம–ரி4)

...ந்த வெள்ளிக்கிழமை
...க பொலிஸார் நடத்திய துப்
... ஒருவன் சாவடைந்ததையடுத்து
..., குறித்த சிறுவனின் சடலத்துடன்
...ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.
...கு எதிராக நடத்தப் பட்ட இந்த
...ில் 5 ஆயிரம் பொதுமக்கள்
...ண்டனர். (ம–ரி4)

ஜப்பானில்

# மர்மமாகச் சாவடையும் குதிரை லாட நண்டுகள்

டோக்கியோ, செப். 19
ஜப்பானில் கடல் உயிரியான குதிரைலாட நண்டுகள் பெரும் தொகையில் சாவடைந்து கரை ஒதுங்குவது அவதானிக்கப்பட்டது.
முட்டையிடும் காலத்தில் குறித்த வகை நண்டுகள் சில உயிரிழப்பது வழமை. அவ்வாறு உயிரிழக்கும் நண்டுகளின் எண்ணிக்கை பொதுவாக 50 தொடக்கம் 60 வரையில் இருக்கும். ஆனால், சமீப காலமாக கிட்டத்தட்ட 500 குதிரைலாட நண்டுகள் சாவடைந்து கரை ஒதுங்கியுள்ளன. மாறிவரும் காலநிலை மாற்றம், போசாக்கு குறைபாடு, முட்டை இடுவதற்கான இடவசதி இன்மை ஆகிய காரணங்கள் அவை சாவடைவதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான இன்டிபென்டன் வெளிப்படுத்தியுள்ளது. -(ரி4)






# ரோம்

## மருத்துவமனைக்கு பயணம் மேற்கொண்ட பாப்பரசர்

ரோம், செப்.19
இத்தாலியின் ரோம் நகர மருத்துவமனைக்கு அண்மையில் திடீர் பயணத்தை மேற்கொண்ட பாப்பரசர், அங்கு பிறந்த குழந்தைகளைப் பார்வையிட்டு ஆசிர்வதித்தார்.
வத்திக்கான், ஒவ்வொரு மாதத்திலும் ஒரு நாளை பாப்பரசரின் வெளியக பணிக்காக ஒதுக்கியுள்ளது. இதன் அடிப்படையில் இந்த மாதம் குறித்த மருத்துவமனைக்கு பாப்பரசர் பயணம் மேற்கொண்டார். இதன்போது அங்கிருந்த குழந்தைகளை தொட்டுத்தூக்கி ஆசிர்வதித்தார். (ம–ரி4)





# லிபியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு குவியவுள்ளனர் அகதிகள்

ரோம், செப்.19
லிபியாவில் இருந்து இன்னமும் 2 லட்சத்து 35 ஆயிரம் அகதிகள் ஐரோப்பாவுக்கு செல்லவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளிப்படுத்தியது.
லிபியாவில் அதிகரித்துவரும் போர்ச் சூழலும், மனிதக் கடத்தலும் காரணமாகவே அங்குள்ள மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று குவிகின்றனர். கடந்த வருடம் ஐரோப்பாவுக்குள் வந்த அகதிகளில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 400 பேர் லிபியாவிலிருந்து சென்றவர்களாவர். இந்த நிலையிலேயே ஐக்கிய நாடுகள் சபை அந்த நாட்டிலிருந்து இன்னும் 2 லட்சத்து 35 ஆயிரம் அகதிகள் ஐரோப்பாவுக்கு செல்லவுள்ளதாக வெளிப்படுத்தியது.
லிபியாவிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்களை அடிப்படையாக வைத்தே ஐக்கிய நாடுகள் சபை குறித்த கருத்தை தெரிவித்தது. இந்தத் தகவலை டெய்லி மெய்ல் வெளிப்படுத்தியது.
லிபியாவைத் தவிர, ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்தும் ஐரோப்பாவுக்குள் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பெயரின் முதல் எழுத்துக் கூறும் ஜோதிட இரகசியம்



A- உங்கள் பெயர் இந்த எழுத்தில் தொடங்கினால், நீங்கள் உறுதியான ஒரு நபராக இருப்பீர்கள். அதிகார தோரணையுடன் பிறரை வழி நடத்துவீர்கள். மேலும் தீரச்செயல் புரியத் தொடர்ந்து முயற்சிப்பீர்கள். வாழ்க்கையின் மீது வலுவான ஈடுபாடு இருக்கும். அதே போல் யாரையும் சாராமல் இருப்பீர்கள். உங் களின் துணிவு, நேர்மை மற்றும் உடல் அம்சம் ஈர்க்கும் வகையில் அமையும்.

B-நீங்கள் உணர்சிபூர்வமானவர்களாக இருப்பீர் கள். நீங்கள் தைரியசாலியாகவும், அன்பு உள்ளவரா கவும் இருப்பீர்கள். உங்கள் காதலரின் அன்பின் வெளிப்பாடாக கிடைக்கும் பரிசுகளை சந்தோசத் துடன் பெற் றுக் கொள்வீர்கள். உங்களை மற்றவர் கள் செல்லம் கொஞ்ச வேண்டும் என நினைப்பீர்கள். அதே போல் உங்கள் துணையை எப்படிக் கொஞ்சு வது என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

C- பல்துறை அறிவு வாய்ந்த, தகுதி வாய்ந்த, தி றமைசாலியாக இருப் பீர்கள். மென்மையானவராக இருந்தாலும், பணத்தை தண்ணீராக செலவழிப் பீர்கள். இயற்கை மற்றும் பிறவிப் பேச்சாளராக இருக்கும் நீங்கள், சொல் வன்மை பேச்சாற்றலுடன் விளங்குவீர்கள்.

D- அளவுக்கு அதிகமான மனத் திண்மை, வணிகம் புரியும் அறிவு, ஆளுமை போன்ற குணங்களை கொண்டிருப்பீர்கள். தொழில் புரியப் பிறந்தவர் நீங் கள். சுத்தத்தின் மீது அதிகமாக கவனம் செலுத்துவீர் கள். நம்பிக்கை மிக்கவராக விளங்கும் நீங்கள் பிறருக்கு உதவிடும் குணத்தைக் கொண்டிருப்பீர்கள்.

E- பிறரிடம் தொடர்பு கொள்வதில் வலிமை மிக்க வராக இருப்பீர்கள். மென்மை மிக்கவரான நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விரும்புவீர்கள். ஈர்ப்பு சக்தி யைக் கொண்டவரான நீங்கள் நண்பர்களை சுலப மாக பெறுவீர்கள். காதல் என்று வரும்போது நீங்கள் அவ்வளவு உண்மையாக இருப்பதில்லை.

F- திட்டமிடுவதில் நீங்கள் சிறந்தவராகவும், நம் பிக்கை மிக்கவராகவும் விளங்குவீர்கள். பிறரின் மீது அக்கறை கொள்வதிலும், உங்களைச் சுற்றி யுள்ளவர்களை சந்தோசமாக வைத்திருப்பதிலும், நீங்கள் வல்லவராக இருப்பீர்கள். தன்னம் பிக்கையாளரான நீங்கள் சிறந்த நகைச்சுவை உணர்வுடன் விளங்குவீர்கள்.

G- நோக்கத்துட னான நபராக இருப்பீர்கள் நீங்கள். புதுமை, இயல்பு மற்றும் தத்துவம் மிக்கவராக இருப்பீர்கள். வரலாற்றை படிக்கவும், பயணம் செய் யவும் விரும்பு வீர்கள். மதத்தின் மீது அதிக ஈர்ப்புடன் இருப்பீர்கள். உங்கள் போக்கில் வாழவே விரும்பு வீர்கள். உங்கள் விடயத்தில் அடுத்தவர்களின் அறி வுரைகள் மற்றும் தலையீட்டை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.

H- நீங்கள் பணத்தை சேர்ப்பவராக இருப்பீர்கள். புதுமையான சக்தியை குறிக்கும் இந்த எழுத்து. சுயமாக ஊக்கு வித்து பிறரை சிறப்பான முறையில் கட்டுப்படுத்து வீர்கள்.

I- நல்லது எதுவோ அதற்காக வாழ்பவர் நீங்கள். மேலும் தைரியசாலியாக திகழ்வீர்கள். அழகு மற் றும் நேர்த்தியுடன் இருப்பீர்கள். இதர புதுமையான துறையில் சிறந்த எதிர் காலம் அமையும்.

J- உங்களுக்குத் தேவையானவற்றை அடையும் வரை எதற்காகவும் விட்டு கொடுக்காமல், அதை அடைய ஓடுவீர்கள். உங்களுக்கு ஏற்ற வகையிலான அல்லது உங்களை விட உசத்தியான ஒரு வாழ்க் கைத் துணையை தான் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்.

K- ஒளிவு மறைவுடன் வெட்கப்படும் குணத்தை கொண்டவர் நீங்கள். நீங்கள் திடமானவராக இருந் தாலும், உணர்ச்சி பூர்வமானவராக இருப்பீர்கள். சூழ் நிலைக்குத் தகுந்தவாறு சுய உறுதி கூறும் நபராகவும், பொறுப்பை கையில் எடுக்கும் நபராகவும் விளங்கு வீர்கள். வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக எதையாவது செய்ய வேண்டும் என நினைப்பீர்கள்.

L- வாழ்க்கையில் நிலைகொள்ள அதிகமாகத் துடிப்பீர்கள். அடிக்கடி உறவுகளை மாற்றும் நீங்கள் எவயாருடனும் ஆழமான காதலைக் கொண்டிருக்க மாட்டீர்கள். தொழில் ரீதியாக அதிகமாக சம்பாதிக்கும் உங்களுக்கு நல்ல விதமான தொழில்/ வேலை அமையும்.

(தொடரும்)

கே.தருமன்

# அனைத்துச் சமூக விடுதலைக்குமான கருவி கல்வியே ஆகும்

கல்வியே ஒருநாட்டின் அபிவிருத்திக்கான அச்சாணி. அதனை விருத்தி செய்வதன் மூலம் நாட்டை விரை வாக அபிவிருத்தி செய்ய முடி யும். கல்வி மனிதனின் அடிப் படை உரிமைகளில் ஒன்றா கும். இதன் விளைவாக ஒரு நாட்டிலுள்ள சகலருக்கும் கல்வி வழங்குவது அந்த நாட்டு அரசின் கடமையாகின் றது. தேசிய அபிவிருத்தித் திட் டங்களில் எல்லோருக்கும் சம மான கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நடைமுறை முன் னுரிமை பெற்றது.

நாட்டிலுள்ள சகல மக்களுக் கும் சமமான வாய்ப்புக்களு டன் கூடிய இலவசக்கல்வியை வழங்க அரசுகள் முயன்ற போதும் எந்த நாட்டிலும் சம னாக கல்வி சகல மக்களையும் சென்றடையவில்லை. இலங் கையில் கல்வியில் சம சந்தர்ப் பம் எனும் பயணத்தில் உரிய பயனடைவதற்கு நாம் பல புதிய செயற்றிட்டங்களையும் உயர்கல்வி வாய்ப் புக்களையும் விரிவாக்க வேண்டும் என நோத் லங்கா (IIT) நிறுவன கலாநிதிப்பட்ட (M.Ed, B.Ed) உடற்கல் விப்பட்தாரிகளுக்கான பதிவுச் சான்றிதழை வழங்கி உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதாகிருஷ்ணன் உரையாற்றினார்.



மேற்படி விழா நோத் லங்கா பல்கலைக்கழக (IIT) நிறுவனப் பணிப்பாளர் ஏ.எஸ்.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்வியியல் கலாநிதி முதுகலைமாணி கல்விமாணி, MSC கணினிக்கல்வி பட்டப்படிப்பு மாண வர்கள் பங்குபற்றினர். இந்தப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறை பீடாதிபதி கலாநிதி பா. தனபாலன் தனது உரையில் மனிதனது அனைத்து வகையான விடுதலைக்கும் கல்வியே முதன்மைக் கருவியாகும். அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாசார விடு தலைக்கு வழிகாட்டுவது கல்வியே ஆகும். எனவே, எமது இனத்தின் அபிவிருத்திக்குக் கல்வியே ஆதாரமாகும். நாம் அனைவரும் எவ்வாறான வேறுபாடுகளையும் களைந்து ஒன்றிணைந்து எமது மண்ணில் கல்வியை வளர்க்கப் பாடுபடுவோம். அதற்கான நல்ல சந்தர்ப்பமாக இன்றைய விழா அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

எமது மண்ணில் கல்வியை வளர்க்க வேண்டியுள்ளது. பாடசாலைகள் போரால் சிதைவடைந்துள்ளன. பௌதிக வளங்கள் போதாமல் உள்ளது. மனித வளங்களை விரைவாக விருத்தியடைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்குப் பெருமளவு நிதியைப் பெற்று அபிவிருத்தியை நோக்கி நகர வேண்டியுள்ளது. இந்த அபிவிருத்திக்கான கல்வி நகர்வுக்கு கல்வி இராஜாங்க அமைச்சரின் உதவி எமக்குத் தேவையாகவுள்ளது எனத் தெரிவித்தார் தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். தொடர்ந்து உரையாற்றிய இந்தப் பல் கலைக்கழகத்தின் நிபுணத்துவ ஆலோசகரும், சர்வதேச கற்கைகளின் இணைப்பாளருமான பேராசான் கலாநிதி த.கலாமணி உரையாற்றும் போது இன்றைய அறிவுப் பொருளாதார உலகில் உயர்கல்வி வாய்ப்புக்களை விரி வாக்க வேண்டியுள்ளது. இன்றைய காலத்துக் குத் தேவையான பட்டப் பாட நெறிகளை இந் தப் பல்கலைக்கழகம் ஆரம்பித்திருப்பது வர வேற்கத்தக்கது. இதற்குக் கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் அனைத்து உள்ளங் களின் ஆதரவு கிடைத்தமை வரவேற்கத்தக்க தாகும். நாமனைவரும் ஒருங்கிணைந்து சிறந்த அபிவிருத்தியான நாட்டைக் கட்டி எழுப்ப முனைவோமாக எனத் தெரிவித்தார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் MSC கணினிக் கல்வி, MBA, மற்றும் உயர்கல்விக் கற்கை நெறிகள், இந்திய மத்திய அரசின் தொழிற்பயிற்சி கற் கைகள், இலங்கை மானிய ஆணைக்குழு, கல்வி உயர் கல்வி அமைச்சு, மாகாணக்கல்வியமைச்சின் அங்கீ காரத்துடன் நடைபெற்று வருகின்றன. மேலும், எமது வட மாகாணத்தில் மனித வளம் நிறைவாகவுள்ளது. இந்த வளத்திற்கு முறையான தொழிற்பயிற்சி வழங்கி குறைந்த முதலீட்டுடனான தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்பை வழங்கமுடியும். இதற்கு எமது பல் லைக்கழகம் பல செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத் தவுள்ளதாக இந்தப் பல்கலைக்கழக பணிப்பாளர் ஏ.எஸ்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். இறுதியில் கல்வி இராஜாங்க அமைச்சர், வி.எஸ். இராதா கிருஷ் ணன். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரினால் பல் கலைக்கழகப் பதிவு ஆவணங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசேகரன் சக்தீனா

# 200 ஆண்டுச் சாதனையுடன் யாழ். மத்திய கல்லூரி

இரண்டு நூற்றாண்டுகள் வெற்றிப் பயணத்தை நிறைவு செய்திருக்கிறது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. வடமாகாணத்தின் முதற் பாடசாலை என்ற பெருமையைப் பதிவு செய்து மகிழ்ந்திருக்கின்றது. கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்வுகளை நடத்தி உள்ளது. 9ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முதன்மை விருந்தினராக வரவழைத்து வெகு விமரிசையாக இருநூறாவதாண்டு நிறைவை பாடசாலையின் தற்போதைய அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனின் திட்டமிடலில் நடத்தியுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் இருநூறு ஆண்டுகள் வெறுமனே கூறக்கூடியவை அல்ல.

டச்சுக்காரர் வசமிருந்த இலங்கை 1802 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடம் வீழ்ச்சியடைந்த பின்னர் வெஸ்லியன் மிஷனரியைச் சேர்ந்த மதபோதகர் ஜேம்ஸ் லின்ச் (Rev.james lynch) இலங்கைக்கு வந்தார். இவரே 1816ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ். மத்திய கல்லூரியை ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பித்தார். ஆங்கிலப்பாடசாலை என்று அழைக்கப்பட்டு வந்த பாடசாலை 1817ஆம் ஆண்டு வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலை (Wesleyan English School) என்று பெயர் மாற்றப்பட்டது. இலங்கை வரலாற்றில் மிகப்பழைய ஐந்து கல்லூரிகளில் இதுவும் ஒன்று எனப் பதியப்பட்டுள்ளது.

1826ஆம் ஆண்டு பீட்டர் பேர்சிவல் பாதிரியார் யாழ்ப்பாணம் வந்தார். அப்போதைய ஆங்கிலேய ஆட்சி, அவரை யாழ். மாவட்டத்தலைவராக நியமித்ததுடன் யாழ். வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலைக்கு அதிபராகவும் நியமித்தது. யாழ்.வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையை யாழ். மத்திய பாடசாலை என்ற பெயருக்கு மாற்றினார். 1889ஆம் ஆண்டு மீண்டும் பள்ளியின் பெயர் மாற்றப்பட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாக அது உருவெடுத்தது.

காலப்போக்கில் பேர்சிவல் பாதிரியார் தமிழ்ப்புலமைபெற்ற பெருமகனாகத் திகழ்ந்தார். அத்துடன் சைவத்தையும் தமிழையும் தமது இருகண்களெனப் போற்றி வளர்த்த ஆறுமுகநாவலரின் துணையுடன் வேதாகமத்தைதமிழில்மொழி பெயர்த்து உதவினார். யாழ். மத்திய கல்லூரி தமிழுக்கு வழங்கிய மிகப் பெரிய சேவையாகும்.

பீற்றர் பேர்சிவல் அதிபராக இருந்த காலத்தில் யாழ். மத்திய கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்ததுடன். கல்லூரி மாணவர்களை அந்தப் பல்கலைக் கழகத்தால்நடத்தப்பட்ட பரீட்சைக்கும் தோற்றச் செய்தார்.

இவரின் வழிநடத்தலில் தொடர்ந்து பாடசாலையின் வளர்ச்சி காலப் போக்கில் தலைசிறந்த கல்விமான்களை, வைத்தியர்களை, பொறியியலாளர்களை, கணக்காளர்களை இன்னும் பல உயர்பதவிகளில் பணிபுரியும் பலரையும் உருவாக்கி விட்டிருக்கிறது.

யாழ். மத்திய கல்லூரி படிப்பில் மட்டுமல்லாமல் விளையாட்டுக்களிலும் தன் பெயரைப் பதிவு செய்திருக்கிறது. யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் மற்றும் உதை பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களையும் சாரணர் இயக்கத்தையும் வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்திய பெருமை யாழ். மத்திய கல்லூரியையே சாரும். கல்லூரியின் அதிபர்களான பிரட்ரிக் வெப்ஸ்டர் மற்றும் அருட்திரு கபீரியல் லீஸ் ஆகியோர் முறையே 1881, 1894 ஆம் ஆண்டுகளில் இந்த விளையாட்டுக்களை மத்திய கல்லூரியின் மைதானத்தில் ஆரம்பித்து வைத்தனர். சாரணர் இயக்கத்தை அறிமுகப்படுத்தி 100 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன.

கல்லூரியின் மாணவர்களின் சாதனைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. 1958ஆம் ஆண்டு கல்லூரியின் பழைய மாணவன் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் டோக்கியோவில் இடம் பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி உயரம் பாய்தலில் இலங்கைக்கு முதன் முதலாக தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொடுத்திருந்தார். இன்னுமொரு சாதனையை மாணவன் விஷ்ணுகாந்த் கடந்த ஆண்டு நிகழ்த்தியிருக்கிறார். இந்தியாவின் பூனே நகரில் இடம்பெற்ற பளுதூக்கும் போட்டியில் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றார்.

“ கல்லூரியின் மாணவர்களின் சாதனைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. 1958ஆம் ஆண்டு கல்லூரியின் பழைய மாணவன் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் டோக்கியோவில் இடம் பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி உயரம் பாய்தலில் இலங்கைக்கு முதன் முதலாக தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொடுத்திருந்தார். இன்னுமொரு சாதனையை மாணவன் விஷ்ணுகாந்த் கடந்த ஆண்டு நிகழ்த்தியிருக்கிறார். இந்தியாவின் பூனே நகரில் இடம்பெற்ற பளுதூக்கும்போட்டியில் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றார்.

இப்படிப் பல சாதனைகளை நிலைநாட்டும் யாழ். மத்திய கல்லூரி வடமாகாணத்தில் விளையாட்டுத்துறைக்கான ஒரே ஒரு ஆண்கள் கல்லூரியாக கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சாதனைகள் மகிழ்வித்தாலும் இந்தக் கல்லூரி வேதனையையும் அனுபவித்துக்கொண்டுதானிருக்கிறது. பின்தங்கிய மாவட்டங்களில் இருந்து வந்த பல மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். அவர்களுக்கான மாணவர் விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் எமது பெறுபேறுகளை உயர்த்த முடியும் என்கிறார் இப்பொழுது அதிபராகக் கடமையாற்றும் சி.க.எழில்வேந்தன்.

மேலும் கூறிய அவர் “எமது கல்லூரியின் விடுதியானது நீண்ட வரலாறு கொண்டது. பெருமளவான தென்பகுதித் தமிழ் சிங்கள மாணவர்கள் விடுதியில் தங்கிக் கல்வி கற்றுள்ளார்கள்.

கடந்த போரில் எமது விடுதிக்கட்டடம் முற்றாகச் சேதமடைந்து விட்டது. இன்று தற்காலிகமாக வசதிகளற்ற பழைய விஞ்ஞான ஆய்வு கூடத்தில் மாணவர்கள் தங்கியிருந்து கற்கின்றார்கள். அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே அந்த விடுதி இயங்குகின்றது. விடுதிகள் இருந்தால் மாணவர்கள் இன்னும் வளர்ச்சி அடைவார்கள்.

எமது மாணவர்கள் துடுப்பாட்டம் உதை பந்து, கூடைப்பந்து,மேசைப்பந்து மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

க.பொ.த.சாதாரண தரத்தில் அதிகளவானோர் சித்தியடைந்து உயர்தரத்துக்குச் செல்கின்றார்கள். உயர்தர கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைத்துறைகளில் கணிசமான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகின்றார்கள். இவ்வருடம் தொழில் நுட்பத் துறையையும் ஆரம்பித்துள்ளோம்.

இந்த இருநூறாவது ஆண்டில் நாம் எமது நாட்டின் கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ற வகையிலும் பன்னாட்டு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய வகையிலும் மாணவர்களின் பாடவிதான, இணைப்பாட விதான செயற்பாடுகளை நவீன மயப்படுத்தவேண்டி உள்ளது. இங்கு ஆரம்பப் பிரிவிலும் இடைநிலைஉயர்தரப்பிரிவிலுமாக 2050 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்” - என்றார்.

யாழ். மத்திய கல்லூரியின் இருநூறாவது ஆண்டின் வெற்றிக்குள் தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்கள் மத்தியின் பழைய மாணவர்கள். இப்பொழுது மக்கள் வங்கியில் பணிபுரியும் தெய்வேந்திரன் ஹர்சன் தன் பள்ளி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

“நான் 1993ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டிலே இந்தப்பாடசாலையில் இணைந்து கொண்டேன். முதல்நாள்நான் அழுதுகொண்டு தான் சென்றேன். அப்படி சென்றவர்கள் பாடசாலையை விட்டு விலகுகின்றபோது என்ன மன நிலையில் வெளியேறுகிறார்கள் என்பது தான் பாடசாலை எமக்குத் தந்த அன்பு வரப்பிரசாதமாக இருக்கின்றது.” - என்றார்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# ஏழைக்குக் கொடுப்பது இறைவனுக்குக் கொடுப்பதாகும்




முருகேசர் அந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவிவசாயி. தனது தோட்டத்தில் கூடுதலாக அவர் வாழைகளையே பயிரிடுவது வழக்கம். அவரது தோட்டத்து வாழைகளும் நன்கு செழிப்பாக வளர்ந்து குலைபோட்டன. அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் இவரை வாழைத்தோட்டத்து முருகேசர் என்றுதான் அழைப்பார்கள்.

ஆலயத்திருவிழாக்களின் காலம் அது என்பதால் வாழைப்பழங்களுக்கு நல்ல கிராக்கி இருந்தது. இவரது பழக்குலைகள் வாட்டசாட்டமாக இருப்பதால் நல்ல காசும் கைக்குவந்தது. ஒவ்வொருவருடமும் ஒரு பெரிய வாழைக்குலையைத் தனது ஊருக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் கோயிலுக்குக் கொடுப்பதை முருகேசர் நேர்த்தியாகக் கொண்டிருந்தார்.

இந்த முறையும் கோயிலுக்குகென்று விட்டு வைத்த வாழைக்குலை முற்றிப்பழுக்க ஆரம்பித்தது. அதைப் பக்குவமாக வெட்டி சருகுகளால் சுற்றி கிராமத்திலிருந்த ஏழை இளைஞன் ஒருவனிடம் கொடுத்து நேர்த்திவைத்த கோயிலில் கொடுத்துவிட்டு வருமாறு கூறினார்.

ஏழை இளைஞன் ஓர் அப்பாவி. படிப்பறிவற்றவன். சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஜனசஞ்சாரமற்ற வயல் சூழ்ந்த இடத்தில் குறிப்பிட்ட கோயில் இருந்தது. வாழைக்குலையை தோளில் சுமந்தபடி கால்நடையாகவே கொண்டு சென்றான்.

கடும் வெயிலில் நடந்தபடியால் தலையைச்சுற்றிக் கொண்டு வந்தது. வயல் கிணற்றடியில் நின்ற பூவரசு மரத்தின் கீழ் வாழைக்குலையை இறக்கிவைத்து விட்டு தண்ணீரைக்குடித்தான். 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்பார்கள். மெதுவாக சருகுகளுக்கூடாக கையை நுழைத்து இரண்டு பழங்களை பிடுங்கிச்சாப்பிட்டுவிட்டு, கொண்டுபோய் கோயிலில் சேர்த்தான். நிர்வாகி வாழைக்குலையை உள்ளே கொண்டுசென்றவர் சிறிது நேரத்தின் பின் வெளியே வந்து கடிதம் ஒன்றை இளைஞனிடம் கொடுத்து முருகேசரிடம் கொடுக்கும்படி கொடுத்தார். அப்பாவி இளைஞனும் முருகேசரிடம் வந்து கோயில் நிர்வாகியின் கடிதத்தைக் கொடுத்தான். அதனைப் பிரித்து வாசித்த முருகேசருக்கு கோபம் கோபமாக வந்தது. ஏனெனில், அந்தக்கடிதத்தில் வாழைக்குலையில் இரண்டுபழங்கள் பிடுங்கப்பட்டிருந்தன என்று எழுதப்பட்டிருந்தது. "கோயிலுக்கு நேர்ந்து வைத்த வாழைப்பழத்தைக் கடவுளுக்குப் படைக்க முன் உன்னை யார் சாப்பிடச்சொன்னது" என்று சொல்லி அவனுக்குக் கூலியையும்கொடுக்காது அடித்துத் துரத்தினார்.



இரவு நித்திரையில் இருந்த முருகேசரின் கனவில் கடவுள் தோன்றி நீ எனக்காக அப்பாவி இளைஞன் மூலமாக அனுப்பிவைத்த வாழைப் பழங்களில் இரண்டு மட்டுமே எனக்குக்கிடைத்தன எனத் தெரிவித்தார். அதாவது பசியால் வாடிய அந்த ஏழை இளைஞன் சாப்பிட்டதே தனக்குக் கிடைத்தது எனத் தெரிவித்திருந்தார். விடிந் ததும் முரு கேசர் ஏழை இளைஞனைத் தேடிச் சென்று அவனிடம் மன்னிப்புக் கேட்டதுடன் கூலியையும் இரண்டு மடங்காகக் கொடுத்தார். நாம் சிறுபொருளையாவது அடுத்தவருக்குப் பயன்படும் வகையில் உரிய நேரத்தில் கொடுத்தால் அது இறைவனுக்குக் கொடுப்பதற்குச் சமமாகும்.

*-கௌசி*



# வரலாற்றில் இன்றைய தினம்

1796 – அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வோஷிங்டனின் பிரியா விடை உரை, அமெரிக்க மக்களுக்கான திறந்த மடல் எனும் தலைப்பில் நாடு முழுவதும் அச்சிட்டு வழங்கப்பட்டது.

1893 – 1893ஆம் ஆண்டின் தேர்தல் சட்ட வரைபின் மூலம் நியூசிலாந்தில் பெண்களுக்கான வாக்குரிமைக்கு ஆளுநர் சம்மதம் தெரிவித்தார்.

1944 – கேட்ஜன் போறஸ்ற் போர்: நாஸி ஜேர்மனி மற்றும் அமெரிக்க இடையே சண்டை தொடங்கியது.

1959 – பாதுகாப்புக் காரணங்களுக்காக டிஸ்லி லாண்ட் டுக்கான நிகிடா குருஷேவின் வருகைக்குத் தடை விதிக்கப்பட்டது.

1978 – சொலமன் தீவுகள் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்து கொண்டது.

1985 – மெக்ஸிக்கோ நகரில் ஏற்பட்ட பலமான நிலநடுக்கத்தில் ஆயிரக் கணக்கானோர் சாவடைந்ததுடன் 400 வரையான கட்டடங்கள் அழிவடைந்தன.

2002 – உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளை இராணுவம் மக்களுக்கு விடுவிக்குமென தளபதி பல்லகல சந்தேசியவுக்கு பேட்டி.

2002 – வடக்கு – கிழக்குப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளுக்கு சீனா உதவும் எனத் தெரிவிப்பு.

2006 – காணாமல் போனோரை வெளிப்படுத்தக்கோரி மரியன்னை ஆலயத்தில் ஜிம்பிறவுண், விமலதாஸ் ஆகியோர் காணாமல்போய் 31ஆம் நாளில் உணவு தவிர்ப்புப் போராட்டம்.

2006 – முகமாலை முன்னரங்கப் பகுதிக்கு தென்பகுதிச் செய்தியாளர்களைக் கூட்டிச் சென்ற வேளை ஷெல் வீச்சு. படையினர் 4 பேர் சாவு. 12 பேர் காயம். ஏனையோர் அருந்தப்பு.



# நல்ல பாம்பு

கொடிய விஷம் உள்ள பாம்புகளில் ஒன்று, நாகப் பாம்பு. இது, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கக் கண்டங்களில் காணப்படும். நல்ல பாம்பு என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இந்த நாகப் பாம்புகளின் சிறப்பு, அதன் தலைப் பகுதியில் காணப்படும் தசை. இது, மிக நன்றாக விரியக் கூடியது. எதிரியை அச்சுறுத்துவதற்காக, இந்த தசைப் பகுதியை விரிக்கும். அப்போது, இதன் தலைப் பகுதி மிகப் பெரிதாக இருக்கும். இதையே, பாம்பு படம் எடுக்கிறது என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட மக்கள் சபிக்கப்பட்டவர்களா?

கடந்த காலப் போரினால் உடைமைகள் அனைத்தையும் இழந்த பல்வேறு தரங்களையும் சேர்ந்த கிளிநொச்சி மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களுடைய பகுதிகளில் மீள்குடியேறினர். கடின உழைப்பால் சிறுகச் சிறுக சேமித்து, அம்பாள்குளம் பகுதியில் சந்தை ஒன்றை ஆரம்பித்தனர். சிறிது காலம் கிளிநொச்சியின் பிரதான சந்தையாக அந்த சந்தையின் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன. பின்னர் அதில் போதியளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியாது, போனதால் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் கிளிநொச்சியில் பொதுச்சந்தை இயங்கிய இடத்தில் (டிப்போச் சந்திக்கு அருகாமையில்) மீண்டும் சந்தையை அமைத்து தரும்படி கோரிக்கைகளை முன்வைத்தனர். அதையடுத்து சந்தையும் அங்கு அமைக்கப்பட்டது. பிரதேச சபையினால் மீன் மற்றும் மரக்கறி வியாபாரத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது. ஏனைய வர்த்தகர்கள் தங்களுக்கான கட்டட வசதிகளைச் செய்து தருமாறு கோரிக்கைகளை முன்வைத்தனர். அந்த கோரிக்கைகள் மறுக்கப்பட்டு தற்காலிக தகரக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்தத் தகரக் கொட்டில்களில் நீண்ட காலமாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வர்த்தகர்கள் சற்று முன்னேற்றம் அடைந்தனர். இந்த நிலையில் தற்போது குறித்த வர்த்தகர்கள் மீண்டும் தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் மீண்டும் தமது பழைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை மிகவும் துர்பாக்கியமான நிலையே.

ஆம்; கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கிளிநொச்சி பொதுச்சந்தையில் பாரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. இந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தேவையான வசதிகள் இல்லாததன் காரணமாக வேகமாக பரவிய தீ இரண்டு மணித்தியாலங்களுக்குள் பொதுச்சந்தையில் உள்ள சுமார் 125 கடைகளை எரித்து நாசமாக்கியது. சம்பவ இடத்துக்கு உடனே வந்த வர்த்தகர்கள் தங்களுடைய பொருள்களை மீட்பதற்காகவும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும் போராடினர். அவர்கள் எவ்வளவுதான் முயற்சித்த போதிலும் எந்தப் பயனும் அற்று சுமார் 125 கடைகளும் அவற்றுள் இருந்த பொருள்களும் தீயில் கருகின. தமது கண்ணெதிரே தங்களுடைய சொத்துக்கள், அழிவதைத் தாங்கிக் கொள்ள முடியாத வர்த்தகர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். தீ விபத்து ஏற்படுவது வழமையானதே என்றாலும், அது பரவ ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டியது அவசியம். அதற்கு அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக உள்ள பிரதேச சபையிடம் அனைத்து வசதிகளும் இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

கிளிநொச்சி பொதுச்சந்தை, கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இருந்தும் தீயணைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், பிரதேச சபையினால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது போனமையாலேயே அது வேகமாகப் பரவி பெருநாசம் ஏற்படுத்தி வைத்துள்ளது. தனியே ஒரு தண்ணீர் பவுசரை வைத்துக் கொண்டு பற்றிப் பரவும் தீயைக் கட்டுப்படுத்த முடியுமா? பிரதேச சபையினர் தங்களிடம் உள்ள ஒரு தண்ணீர் பவுசரைப் பயன்படுத்தித் தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர். முடியவில்லை. பின்னர் இராணுவத்தினருடைய உதவி பெறப்பட்டே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கிளிநொச்சி இராணுவத்தினரிடம் உள்ள வசதிகள் கூட, மக்களுக்கு சேவையாற்றும் எங்களது பிரதேச சபைகளில் இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயம். கடந்த வருடமும் கிளிநொச்சி விசுவமடுவில் ஏற்பட்ட தீ விபத்தை தடுப்பதற்கு வசதிகள் இருக்காததால் அங்கு தொடர்ச்சியாக இருந்த 3 கடைகள் தீயில் கருகி நாசமாகின. கிளிநொச்சிக்கு என ஒரு தீ அணைக்கும் இயந்திர வசதி தேவை என்ற கோரிக்கை அவ்வேளையிலும் முன்வைக்கப்பட்டது. அபிவிருத்திக் கூட்டங்களிலும் இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்தப்படவில்லை. இன்று கிளிநொச்சி பொதுச்சந்தையிலும் இதே நிலை. தீயணைப்பு இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமைக்குக் காரணம், அதிகாரிகளுடைய அசண்டையீனமா? அல்லது அதில் என்ன சிக்கல் உள்ளது என்பது புரியவில்லை. போரினால் பாதிக்கப்பட்டு மீண்டெழும் நாங்கள் இவ்வாறான அனர்த்தங்களினாலும் பகுதி பகுதியாக பாதிப்படைந்து கொண்டுதான் இருக்கின்றோம். இதற்கு நிரந்தரத் தீர்வு இல்லை என்றால், எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எங்களுடைய பிரதேசம் அபிவிருத்தி காணாது, மக்கள் மீண்டும், மீண்டும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களாகவே வாழநேரிடும். எமது குழந்தைகள் பஞ்சம், பசி, பட்டினியால் நோய்வாய்ப்படுவர். உள்நாட்டுப்போர், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, இப்போது தீயினால் அனர்த்தம். மக்களுக்கு வாழ்வாதார உதவிகளாக கோழிக்குஞ்சுகளையும், ஆடு மாடுகளையும் வழங்கும் எங்களுடைய தமிழ் அரசால் இந்த மாவட்டத்துக்கு ஒரு தீயணைப்பு இயந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாதா? அந்த அளவுக்குச் சபிக்கப்பட்டவர்களா நாங்கள்?





# பெண்களே! உங்கள் கைகளிலேயே உங்கள் வாழ்க்கை

உடுவிலூர் கலா

பெண்களின் வாழ்வு இன்று பெரும் பிரச்சினைகளைஎதிர்நோக்கியுள்ளது. பெண் அடைபட்டுக் கிடந்த காலத்தில் இருந்த நிம்மதி, தற்போது பெண்களுக்கு இல்லை. பெண்கள் தாமே தமது வாழ்வைக் கண்ணீராக்குகின்றனர். விடுதலை என்பதைத் தப்பாகப் பயன்படுத்தி, அலைபேசி, முகநூல் என்பவற்றுக்கு அடிமையாகித் தமது வாழ்வை நரகமாக்குகின்றனர். கல்வி கற்க முடியாத காலத்தில் பெண்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். முடிவு ஒன்றை எடுக்க முடியாதிருந்தனர். கல்வியில் முன்னேறி விண்வெளியில் பயணிக்கும் இந்த வேளையிலும், பெண் அடிமை வாழ்வு வாழ்கின்றாள். முடிவு எடுக்க முடியாது இருக்கிறாள். ஆட்டுவித்தால் ஆடும் பொம்மையாக தலையாட்டுகிறாள் என்றால், இன்னமும் பால் நிலை சமத்துவம் இல்லை என்பதே உண்மை.

இன்றைய பெண்பிள்ளைகள் நிறையவே படிக்கிறார்கள். ஆனாலும், காதல் வசப்படும் காரணத்தால் தாம் கற்ற கல்வியின் தரத்தை இழக்கின்றனர். என்னதான் படித்திருந்தாலும் காதலின்போது தன்னை, தன்னிலையை மறந்து ஆணின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றாள். சரியோ, பிழையோ தலை ஆட்டுகிறாள். தன் மதம் மறந்து ஆணின் மதத்தைப் பின்பற்றுகிறாள். பெற்றோரை வெறுக்கிறாள். உடன்பிறப்புக்களை, உறவுகளை மறக் கிறாள். அவனே உயிர் என தனது பெயர் முன்னால் ஆணின் பெயரை ஏற்கிறாள். இவையெல்லாம் பெண் தன்னைத்தானே அடிமைப்படுத்தும் செயல். திருமணம் என ஆணும், பெண்ணும் இணையும்போது பெண் பலவித மாற்றங்களுக்கு உள்ளாகின்றாள். கணவனுக் காகத் தன்னை முழுமையாக மாற்றுகின்றாள். இன்றும்கூட, பெரும்பாலான பெண்கள் திருமணத்தின் பின் அடங்கி வாழ்வது மட்டுமல்ல, பெற்ற தாயைக்கூட வரவேற்று உபசரிக்க முடியாத நிலையில் உள்ளனர். எத்தனையோ பெற்ற மனங்கள், தாம் பெற்ற பெண் பிள்ளையின் வாழ்க்கையின் வேதனையால் மனம் பதறி வாழ்கின்றனர்.

கணவனோடு வாழ முடியாத சமநிலை ஏற்படும்போது பெற்ற தாயிடமே அடைக்கலம் ஆகின்றனர். இன்றைய ஆடம்பர மோகம் பல பெண்களின் வாழ்வில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்துகிறது. அறிவை வளர்த்துக் கொண்ட பெண்களே திருமணமாகி குழந்தைகளோடு குடும்பம் நடத்தும் ஆண்களைக் காதலிப்பதும், விவாகரத்துப் பெற்ற ஆண்களைக் காதலிப்பதும், வயது முதிர்ந்த ஆண்களைக் காதலிப்பதும், தப்பான வழிகளில் திருமணம் செய்வது மாக தமது அருமருந்தன்ன வாழ்வை நாசமாக்கிப் பெற்றோருக்கு வேதனையையும், அவமானத்தையும் ஏற்படுத்துகின்றனர். இதன் விளைவாக மணமுறிவு ஏற்பட்டு, நீதிமன்ற வாசலை நோக்கி ஓடுவதும், தற் கொலையை நாடுவதுமாக பெண்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது.

பெண்களே சிந்தியுங்கள். போனால் திரும்பாதது மானம். ஒவ்வொரு பெண்ணும் மன நிறைவான வாழ்வு வாழவும், உலக இன்பங்களை அனுபவிக்கவும் முழு உரித்துடையவள். தப்பான வாழ்க்கைத் தெரிவில் அகப்பட்டு அடிமை வாழ்வு வாழும் நிலையை முற்றாகத் தவிருங் கள். ஆணுக்காக மட்டும் வாழும் நிலையை விடுத்து முதலில் உங்களுக்காக வாழுங்கள். உடற்சுகத்தை மட்டுமே முதன்மைப்படுத்தும் வாழ்வு குறித்துச் சற்றேனும் விருப்பம் கொள்ளாதீர்கள். பெண்களே காதலிப்பது தவறு என்று நான் கூறவில்லை. பெற்றுவளர்த்துக் கொஞ்சி அரவணைத்து வளர்த்த பெற் றோரைத் திடீரென முளைத்து நிற்கும் உறவுக்காகத் தொலைத்துவிடாதீர்கள். ஒரு பெண் ணின் சந்தோசமான வாழ்வுக்கு பெற்றோர் ஆசீர்வாதமே சிறந்த அத்திபாரம். பெண்களே, உங்களின் வாழ்வை ஒருபோதும் நாசமாக்காதீர்கள். காதலிக்கும் பெண்ணுக்குத் துணை நிற்காதீர்கள். தவறான பாதையில் பயணிக்கும் பெண்ணுக்கு அவளது தவற்றைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்த வேண்டும். நல்லவற்றை எடுத்துக்கூற வேண்டும். பெண் திருமண வாழ்வில் தன்னுடைய கௌரவத்தோடு அடிவைக்க வேண்டும். காலம் முழுக்க வாழும் வாழ்வில் சலனமற்று இருக்க வேண்டுமெனில் பெற்றோர் ஆசீர்வாதத்துடன் இருவீட்டார் சம்மதத்துடன் மணவாழ்வுக்காய் இணைய வேண்டும். திருமணம் துணையை ஏற்படுத்துகிறது. அத்துணையோடு மகிழ்வாய் வாழ்ந்து ஆல் போல் தழைத்து அறுகு போல் வேருன்றி பதினாறு செல்வமும் பெற்று வாழவேண்டுமெனில், வாழ்க்கைத் தெரிவு சரியானதாக அமைய வேண்டும்.

அழகான பெண்களே வாழ்க்கை உங்கள் கைகளில். வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி சாவதற்கல்ல. உங்கள் கரங்களில் உள்ள வாழ்க்கையை கசக்கி எறிந்துவிடாதீர்கள். வாழ்க்கை ஒன்று வேண்டும் என்பதற்காக அடிமை வாழ்க்கை வாழாதீர்கள். உங்களை உங்கள் உரிமைகளை சுதந்திரங்களை விட்டுக் கொடுத்துத் வாழாதீர்கள். இருகை தட்டி ஓசையைப் பெற்று வாழ நிதானமாய் இருங்கள். பெண் என்பதற்காய் விட்டுக் கொடுத்துத் தலையசைத்து வாழ்ந்தால் கண்ணீரும் வேதனையும் தான் மிஞ்சும். ஆணாதிக்கம் உயிர்ப்படையும். உன் உரிமைகளைக் காத்துக்கொள்வாயா பெண்ணே..?

அழகான பெண்களே வாழ்க்கை உங்கள் கைகளில். வாழ்க்கை வாழ் வதற்கேயன்றி சாவதற்கல்ல. உங்கள் கரங்களில் உள்ள வாழ்க்கையை கசக்கி எறிந்து விடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சிரம சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள், செலவில் சிக்கனம் பேணுவது நல்லது. நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**இடபம்:** மனதில் ஒருமுகத்தன்மையுடன் செயற்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**மிதுனம்:** கடினமான பணிகளையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். அரசியல்வாதிகளுக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு உண்டாகும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவு சுமாராக இருக்கும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில், எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும். இலாபம் சுமார். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை உருவாகும். வருமானம் அதிகரிக்கும். வீடு வாகனத்தில் கூடுதல் வசதிபெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** பகைவரும் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். இலாபம் அதிகரிக்கும். மனைவி விரும்பிக் கேட்ட ஆடம்பர பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்கள் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி அதிகரிக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கத் தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களால் உதவி உண்டு.

**தனுசு:** பேச்சில், நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் செலவுக்குப் பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், திட்ட மிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** பேச்சில், விரக்தியின் தன்மை வெளிப்படலாம். பொது இடங்களில் விவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள், செலவில் சிக்கனம் கடைபிடிப்பது நல்லது.

**மீனம்:** முன்யோசனையுடன் செயற்பட்டு வருவீர்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில் வியாபாரத்தில், அதிர்ஷ்டகரமாக இலாபம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

பாம்பு பாம்பாவே வந்து பழிவாங்கினா அது ஹொலிவுட்



பாம்பு பெண்ணா மாறி வந்து பழிவாங்கினா அது பொலிவுட்..!

"எனக்கு நைட்லகூட
தூக்கமே வரமாட்டேங்குது..!
ஏனெண்டே தெரியாம
ரொம்பக் குழம்பிக்கிட்டே இருந்தேன்...!
அப்புறம் தான் தெரிஞ்சுது
"உள்ளத்தில் நல்ல உள்ளம்
உறங்காது" என்று விதியே
இருக்காமே!!"



தூக்க மாத்திரை இல்லாமல் தூங்குவது எப்படி...???



அந்தக் காலம் VS இந்தக் காலம்.... பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை

முதலாளி வேலைக்காரனிடம் ஒரு கண்ணாடி வாங்கிவரச் சொன்னார். "கண்ணில போடுற கண்ணாடியா..." எண்டு கேட்டதும் முதலாளி கோபத்தில்... "யோவ்... ஷேவ் பண்றதுக்குய்யா... என் முகம் தெரியுறமாதிரி ஒண்டு வாங்கிவா..." என்று அனுப்பி வைத்தார். வேலைக்காரன் திரும்பி வரவேயில்லை. நீண்ட நேரத்திற்கு பின் மூச்சுவாங்க வெறுங்கையோடு வந்த வேலைக்காரனிடம் "ஏன் கண்ணாடி வாங்கலை எண்டு" கேட்டார் முதலாளி. "பஜார் முழுக்க அலைஞ்சேன் முதலாளி.. ஆனாலும், நீங்க கேட்டமாதிரி கண்ணாடி கிடைக்கலை. அதுதான் வாங்கலை" "ஏன்... பெருசாவா இருந்திச்சு.." "இல்லை... சின்னதாத் தான் இருந்திது..." "பிறகு ஏன் வாங்கலை...?" ... எல்லாக் கண்ணாடியிலும் என் முகம் தான் தெரிஞ்சுது. அதுதான் வாங்கலை..."

Gowtham :) @dhanushkraja
நமக்கெல்லாம்
ஏன் இந்த வாழ்க்கை?
அப்படி எண்டு கேக்க வைக்கிது
நம்ம கோவத்தைக் கட்டுப்படுத்திக்
கடக்கிற ஒவ்வொரு நொடியும்...!
44 17



## கணவரை பிரியும் ரஜினியின் மகள்

விவாகரத்துப் பற்றிய செய்தி உண்மையானதே என சௌந்தர்யா அஸ்வின் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். சூப்பர்ஸ்டார் ரஜினியின் இரண்டு மகள்களும் சினிமாவில் தங்களுக்கான இடத்தைப் பிடிக்கப் போராடி வருகிறார்கள். இதற்கிடையில் இவர்கள் குடும்ப வாழ்க்கையும் பிரச்சினையில்லாமல் போய்க்கொண்டிருந்தது.

ஆனால், தற்போது என்ன நடந்ததோ தெரியவில்லை, ரஜினியின் இளையமகள் சௌந்தர்யா ரஜினிகாந்த், தனது கணவர் அஸ்வின் ராம்குமாரை விவாகரத்துச் செய்ய முடிவு எடுத்துள்ளாராம் என செய்திகள் வெளியாகின. இந்த நிலையில், "அவ்வாறு வெளியான செய்தி உண்மை தான், நாங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாகப் பிரிந்து தான் வாழ்கிறோம் எனவும், இது எங்கள் சொந்த வாழ்க்கைப் பிரச்சினை. தயவு செய்து இதற்கு மரியாதை கொடுங்கள்" என்றும் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவினை வெளியிட்டுள்ளார் என சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | | 6 | 7 |
| | | | | | 5 | 2 | | |
| 1 | 2 | | | 3 | | 8 | 4 | |
| 7 | | 2 | | | 9 | | | |
| 8 | | | | 5 | | | | 4 |
| | | | 4 | | | 9 | | 1 |
| | 8 | 1 | | 7 | | | 3 | 2 |
| | | 5 | 2 | | | | | |
| 2 | 3 | | | 9 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 1 | 2 | 4 | 5 | 8 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 1 | 8 | 9 | 5 | 3 | 2 |
| 8 | 2 | 5 | 3 | 7 | 6 | 4 | 9 | 1 |
| 5 | 9 | 3 | 7 | 1 | 4 | 6 | 2 | 8 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 3 | 9 | 7 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 5 | 2 | 3 | 1 | 4 |
| 3 | 5 | 9 | 4 | 2 | 7 | 1 | 8 | 6 |
| 4 | 1 | 7 | 6 | 9 | 8 | 2 | 5 | 3 |
| 2 | 8 | 6 | 5 | 3 | 1 | 7 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- சட்டையில் தார் கறை பட்டுவிட்டால் துவைப்பதற்கு முன் கொஞ்சம் மண்ணெண்ணெயைத் தார் பட்ட இடத்தில் தேய்த்து பின்னர் சோப்புப் போட்டுத் துவைத்தபின் ஒரு துண்டு எலுமிச்சைப் பழம் பிழிந்து அலசிக் காய வைத்தால் தார் கறை அடியோடு போய்விடும்.
- துணியில் வெற்றிலைக் கறை படிந்தால் உடனே நீரில் அலசினால் கறை நீங்கிவிடும். கறைபிடித்து வெகுநேரம் ஆகிவிட்டால் சுண்ணாம்பு நீரை அதன் மீது ஊற்றித் தேய்த்துக் கசக்கிப் பிழிந்தெடுத்தால் கறை இல்லாமல் போய்விடும்.
- துணிகளைத் துவைக்கும்போது ஒரு துணியில் இன்னொரு துணியின் சாயம் பட்டுவிட்டால், கொஞ்சம் கடுக்காயை ஊற வைத்த தண்ணீரில் சிறிது நேரம் ஊற வைத்து எடுத்தால் அது போய்விடும்.
- வெள்ளைத் துணிகளைத் துவைக்கும்போது சிறிது உப்பைத் தண்ணீரில் சேர்த்துக்கொண்டால் துணிகள் தூய வெண்மையாக மாறிவிடும்.
- சலவை இயந்திரத்தில் துணி துவைக்கும்போது காலியான ஷம்பூ போத்தலைக் கழுவி அந்தத் தண்ணீரைவிட்டு சலவை செய்தால் துணிகள் 'பளிச்' சென்று நல்ல வாசனையாக இருக்கும்.
- பட்டுத்துணிகளைத் துவைத்து அலசும்போது அந்த நீரில் ஒரு கரண்டி கிளிசரினைக் கலந்து அலசி நிழலில் உலர்த்தினால் சுருக்கம் இல்லாமல் இருக்கும்.
- துணியில் இரத்தக்கறை பட்ட இடத்தில் சுடுநீரில் உப்புப் போட்டுக் கரைத்து ஊற்றி துணியைத் துவைத்தால் கறை போய்விடும்.




# டீப் ஃபிரை எக்



### தேவையான பொருள்கள் :

முட்டை - 5
சோள மா - 2 மேசைக்கரண்டி
பாண் தூள் - 1/2 கப்
துருவிய சீஸ் - 1/2 கப்
எண்ணெய் - பொரிக்க
மிளகுத் தூள் - 1/2 தேக்கரண்டி
உப்பு - சிறிதளவு

### செய்முறை:

1 முட்டையை ஒரு கிண்ணத்தில் உடைத்து ஊற்றி நன்றாக அடிக்கவும். இன்னொரு கிண்ணத்தில் சோள மா, சிறிது உப்பு, மிளகுத் தூள் கலந்து வைக்கவும். மற்றொரு கிண்ணத்தில் துருவிய சீஸ், பாண் தூள், கலந்து வைக்கவும். 4 முட்டையை வேக வைத்து ஓட்டை உடைத்து வைக்கவும். சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றிச் சூடாக்கவும். முட்டையை ஒவ்வொன்றாக எடுத்து அதைச் சோள மாவில் பிரட்டி, முட்டைக் கலவையில் முக்கி, சீஸ் கலவையில் பிரட்டி, எண்ணெய் போட்டுப் பொரிக்கவும். சுவையான டீப் ஃபிரை எக் தயார். சிறு பிள்ளைகளும் இந்த உணவை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

## நாளை
### புரட்டாதி-04

செவ்வாய்க்கிழமை -20.09.2016
திதி: சதுர்த்தி மா.04.31
நட்சத்திரம்: பரணி பி.இ.01.22
ராகுகாலம்: 03.03-04.33 வரை
சுபநேரம்:10.33-12.03 வரை
மஹாபரணி



## நேற்றைய கடலுணவு
### விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 350 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 600 | 500 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 700 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | 400 | – |
| ஒரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 300 | – |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 250 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 80 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 400 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 80 | 60 | 30 | 40 | 90 | 35 |
| கரட் | 100 | 120 | 120 | 100 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 100 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 60 | 80 | 40 | 40 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 50 | 60 | 50 | 50 | 40 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 25 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 100 | 100 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 60 | 40 | 60 | 40 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 120 | 170 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 35 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 300 | 220 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 180 | 120 | 160 | 200 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபிக் லங்காவுடன் சம்பத் கைகோர்ப்பு

சம்பத் வங்கி பி.எல்.சி. தனது "முகவர் வங்கியியல்" தீர்வை அபிவிருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக அண்மையில் எபிக் லங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

நாடெங்கும் அதிகரித்துச் செல்கின்ற வாடிக்கையாளர்களைத் தம்முடைய சேவை சென்றடைவதை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக இது அமைந்துள்ள அதேநேரம், தேசிய தூர நோக்கு அடிப்படையில் நிதிசார் சேவைகளை உட்சேர்த்தலை ஊக்குவிக்கின்ற செயற்பாடாகவும் காணப்படுகின்றது எனக் கூறப்பட்டது.

முகவர் வங்கியியலின் அறிமுகத்துடன், சம்பத் வங்கியானது மற்றுமொரு முதன்முதலான சேவையை நாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்மூலம், வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகள் துறையில் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எபிக் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் உலகத்தரம் வாய்ந்த இந்த புத்தாக்கம் தொடர்பில் சம்பத் வங்கி பி.எல்.சி. முகாமைத்துவ பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி அரவிந்த பெரேரா கூறுகையில், எபிக் லங்கா நிறுவனம் போன்ற இலங்கை தொழில்நுட்பத் துறையில் தலைமை ஸ்தானத்தில் உள்ள ஒரு நிறுவனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளில் சம்பத் வங்கி அடுத்த மட்டத்திற்கு முன்னேறுவதற்கு இவ்வுற்பத்தி நிச்சயமாக வங்கிக்கு உதவும். அது, எம்முடைய சேவை விநியோக வழி முறைகளை மேலும் பலப்படுத்தும் அதே நேரத்தில், செலவுச்சிக்கனமான முறையில் புதிய சந்தைகளுக்கு எமது சேவைகள் சென்றடைவதற்கும் வசதியளிக்கின்றது.

வணிகம்

அதுமட்டுமன்றி இந்த முன்னெடுப்பு, எமது நாட்டின் நிதி உட்சேர்க்கை இலக்குகளை அடைந்து கொள்ளும் விடயத்துக்கும் கணிசமான பங்களிப்பைச் செய்யும்– என்றார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் வங்கியின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரியான நந்த பெர்னாண்டோ கூறுகையில், "எதிர்கால வங்கியியல் போக்குகளுக்கு ஒத்திசைவாக செயற்பட வேண்டுமாயின் சம்பத் வங்கியைச் சேர்ந்த எமக்கு, சௌகரியமான சேவையை வழங்குதல், சேவையின் அடைவு எல்லையை விஸ்தரித்தல், வங்கிச் சேவை கிடைக்காத மற்றும் குறைந்தளவு வங்கிச் சேவையைப் பயன்படுத்துகின்ற பிரிவினருக்குச் சேவையாற்றுதல் ஆகியவை முக்கியமாக முன்னுரிமை அளிக்கப்படும் விடயங்களாக உள்ளன. எனவே தான் இந்த உற்பத்தியில் நாம் உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கின்றோம். இந்தத் தீர்வின் மூலமாக, எமது வங்கியியல் உற்பத்தி, சேவைகளை 'ஒன்லைன்' அடிப்படையில் நிகழ்நேரத்திலேயே விநியோகிப்பதற்கு பல முகவர்களை நியமிக்கவுள்ளோம்–என்றார். (த)

# மொபிடெல் நிறுவனத்தின் மொன்டேரோவை வென்ற விஜித




தேசிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநரான எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டுக்கான காஷ் பொனான்சா சீட்டிழுப்புத் திட்டமானது வாடிக்கையாளரிடையே அதிக பிரபல்யமடைந்து வருகின்றது.

இதன் மூலம் மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். தொலைத் தொடர்புத்துறையின் முன்னோடியான மொபிடெல் நிறுவனம் 2016ஆம் ஆண்டு முழுவதும் 3500 இலட்சம் ரூபா பெறுமதியான பணப்பரிசினை தமது வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்கவுள்ளது.

அத்துடன் மாதாந்தம் தெரிவு செய்யப்படும் மாபெரும் வெற்றியாளருக்கு ரூபா 150 இலட்சம் பெறுமதியான மிட்சுபிசி மொன்டேரோ மோட்டார் வண்டிகளை மாதாந்தம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுவரை 6 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் மொன்டேரோ ரக வாகனங்களை வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த, ஷானிகா ஸ்ரீமாலி, வாரியபொலவைச் சேர்ந்த, ஜே.எம். துஷாந்த ஜயலத், படல்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம். ரோஷான பிரியதர்ஷன மற்றும் நிட்டம் புவ பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி ஆர்.எம்.பீ.பி.பி.குமாரி, தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி பீ.ஏ. குசுமாவதி மற்றும் பதவிய சிறி திஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.டி நிமால் ஜயசிங்க ஆகியோர் கடந்த சீட்டி முப்பில் மொன்டேரோ ரக கார்களை வெற்றி பெற்றிருந்தனர்.

மேலும் 2016ஆம் ஆண்டின் ஜூலை மாதத்துக்கான வெற்றியாளராகக் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த விஜித் ரொட்ரிகோ பெற்றுக் கொண்டார்.

அத்துடன் 2016ஆம் ஆண்டில் மேலும் 5 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஷ் பொனான்சா களியாட்டம் மற்றும் இசை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு விழாவும் குளியாபிட்டிய மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

காஷ் பொனான்சா 2016 பரிசளிப்புதிட்டத்தின் ஜூலை மாதத்தின் மாதாந்தச் சீட்டிழுப்பின் மாபெரும் வெற்றியாளராக களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த விஜித் ரொட்ரிகோ, மிட்சுபிசி மொன்டெரோ மோட்டார் வாகனத்தை மொபி டெல் நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி நளின் பெரேராவிடமிருந்து பெற்றுக்கொண்டார். இதுவரை 7 வெற்றியாளர்கள் மொன்டரோ ரக வாகனத்தைப் பரிசாக பெற்றுள்ளதுடன் 2016 பரிசளிப்புத் திட்டத்தின் மூலம் இதுவரை 2,040 லட்சம் ரூபா பெறுமதி மிக்க பணப் பரிசுகள் 394,056 மொபிடெல் வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (த)

## நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -386.42 |
| ஐ.இராச். (பவுண்டு) | -189.33 |
| ஐரோப்பியா (யூரோ) | -162.51 |
| சுவிஸ் (பிராங்) | -148.56 |
| ஐ.அமெ.(டொலர்) | -145.64 |
| கனடா(டொலர்) | -110.23 |
| ஆஸி.(டொலர்) | -109.14 |
| [illegible] | [illegible] |
| கட்டார் (ரியால்) | [illegible] |

நுட்பம்



## அடுத்த அலைபேசியை அறிமுகம் செய்யத் தயாராகும் சம்சுங்

அப்பிள் நிறுவனத்திற்கு நேரடி போட்டியாகத் திகழும் சம்சுங் நிறுவனம் அண்மையில் பாரிய பிரச்சினை ஒன்றுக்கு முகம் கொடுத்திருந்தது.

அதாவது மின்கல வெடிப்புச் சம்பவங்கள் காரணமாக தான் புதிதாக அறிமுகம் செய்த லட்சக்கணக்கான கலக்சி நோட் 7 அலைபேசிகளை மீளப் பெற்றிருந்தது.

இந்த அலைபேசிகள் அறிமுகம் செய்யப்பட்டதன் பிரதான நோக்கம் அப்பிள் அறிமுகம் செய்துள்ள புதிய அலைபேசிகள் மீதான பார்வையைக் குறைப்பதாகும்.

இந்த எதிர்பார்ப்பில் இடி விழுந்துள்ள நிலையில் உடனடியாக கலக்சி ஏ 8 எனும் மற்றுமொரு அலைபேசியை அறிமுகம் செய்ய அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இப் புதிய அலை பேசியானது 1080 Pixel கொண்ட தொடுதிரையைக் கொண்டதாகவும், Exynos 7420 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM மற்றும் 64GB சேமிப்பு நினைவகத்தினை கொண்டுள்ளது.

இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. (த)

## டுவிட்டரின் அதிரடி மாற்றம் அடுத்த வாரம் நடைமுறைக்கு

பல மில்லியன் கணக்கான பயனர்களைக் கொண்டு தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்ட சமூகவலைத் தளங்கள் வரிசையில் டுவிட்டரும் ஒன்றாகும்.

எனினும் இதில் தரப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணமாகத் தொடர்ச்சியாக பாவிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே செல்கின்றது.


இதனைக் கவனத்தில் கொண்ட அந்த நிறுவனம் அதிரடி மாற்றம் ஒன்றைச் செய்யவுள்ளதாக ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதாவது இதுவரை டுவிட் செய்யப்படும் கருத்துக்கள் 140 எழுத்துக்கள் என்ற வரையறை இருந்தது.

இவ்வரையறைக்குள் இணைய இணைப்புகள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது.

எனவே இதனை மாற்றி இனி 140 எழுத்துக்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படவுள்ளதுடன், வீடியோ, புகைப்படங்கள், இணைய இணைப்புக்கள் என்பன கருத்திற் கொள்ளப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய மாற்றமானது இன்று 19ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தனர். நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் அரசமைப்பு, பொது வாக்கெடுப்பின் ஊடாக மக்கள் அங்கீகாரத்தைப் பெற்றே நடைமுறைக்கு வரும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைத்து விட்டு, அடுத்த வருட ஆரம்பத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பாக அரசு நடத்தும் பொது வாக்கெடுப்பை தோற்கடிக்க கூட்டு எதிர்க் கட்சியினர் தயாராக இருக்கின்றனர்" என்று விமல் வீரவன்ச இதன் போது குறிப்பிட்டார்.

(வ-5)

## பிரபாகரனின்...

ருப்பதாக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

இறுதிக் கட்டப் போரில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படும் 53ஆவது டிவிசனுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, கொழும்பு ஆங்கில வாரஇதழிடம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

"பிரபாகரனின் உடல் தகனம் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர் நாம் அங்கிருந்து விலகி விட்டோம். அந்த இடத்தில் இருந்து நான் ஒரு நினைவுப் பொருளை எடுத்துக் கொண்டேன். பிரபாகரனின் அடையாள அட்டையே அது. அதனை நான் இன்னமும் வைத்திருக்கிறேன். வருங்காலத்தில் அதனை இராணுவ அருங்காட்சியகத்தில் ஒப்படைப்பேன் என்று நம்புகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போரின் இறுதியில் பிரபாகரனிடமிருந்து மீட்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட அவரது கைத்துப்பாக்கி காணாமற் போயிருந்தாக சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(வ-5)

## கிளிநொச்சியிலும்...

ஆண்டு நினைவுநாள், 8 ஆண்டுகளின் பின்னர் நேற்று கிளிநொச்சியில் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது. மலரஞ்சலி, ஈகச்சுடரேற்றல் என்பனவுடன் அகவணக்கமும் நடைபெற்றது.

பாரதப் படைகளுக்கு எதிராக பட்டினிப் போர் நடத்தி வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாள், தமிழர் தேசம் எங்கும் நினைவு கூரப்பட்டு வருகின்றது. 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான பட்டினிப் போர் செப்ரெம்பர் 26 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள், தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிலை கொண்டிருந்த காலத்தில் பேரெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டு வந்தது. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசு பிரகடனப்படுத்திய காலத்திலிருந்து இந்த ஆண்டு வரை நினைவு நாள் பகிரங்கமாக நினைவுகூரப்படவில்லை.

பத்தாண்டுகளுக்குப் பின்னர், நல்லூரில் திலீபன் பட்டினிப் போர் நடத்திய இடத்தில் நினைவு கூரல் இந்த ஆண்டே நடத்தப்பட்டது. இதன் தொடர் நினைவு கூரலாகவே கிளிநொச்சியில் நேற்று நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில், ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் தியாக தீபம் திலீபனுக்கு ஈகச்சுடரேற்றி மலர் அஞ்சலிகளும் இடம்பெற்றது.

(வ-5-21-35)

## காலையிலும்...

இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே, மத்திய வங்கியினால் மேற்படி அறிவுறுத்தல் கிளை முகாமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

வடபகுதியில் செயற்படும் சகல நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள், காலை 8 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரையிலேயே எந்தவொரு நிதி நடவடிக்கைக்காகவும் பொதுமக்களிடம் செல்ல முடியும். இந்த நேரத்துக்கு முன்பதாகவோ அல்லது இதற்குப் பின்னரோ செல்ல முடியாது. வடக்கு மாகாண சபையினால் ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே மேற்படி அறிவுறுத்தல் மத்திய வங்கியினால் பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவை, மக்கள் - கடன் பெற்றவர்கள் தமக்குச் சாதகம் என்று கருதிக் கொள்ளக் கூடாது. கடன் பெற்றவர்கள், அந்தக் கடனை திருப்பிச் செலுத்தியே ஆகவேண்டும். இல்லாவிடின் அதற்குரிய நட்டம் அவர்களுக்குத்தான் ஏற்படும். மக்கள் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முதல் திட்டமிட வேண்டும். பெற்றுக்கொள்ளும் கடன் ஊடாக வருமானத்தை உழைக்க முடியுமா என்ற விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண மக்களிடம் முதன்மைப் பாரம்பரியமாக இருந்து வந்த சேமிப்புப் பழக்கம் - சிறப்பான இந்தக் கலாசாரம் அழிந்தொழிந்து போய்விடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. எந்தவொரு பொருளையும் வாங்குவதற்கு முன்னர், அந்தப் பொருளை வாங்குவதற்காக பணத்தைச் சேமித்து, அதன் பின்னரே அதனைக் கொள்வனவு செய்யும் கலாசாரம் வடபகுதியில் இருந்து வந்தது. தற்போது அந்தக் கலாசாரம் மருவத் தொடங்கியுள்ளது. இந்த விடயங்கள் மத்திய வங்கியினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது கிளை முகாமையாளர்கள், தமக்கு தலைமை அலுவலகத்தினால் அளவுக்கு மீறிய இலக்கு (ராக்கெற்) நியமிக்கப்படுகின்றது. இதுவே இவ்வாறான நிலமைக்கு காரணம் என்று சுட்டிக்காட்டினர். ஏனைய மாகாணங்களுக்கு நிர்ணயிக்கப்படும் இலக்கைப் போன்றே, போரினால் பாதிப்புக்கு உள்ளான இந்த மாகாணத்துக்கும் நிர்ணயிக்கப்படுகின்றது. அது அதிகரித்துச் செல்கின்றது. இதனாலேயே இப்படியான நிலமைகள் ஏற்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். (வ-5)

## வன்னியில்...

கிளை அனுமதியையும் நீக்கப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையிடம் கேட்டுள்ளார் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம்.

இந்த விடயத்தை சாதகமாகப் பரிசீலித்து இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய தலைமை அலுவலகத்தில், நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி விடயம் தொடர்பிலும் பேசப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில், நிதி நிறுவனங்களின் செயற்பாட்டினால் பெண் ஒருவர் தவறான முடிவுக்கு முயற்சித்து, அயலவர்களால் காப்பாற்றப்பட்டிருந்தார். இந்த விடயத்தைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலரினால் மேற்படி கடிதம், மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

போரினால் அதிகம் பாதிப்புக்கு உள்ளான கிளிநொச்சி மாவட்டத்தில் நிதி நிறுவனங்களினால் அறவிப்படும் கடனுக்குரிய வட்டி வீதங்கள் அதிகமாக உள்ளன. மக்கள் இதனால் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றார்கள். இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நிதி நிறுவனங்கள், நிதி நடவடிக்கைக்காக மக்களின் வீடுகளுக்கு செல்வதற்கு நேரம் வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதனை மீறிச் செயற்படும் நிதி நிறுவனங்களின், கிளை அனுமதியை நீக்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுள்ளார்.

மாவட்டச் செயலரின் கோரிக்கையை, இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளை சாதகமாகப் பரிசிலித்து தமது பரிந்துரையுடன் கொழும்புத் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## மக்கள்...

நிலவியது. நேற்றுப் பகல் 12 மணி தொடக்கம் 3 மணிவரை சுமார் 1000 தோட்டத் தொழிலாளர்கள் கண்டி - நுவரெலியா முதன்மைப் பாதையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் காவலில் இருக்கும் போது தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இருப்பினும் இதனை பிரதேச மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை "இது அப்பட்டமான பொய்" என்று மக்கள் வாதிடுகின்றனர்.

இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்கும் பிரதேச வாசிகள், உண்மையை மூடி மறைக்காது, அதைப் பொலிஸார் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியும், நீதி கோரியும் நேற்று முற்பகல் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புஸல்லாவை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள இடத்துக்கு அருகிலுள்ள வீதியை மறித்து ரயர்களை கொளுத்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததால், புஸல்லாவை - கண்டி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், பதற்றமான சூழ் நிலையும் உருவாகியது.

உயிரிழந்த நபருக்கு எதிராக ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் புஸல்லாவை நகரத்தில் வைத்து பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். அவரைப் புஸல்லாவ பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருந்த வேளையிலேயே உயிரிழந்தார்.

சந்தேக நபர் தனது ரீ சேர்ட்டைப் பயன்படுத்தி சிறைக் கதவுக் கம்பியில் தூக்கில் தொங்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதை மக்கள் முழுமையாக மறுக்கின்றனர். இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மக்கள் கூறுகின்றனர். சிறிய கம்பிக் கூண்டில் தொங்கி எப்படி உயிரிழந்திருக்க முடியும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், அமைச்சர் திகாம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மக்களுடன் பேச்சு நடத்தினர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட அனைவரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினர்.

இதுபற்றி அமைச்சர் திகாம்பரம் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தார். சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று பொலிஸ்மா அதிபர் உறுதியளித்ததையடுத்து, மாலையில் ஆர்ப்பாட்டக் காரர்கள் கலைந்து சென்றனர்.

'எனது தம்பியை கைது செய்யும்போதும் பொலிஸார் தாக்கினர். சிறைக்குள் வைத்தும் அடித்தனர். எனவே, இது கொலையாகத்தான் இருக்கும்" என்று உயிரிழந்தவரின் அண்ணன் வாக்குமூலம் அளித்துள்ளார் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ். இராஜரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவத்தை அடுத்து அந்தப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப் பட்டது.

(வ-5,4)

## எங்கள்...

நடைபெற்றது.

முல்லைத்தீவு உட்பட வன்னியில் பாதிக்கப்பட்டவர்கள் இணைந்து ஏற்பாடு செய்த, இந்த விள க்கம் கோருவதற்கான சந்திப்புக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டனர்.

இந்த சந்திப்பில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மருத்துவர் சி. சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா, மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அன்ரனி ஜெகநாதன், கந்தையா சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனிவரும் காலங்களிலாவது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டு அரசிடம் பரிந்துரைகளை முன்வைக்குமாறு காணாமற் போனோரின் உறவினர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் தெரிவித்தபோது, உங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான நாங்கள் எடுக்கும் எந்த முயற்சியும் உங்களுக்கு நன்மைகளை பெற்றுத்தருவதற்காகவே இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது சட்டத்தில் எவ்வளவு சாதகமாக வரும் உள்ளிட்ட விடயங்களை விளக்கினார். இதன்போது மக்களும் தமது நிலைப்பாடுகளையும் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த ஜூலை மாதம் முதலாவது விளக்கம்கோரும் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

(வ- ரி7)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணம்மா இராமலிங்கம்

மலர்வு 27 . 06 . 1932



உதிர்வு 16 . 09 . 2016

ஆலங்குழாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணம்மா இராமலிங்கம் கடந்த (16.09.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற க.இராமலிங்கத்தின் (ஓய்வுபெற்ற லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மலேசியா), பொன்னம்மா, முருகேசபிள்ளை (ஆசிரியர்), இராசம்மா, கனகசபாபதி ( முன்னாள் அதிபர் - மகாஜனக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோசனா, கேமாலினி, தேவதாஸ் (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), கண்ணதாஸ் (டென்மார்க்), சுஜாதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் விமலராணி, பிரியதர்சினி, பவானி, சந்திரகாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டினேஸ், செரா, சுசானா, பிரவீன், பிரித், சாரங்கன், றிதிகா, டிலானி, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனிக்காவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.09.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கொட்டுப்பனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(I/4724) (11,18)

021 224 3315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குண்டு**

சங்கானை பிரதான வீதியில் வீடு வாடகைக்குண்டு. (அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது)

**077 623 7037**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கந்தையா தவம்

### (பவுண்ராஜ்)

(பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்)



உற்றநோய் தோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (குறள்- 261)

**மண்ணில்**
**01.01.1942**



**விண்ணில்**
**30.09.2015** தித்:- திருதியை

நீங்கா நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**குடும்பத்தினர்.**

34/1, கலைமகள் வீதி,
அரியாலை.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி கற்பகம் செல்லமுத்து

கடந்த 21.08.2016 அன்று எங்கள் அன்புத்தெய்வம் இறந்த செய்தி கேட்டு இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட் கிழமை மு.ப. 7 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கரையிலும் சபிண்டீ கரணக்கிரியைகள் நாளை (20.09.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

போதரமடம்
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

# ஆண்டு எட்டு ஆகியும் ஆறாத நினைவுகளுடன்.......

தோற்றம் 29.06.1940 மறைவு 17.10.2008



## அமரர் கந்தையா சந்திரசேகரா

(ஓய்வு பெற்ற அதிபர் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

திதி – திருதியை
(19.09.2016)

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருமாய்
எமக்கு வழிகாட்டியாய் இருந்து
எட்டு வருடமாகியும் எம்
உள்ளத்தை விட்டகலா நினைவுகளுடன்

அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.

உங்களின் மலர்பாதம்
போற்றி வணங்குகின்றோம்.
குடும்பத்தினர்.

## கொடுத்த...

வடக்கிலுள்ள 28 பிரதேச சபைகளுக்கு நடப்பு ஆண்டின் மே மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையிலான நிதியில், மே மாதத்துக்குரிய நிதி முற்கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் மேற்படி நிதியில், தமது சபையில் எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறிய திருத்த வேலைகள் - சீரமைப்புக்களை மேற்கொள்ள முடியும். சபையின் வளங்களைப் பயன்படுத்தி இதனை முன்னெடுக்க வேண்டும்.

கொழும்பு அரசினால் ஜூலை மாத இறுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேற்படி நிதி விடுவிக்கப்பட்டது. ஆனால் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் வேலைகள் எதுவும் செய்யப்படவில்லை. கொழும்பு அரசுக்கு ஓகஸ்ட் மாத இறுதியில் அனுப்பி வைக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே மாதத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யப்படவில்லை என்பதால், கொழும்பு அரசு அதற்கு அடுத்த மாதங்களுக்குரிய நிதியை நிறுத்திவைத்துள்ளது. இந்த நிதி ஊடாக மேற்கொள்ளப்படும் வேலைகளில் இலாப அடைவுமட்டம் கிடையாது என்பதால், உள்ளூராட்சி மன்றங்கள் இவற்றில் பெரியளவில் அக்கறை காண்பிக்கவில்லை என்று, வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து மகேந்திரன்



சித்தன்மாவடி கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து மகேந்திரன் நேற்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தாதேவியின் அன்புக் கணவரும் நிலக்ஷன் (நியூ உதயன் பப்ளிக்கேசன் சாவகச்சேரி கிளை) ருக்ஷன் அகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தலிங்கம், அமிர்தநாதன், சிவயோகமலர், அற்புதராணி, சிவகௌரி (ஆசிரியர்-வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), ஆறுமுகம், தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் தேவவதனாவின் அன்புச் சகோதரனும் சாந்தனா, மிதுஷா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சித்தன்மாவடி வீதி, கல்வயல்,**
**சாவகச்சேரி.**

தகவல்: குடும்பத்தினர்.
**077 5614593**

# மரண அறிவித்தல்

## திருமதி அழகம்மா(சேனாதி) இராசையா

(சித்தன்கேணி ஸ்ரீ நாககன்னி அம்மன் ஆலய தலைவி)

**பிறப்பு**
**17.03.1939**

**இறப்பு**
**18.09.2016**



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா இராசையா நேற்று (18.09.2016) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் இந்திரன் ஐயா, இராசாத்தி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சறோஜினி மற்றும் விமலா, வசந்தி, சாந்தினி(இத்தாலி), ஜெயந்தி, கணேசரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் துரைராசா, நவரத்தினம் (இத்தாலி), நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனபாலசிங்கம், காலஞ்சென்ற புஸ்பராசா மற்றும் ஜெயந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் நிர்மலா, சுரேஸ்கரன்(சுவிஸ்), தனுராஜ் (சுவிஸ்), தனுசியா, நிசாந்தினி, தனூபன் ஆகியோரின் பேர்த்தியும் சுரேஜனின் (சுவிஸ்) பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளான் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible] வீதி.**
**ஸ்ரீ நாககன்னி அம்மன் கோயிலடி,**
**சித்தன்கேணி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறித்து...

மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் அரச அதிகாரிகளுக்கு இடையே சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தலைமையில், யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார், யாழ். குடாநாட்டில் தமிழ் மக்களின் 75 வீடுகள் - காணிகளை அவர்களின் இணக்கம் இல்லாமல் கைப்பற்றி வைத்திருக்கின்றனர். இவற்றுக்கு வாடகையாக 500 ரூபாவும், ஆயிரம் ரூபாவுமே செலுத்துகின்றனர். ஆனால் அந்த வீட்டின் உரிமையாளர்கள் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரையில் வாடகை கொடுத்து வாழ்கின்றனர் - என்று குறிப்பிட்டார். இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சாகல, பொலிஸார் வைத்திருக்கும் காணிகள், வீடுகள் தொடர்பில் அறிவேன். அப்படியான இடங்களில் தற்போது பொலிஸ் நிலையம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அவை நிர்மாணிக்கப்பட்டதும், பொலிஸார் அந்தக் கட்டடங்களுக்குச் செல்வார்கள். மக்களின் காணிகள் - வீடுகள் கையளிக் கப்படும் - என்றார். (வ-5-10)

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் தர்மராஜா
(உரிமையாளர் Saranya Motors Jaffna)



தோற்றம் 15. 03.1958 மறைவு 18.09.2016

யாழ்ப்பாணம் தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், தற் போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மராஜா (18.09.2016) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுகந்தாவின் அன்புக் கணவரும் நிவேதனா, சரண்யன் ஆகியோரின் அன்புத் தந்தை யும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான ஏழாலை மேற்கு சிதம்பரப்பிள்ளை - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமி, தர்மகுமார், காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் தர்மானந்தன், தர்மராணி, தர்மாம்பிகை, தர்மசீலன், தர்மபாலன் ஆகியோரின் சகோதரனும் ஆவார். .

அன்னாரின் பூதவுடல் 20.09.2016 செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்துக்கு (பன்னாலை வாசம் தாவடி தெற்கு கொக்குவில்) கொண்டுவரப்படும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை வாசம்.
தாவடி தெற்கு, கொக்குவில்.
077 7110697, 071 2828017

தகவல் :
குடும்பத்தினர்

### திருமதி
### ஆனாச்சி பாக்கியம் தம்பிப்பிள்ளை யோசப்



15/19, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனாச்சி பாக்கியம் தம்பிப்பிள்ளை யோசப் நேற்று (18.09. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் தம்பிப்பிள்ளை யோசப் அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன் பாலராஜ், றோஸ் பெலிசிஸ்ரர் (பெரிய தங்கச்சி), குணகுந்தா (பொன் றோஸ்),சிலுவைராணி மொனிக்கா (ராணி), காலஞ்சென்றவர்களான புளோறன்ஸ் நிர்மலா(பூபதி), கொன்சலா புவனராஜேஸ் (ராஜேஸ்) மற்றும் மெயிலி றோஸ், சில்வெஸ்ரர் ஞானதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/19, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி
### அம்பிகை புவனேந்திரன்



சோதிவேம்படி மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகை புவனேந்திரன் நேற்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் புவனேந்திரனின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - பத்மாவதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்புமருமகளும் நிரஞ்சன் (ஜேர்மனி), நிர்மலன் (ஜேர்மனி), நிரூபன் ஆகியோரின் அன்புத்தாயும் நீலறோகினி, தர்சினி, இன்பவதனி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புச் சகோதரியும் நவரட்ணராஜாவின் மைத்துனியும் பவனொளி பவனின் பெரியதாயும் சுகன்யா, சோமியா, நிதர்ஷன், நிதுர்ஷா, சுதர்சன், அபிஷனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மகன் - பு.நிரூபன்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### ஞானேஸ்வரி செல்லையா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம் போக்கட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி செல்லையா நேற்று( 18.09.2016 ) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி– காமாட்சிப்பிள்ளை தம்பதியின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் குலசேகரம், சௌந்தரம்மா, கமலாதேவி, இராஜலட்சுமி, புவனேஸ்வரி, ஜெயமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சேதுப்பிள்ளை மற்றும் புவனேஸ்வரி, சறோசாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சத்தியமூர்த்தி, சாரதாதேவி, சத்தியபாமா, பிரபாகரன், ரதன் , ரம்மியா, காயத்திரி, துவாசினி, அருளினி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சுதாகரன் .சுதர்சினி, உமாகாந்தன் .கிருஷ்ணவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09. 2016 ) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

தகவல்
குடும்பத்தினர்.
0773926455

### வீ.பொ.ஐயாத்தம்பி



தோற்றம் 06 . 04 . 1936 மறைவு 18 . 09 . 2016

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீ.பொ.ஐயாத்தம்பி நேற்று (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வீ.பொ.கார்த்திகேசு, வீ.பொ.சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், உதயகுமார், தனுஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பகீரதனின் (கனடா) அன்பு மாமனாரும், சுபானுஜா, கிரிஷாணி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் காசிப்பிள்ளை, கனகலிங்கம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயில் வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை. (C/26294) (11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



தோற்றம் 17 . 03 . 1936 மறைவு 15 . 09 . 2016

யாழ். சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்கொழும்பில் வசித்தவருமான மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 15.09.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி.மரியாம்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி மேரி திரேசாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெனிஸ்ரன்(பிரான்ஸ்), யாமினி(ஆஸ்திரேலியா), ராஜ்குமார், மிதிலா (லண்டன்) காலஞ்சென்ற ஜஸ்டின் ஆகியோரின் அன்புத் தந்தையும் றஞ்சி, சிறில்குலேந்திரன், ஆனந்தி, ஜீலியஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை, ஜோண்பிள்ளை, ஞானப்பிரகாசம், விஜயரட்ணம் மற்றும் அருளானந்தம், எலிசபெத்ராணி, ஜென்ரிக் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, டெய்சி,இராஜேஸ்வரி,ஜேசுதாசன், விஜயராணி மற்றும் ரூபி, ஜோசேப்பு ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிறிஸ்ரி, ஷிரோமி, கெவின், எய்டன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 20.09.2016 செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லமான 9Keerthisinghe Place, Negombo எனும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No -09, Keerthisinghe Place,
Negombo.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

| | |
|---|---|
| ஜெனிஸ்ரன்(பிரான்ஸ்) | - 336 6165 8230 |
| யாமினி(ஆஸ்திரேலியா) | - 614 7033 9885 |
| ராஜ்குமார் | - 94 77 083 1629 |
| மிதிலா (லண்டன்) | - 447 841 395 278 |

### திருமதி
### ஜெயமணி சின்னத்துரை



உடுவில் தெற்கு, புதுமடம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமணி சின்னத்துரை கடந்த (14.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் கனகம்மா (கனடா) தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்-இலட்சுமி தம்பதியரின் மருமகளும் நிக்சன், ஜெனோரி, பவன் (அபுதாபி), ஜம்சம்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வடிவேல்(அபுதாபி), சர்மிலா, சியா, துஸ்யந்தி (கனடா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தவமணி, தர்மலிங்கம், இந்திராணி (கனடா), சாந்தலிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வைக்சன், டிலக்சன், டினுசன், டிலான்சன், கெவின்சன், வர்கீசன், சஞ்சனா (கனடா), டஜிஸ்ரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உடுவில் தெற்கு, புதுமடம்,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி, அன்னை அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், செப். 19
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அன்னை, கலைமதி அணிகள் வெற்றிபெற்றன.

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், அன்னை அணியை எதிர்த்து கிளிநொச்சி ஐக்கிய அணி மோதியது. இதில் அன்னை விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




# 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னாருக்கு தங்கம்

யாழ்ப்பாணம், செப். 19
மாகாணமட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய பிரியதர்சினி 29 செக்கன்கள் 82 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தைக் கைப் பற்றினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தனுஜா வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தின் சார்பாகக் களமிறங்கிய சௌமியா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# அன்ரனிஸ், மகாத்மா அணிகளுக்கு வெற்றி


யாழ்ப்பாணம், செப். 19
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். அன்ரனிஸ், மகாத்மா அணிகள் வெற்றிபெற்றன.

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் விளான் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நியூவொரியஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்ததினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். அன்ரனிஸ்.

தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி ஜொலி போய்ஸ் அணியை எதிர்த்து மகாத்மா அணி மோதியது. இதில் மகாத்மா அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# யாழ். மத்தியின் மாணவன் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் மாகாண மட்டத்தில் முன்னெடுத்த மேசைப்பந்தாட்டத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் மேசாக் சம்பியனாகத் தெரிவானார்.



யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற இந்த இறுதியாட்டத்தில்மேசாக், யூனியன் கல்லூரி மாணவன்றொசான் மகாநாம பலப் பரீட்சை நடத்தினர். 3:1என்ற செற் கணக்கில் மேசாக் சம்பியனானார். (ம-23)

# கோக்லிக்கு கங்குலி புகழாரம்

கோக்லியின் துடுப்பாட்ட நுட்பங்களை வெகுவாகப் பாராட்டிய கங்குலி, அவரது தலைமைத்துவத்திலும் அதிசயங்களைக் காண்பதாக புகழ்ந்து தள்ளியுள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கங்குலி இவ்வாறு தெரிவித்தார்.

கோக்லியின் துடுப்பாட்ட நுட்பங்கள் வேறொரு தரத்தில் உள்ளது. அவருக்கு நிகராக வைத்து பேசக்கூடிய வீரர்கள் எவரும் தற்போது இல்லை. அடுத்த 10 ஆண்டுகளில் அவர் இந்திய அணிக்காக ஏராளமான ஓட்டங்களைக் குவிக்கப் போகிறார். பற்பல சாதனைகள் அவரது பெயரில் பதிவாகப் போகின்றன.

துடுப்பாட்டத்தில் மட்டுமல்ல தலைமைத்துவத்திலும் அவர் சிறப்பாகச் செயற்படுகிறார். இந்திய டெஸ்ட் அணியை சிறப்பாக வழிநடத்துகிறார்.

கோக்லியின் தலைமையில் இந்திய அணி வெற்றிகளைக் குவிக்கும். அடுத்த 10 வருடங்கள் கோக்லியின் காலமாக விளங்கும் எனக் கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



# உயரம்பாய்தலில் கிளிநொச்சி தங்கம்

யாழ்ப்பாணம், செப். 19
மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான உயரம் பாய்தலில் கிளிநொச்சி மாவட்டம் தங்கப் பதக்கத்தை தனதாக்கியது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பி.பவித்ரா தங்கப் பதக்கத்தையும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சி.ஹெரீனா வெள்ளி பதக்கத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.சுகிர்தா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

# மாகாணமட்ட மேசைப்பந்தாட்டம்; வேம்படி மாணவி சம்பியனானார்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் மாகாணமட்டத்தில் முன்னெடுத்த மேசைப் பந்தாட்டத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி வித்தியராகவி சம்பியனாகத் தெரிவானார்.



யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வித்தியராகவியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி நர்மதா பலப்பரீட்சை நடத்தினார்.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வித்தியராகவி சம்பியனானார். (ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறியது வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 15 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை தவறவிட்டது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி.
திருகோணமலை விவேகானந்தர் வித்தியாலய உள்ளகவிளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில், வட மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு விசாகா கல்லூரி அணி மோதியது. ஒற்றையர் ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற சமநிலையில் இருந்தன. ஆனால் இரட்டையர் ஆட்டங்களை விசாகா கல்லூரி அணி கைப்பற்றியதை அடுத்து 1:3 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி. (ம-422)



## தங்கப்பதக்கத்துக்கான மோதலில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி தங்கப் பதக்கத்துக்கான மோதலில் இன்று களமிறங்குகிறது.
அச்சிலியாகொட மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து குருவிட்டாய மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி முதலிரு செற்களையும் 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இன்று நடை பெறவுள்ள இறுதியாட்டத்தில் குமாரதாஸவெல்ல வித்தியாலய அணியுடன் மோதவுள்ளது.
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி, தனது காலிறுதியாட்டத்தில் கடந்த 4 வருடங்களாக தேசிய மட்டத்தில் சம்பியனான கொழும்பு சிறி மாவோ பண்டாரநாயக்கா அணியை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

## அரையிறுதி வாய்ப்பை இழந்தது கோப்பாய் ம.வி.

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 15வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவில் கோப்பாய் மகா வித்தியாலய அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.
நாத்தாண்டியாவில் நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டமொன்றில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டார நாயக்க நவோதயா பாடசாலை அணி மோதியது. இதில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 0:2 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. (ம-422)

## தேசியமட்ட கரப்பந்தாட்டம் விக்ரோறியா வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் விக்ரோறியாக் கல்லூரி அணி காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேற்றப்பட்டது.
நாத்தாண்டியாவில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து ரன்வெல ராஜசிங்க வித்தியாலய அணி மோதியது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 0:2 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து காலிறுதி வாய்ப்பை இழந்தது. (ம-422)

## சைவத் தமிழ், கோப்பாய் ம.வி. காலிறுதி வாய்ப்பைத் தவறவிட்டன

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு ஆட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலய அணிகள் காலிறுதி வாய்ப்பை இழந்தன.
நாத்தாண்டியாவில் தொடர் நடைபெற்று வருகிறது. காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டமொன்றில் மகரகம சேகர மகா வித்தியாலய அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மோதியது. முதலிரு செற்களையும் 23:25, 19:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மகரகம சேகர மகா வித்தியாலயம் கைப்பற்றியதையடுத்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது.
மற்றொரு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில், வெள்ளவத்தை துன்கிந்த வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் கோப்பாய் மகா வித்தியாலய அணி 0:2 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து காலிறுதி வாய்ப்பை இழந்தது. (ம-422)



பந்தயத்தின்போது சாவடைந்தார் ஈரானின் சைக்கிள் பந்தய வீரர்

## பந்தயத்தின்போது சாவடைந்தார் ஈரானின் சைக்கிள் பந்தய வீரர்

பரா ஒலிம்பிக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சைக்கிள் பந்தயத்தின் போது ஏற்பட்ட விபத்தில் ஈரானின் சைக்கிள் பந்தய வீரர் சாவடைந்தார்.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டியில் ஈரான் வீரர் சராப்ரஸ் பஹ்மான் தனக்கு அருகில் சென்றுகொண்டிருந்த மற்றொரு வீரருடன் மோதி விபத்துக்குள்ளானார். பஹ்மான் பலமாகத் தாக்கப்பட்டதால் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி நேற்றுச் சாவடைந்தார். இதையடுத்து ஒலிம்பிக் கிராமத்தில் ஈரானுக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதியில் அந்த நாட்டின் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. (ம)

## வவு. தமிழ் மத்திய ம.வி. பாதியில் வெளியேறியது

யாழ்ப்பாணம், செப். 19
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கரம் தொடரில் 19வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.
திருகோணமலை விவேகானந்தா வித்தியாலயத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொழும்பு றோயல் கல்லூரி அணி மோதியது. இதில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி 0:2 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. (ம-422)



உயிரிழை அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று நடத்தப்பட்ட ஆண்களுக்கான குண்டுபோடுதலின் போது...(ம-23-108)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளை வெல்வோம்

## அஹமட் தெரிவித்தார்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரைக் கைப்பற்றுவோம் என பாகிஸ்தான் அணியின் தலைவரான அஹமட் தெரிவித்தார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் 24 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் 27 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் தொடரைக் கைப்பற்றுவது தொடர்பாக அஹமட் நம்பிக்கை தெரிவித்தார்.

ரி-20 ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகள் முதல்தர அணியாக உள்ளது. குறித்த வகையிலான ஆட்டத்தில் அந்த அணி மிகவும் வலிமையானது. சகல துறைகளிலும் பலமானது. இதை அறியாமலில்லை. ரி-20 தரப்படுத்தலில் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். தரப்படுத்தலில் முன்னிலைபெற ஓர் தொடரைக் கைப்பற்றுவது அவசியம் தீவுகளுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை மிகையாகவே உள்ளது. இந்த தொடரைப் பயன்படுத்தி தரப்படுத்தலில் முன்னேற்றம் காண்போம் என அஹமட் மேலும் தெரிவித்தார். (ம)





# கத்துக்குட்டியான லெகன்ஸை நொறுக்கியது பார்சிலோனா

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கத்துக்குட்டி அணியான லெகன்ஸை 5:1 என்ற கோல் கணக்கில் நொறுக்கியது பார்சிலோனா.

வழக்கம் போல தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார் மெஸ்ஸி. இந்தக் கோல் 15 ஆவது நிமிடத்தில் பதிவானது. 31 ஆவது நிமிடத்தில் சுவாரஸ், 44 ஆவது நிமிடத்தில் நெய்மர் என அடுத்தடுத்து கோல் மழை பொழிய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது பார்சிலோனா.

இரண்டாம் பாதியின் 55 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி அணியின் நான்காவது கோலை பதிவுசெய்தார். 64 ஆவது நிமிடத்தில் ரபினா கோலொன்றைப் பதிவுசெய்ய 5:0 என்ற கோல் கணக்கில் பலம்பெற்றது பார்சிலோனா. 80 ஆவது நிமிடத்தில் லெகன்ஸின் சார்பாக ஓர் கோலைப் பதிவுசெய்தார் கபிரியேல். முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)

# சந்திமல்லுக்கு அறுவைச்சிகிச்சை



இலங்கை கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் சந்திமல்லுக்கு வலது கையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

உள்ளூர் ஆட்டமொன்றில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது சந்திமல்லின் வலது கையில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு நேற்று சத்திரசிகிச்சை நடைபெற்றது. ஒருமாத காலம் ஓய்விலிருக்குமாறு சந்திமல் அறிவுறுத்தப்பட்டார். (ம)

# பரா ஒலிம்பிக்

## பார்வையற்றவர்களுக்கு விசேடமான பதக்கங்கள்

பரா ஒலிம்பிக் தொடரில், பார்வையற்றவர்களுக்கென பிரத்தியேக பதக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்களால் தமது பதக்கங்களைப் பார்க்கமுடியாவிட்டாலும் பதக்கம் எழுப்பும் சத்தத்தைக் கேட்டு அறிந்துகொள்ளும் விதத்தில் குறித்த பதக்கங்கள் உருவாக்கப்பட்டன.

தங்கப்பதக்கத்தில் 28 சிறிய இரும்புப் பந்துகளும், வெள்ளிப்பதக்கத்தில் 20 பந்துகளும், வெண்கலப் பதக்கத்தில் 15 பந்துகளும் வைக்கப்பட்டுள்ளன. இதனால் வெற்றியாளர்கள் தமது பதக்கங்களை காதருகில் கொண்டுசென்று அசைப்பதன் மூலம் பதக்கம் எழுப்பும் சத்தத்தை கேட்டுக்கொள்ளலாம். (ம)



# கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை படமாவதில் நம்பிக்கை இல்லை

## கம்பீர் தெரிவித்தார்

கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து திரைப்படங்களைத் தயாரிப்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கம்பீர்.

இந்திய அணியின் தலைவரான டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து 'எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்டோறி' என்ற தலைப்பில் இந்த மாதம் 30 ஆம் திகதி திரைப்படம் வெளியாகவுள்ளது. கம்பீருக்கும் டோனிக்கும் இடையில் நீண்டகாலமாக கருத்து முரண்பாடுகள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் கம்பீர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதனால் அவர் டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுத்துள்ள படத்துக்கு தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவே கருதப்படுகிறது.

நாட்டுக்காக தமது உயிரைத் தியாகம் செய்தவர்கள் ஏராளமானோர் உள்ளனர். அவர்களைப் பற்றியல்லாமல் ஓர் கிரிக்கெட் வீரரை தேசிய நாயகனாக சித்திரித்து எடுக்கப்படும் படங்களில் எனக்கு நம்பிக்கையில்லை என கம்பீர் மேலும் தெரிவித்தார். (ம)

# வல்வை அரையிறுதிக்குத் தகுதி



வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது வல்வை விளையாட்டுக் கழகம். வளர்மதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில், வல்வை விளையாட்டுக் கழகமும் நெல்லியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வல்வைஅணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மட்டும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கபிலன் 27 ஓட்டங்களைப் பெற்றார். 62 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெல்லியடி நண்பர்கள் அணி 31 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டதையடுத்து 30 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது வல்வை அணி. (ம-108)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 24.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் (திங்கள், புதன்) பிரிவுகள் 21.09.2016
காலை 10.00-12.00 மாலை 04.30-06.00
அனைவரும் 24.09.2016 அன்று ஆரம்ப வகுப்பிற்கு சமூகமளிக்கமுடியும்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

வீடு வளவு விற்பனைக்கு
சுன்னாகம் நூலகத்துக்கு அருகில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 790 3642 (இரவு 7.00 மணிக்குப் பின்)
இல. 7, விபுலானந்த வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
(J 4655)
(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.